# விவேக போதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸ ௵ ஆவணி ௴ : 1915-௵ செப்டம்பர் ௴ } பகுதி 3

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 59. ஒருமொழிச் சிறப்பு

ஒருமொழியே பலமொழிக்கு மிடங் கொடுக்கு மந்த வொருமொழியே மலமொழிக்கு மென மொழிந்த, குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங் கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய், சருமொழியின் குணக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக் கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங் கண்டனைமேற், றருமொழியின் குணக்கில்லை யுன்னை விட்டு நீங்காத் தற்பரமா யானந்தப் பொற்பொது வாய் நில்லே.

(நினைவொன்று—2)

### 60. ஸர்வஸாரம்

நில்லாத வாக்கைநிலை யன்றெனவே கண்டாய் நேயவருண் மெய்யன்றோ நிலயமதா நிற்கக், கல்லாதே யேன்படித்தாய் கற்றதெல்லா மூடங் கற்றதெல்லா முடமென்றே கண்டனையு மன்று, சொல்லாலே பயனில்லை சொன்முடிவைத் தானே தொடர்ந்துபிடி மர்க்கடம்போற் றொட்டதுபற் றுநில், லெல்லாரு மறிந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ யிராப்பகலில் லாவிடமே யெமக்கிடமென் றறிந்தே.

(நினைவொன்று—3)

### 61. உண்மை நோக்கு

பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போற்
பார்த்தனையே முடிவினின்று பாரேதுதா னின்ற,
தாராலு மறியாத சத்தன்றோ வதுவா
யங்கிருநீ யெங்கிருந்து மதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியை நாட்டாதே
யோராதே யொன்றையுநீ முன்னிலைவை யாதே
யுள்ளபடி முடியுமெலா முள்ளபடி காணே

(நினைவொன்று—5)

### 62. நிருத்த பரவசம்

உள்ளபடி யென்னவுநீ மன்றொன்றைத் தொடர்ந்தி
டுளங்கருத வேண்டாநிட் களங்கமதியாகிக் (ட்
கள்ளமனத் துறவைவிட்டெல் லாந்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பக லற்ற
வெள்ளவெளிக் கடன்முழ்கி யின்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வா யின்றி
கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக் (க்
கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே.

(நினைவொன்று—6)

### 63. நிருத்தர் தன்மை

அடிமுடியு நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டா
லத்துவித வானந்த சித்தமுண்டா நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்
கோலமெல்லா நன்றாகுங் குறைவுநிறை வரவே (த
விடியுமுத யம்போல வருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதும் தந்தாலுங் கவியாப்
பாலருட னுன்மத்தர் பிசாசர்குணம் வருமே.

(நினைவொன்று—7)

### 64. வைராக்ய நிலை

பொன்னை மாதரைப் பூமியை நாடிடே
னென்னை நாடிய வென்னுயிர் நாதனே
யுன்னை நாடுவ னுன்னருட் வெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே.

(பொன்னைமாதரை—1)

### 65. உணர்வு நிலை

ஆவி யேயுனை யானறி வாய்நின்ற
சேவி யேன்களச் சிந்தை திறைகொடேன்
பாவி யேனுள பான்மையைக் கண்டுநீ
கூவி யாளென்னை யாட்கொண்ட கோலமே.

(பொன்னைமாதரை—3)

# ராக்ஷஸஸஹு புரட்டாசிமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தெலு | இங் | தமிழ் | வார | ராக்ஷஸஸஹு புரட்டாசிமீ — சாலிசகம் 1837, கலியப்தம் 5016 — பசலி 1325, கொல்லம்-1091 — 1915ஸஹு செப்டம்பர்மீ அக்டோபர்மீ |
|---|---|---|---|---|---|
| சு | 7 | 17 | 1 | வெ | சவ 42-42, மூல 19-28, ஆயு 4-28. ஸௌ 52-31, பா 15-41, திவி 15-28, ரா 11-42, அக 30-18, கன்னிசுக் 41-21 சூன்யதிதி ஷஷ்டிதிதி ஸமார்கம். |
| பு | 8 | 18 | 2 | சனி | தச 37-22, பூரா 15-47, சோ 50-0, தை 10-2, ரா 4-29, சித் 2 புத 5-30, கன் சுக் தசமிதிதி மழை 3-க்குள். |
| | 9 | 19 | 3 | ஞா | ஏகா 32-37, உத் 12-39, அதி 43-31, வணி 4-59, திவி 22-14, சர்வஏகா பரிவர்த்தனைகா சிர உப விஷ்ணு சிர. |
| ரசு | 10 | 20 | 4 | திங் | துவா 28-32, திரு 10-12, சுக 37-40, பா 28-32, திவி 19-56, உத் 3 ரவி 15-3, உத் 3 சுக் 31-11, சிரவணதுவா வாமண ஜ பிரதோ சிரவணதீபம். |
| செ | 11 | 21 | 5 | செ | திர 25-34, அவி 8-37, திரு 32-37, தை 25-34, திவி 26-28, அக 30-12, புன 3 செ 7-30, திரயோதிதி. |
| புகு | 12 | 22 | 6 | புத | சது 23-37, சத 8-6, சூல 28-27, வணி 28-37. திவி 24-16, துவாபுத 53-20, கும்பவக்ர குரு 37-47, சதுர்தெசி திதி அனந்த வி உமாம விரு நிரமணி. |
| ரசு | 13 | 23 | 7 | வியா | ◯ பௌ 22-52, பூரட் 8-44, சண் 25-14, பவ 22-52, ரா 3-20, உத் 4 ரவி 39-45, உத் 4 சுக் 3-30, பூர்ணிமாதிதி. |
| | 14 | 24 | 8 | வெ | பிர 23-25. உத்தி 10-38, விர் 23-0, கௌ 23-25, ரா 12-4, பாத் பகு பிரதமாதிதி இஷ்டி மானயாரம். |
| சு | 15 | 25 | 9 | சனி | துதி 25-14, ரே 13-46, துரு 21-46, கர 25-14, தியா 0-0, அக 30-6, துலாய 50-38, அஸ் 1 சுக் 54-40, துதியாதிதி. |
| | 16 | 26 | 10 | ஞா | திரு 28-13, அசு 18-2, வியா 21-24, பத் 28-13, திவி 7-19, ரா 14-7, சங் சது ம 13-க்குள். |
| ரசெ | 17 | 27 | 11 | திங் | சது 32-43, பர 23-19, ஹர் 21-50, பவ 0-28, ரா 26-18, அஸ் 1 ரவி 3-35, கடகசெ 19-7, மகாபரணி செஜ கௌரீ. |
| சு | 18 | 28 | 12 | செ | பஞ் 36-54, ✳ கார் 29-18, வஜ் 22-50, கௌ 4-48, தியா 0-0, அஸ் 2 சுக் 33-50, கார் உப. |
| | 19 | 29 | 13 | புத | சஷ் 41-57, ரோ 35-41, ஸித் 24-9, கர 9-25, திவி 13-33, ரா 23-9. அ 30-0. |
| ரபு | 20 | 30 | 14 | வியா | சப் 46-54, மிரு 41-59, விய 25-31, பத் 14-25, தியா 0-0, அஸ் 2 ரவி 26-59, புதவக்ரம் 10-38, விய சிரா வியதிபாத |
| சு | 21 | 1 | 15 | வெ | அஷ் 51-33, திரு 47-58, வரி 26-39, பா 19-13, திவி 5-5. அஸ் 3 சுக் 7-15, மத்யாஷ்ட காளாஷ்டமி. [மானயம். |
| பு | 22 | 2 | 16 | சனி | நவ 55-23, புன 53-15, பரி 27-17, தை 23-28, திவி 20-36, பச்சாதஸ்தபுத 10-38, அவிதவாநவமி கரிநாள். |
| ரசெ புசு] | 23 | 3 | 17 | ஞா | தச 58-10, பூச 57-31, சிவ 27-11, வணி 26-26, திவி 14-40, அக 29-59, அஸ் 3 ரவி 50-7, பூச 1 செ 30-45, கன்னிவக்ரபுத 49-39, அஸ் 4 சுக் 46-20. [சௌஙியம். |
| | 24 | 4 | 18 | திங் | ஏகா 59-50, ஆயி 60-0, ஸித் 26-15. பவ 29-0, ரா 1-12, ஸ்மா ஏகா மழையினால் சிலவிடத்தில் |
| | 25 | 5 | 19 | செ | துவா 60-0, ஆயி 0-35, சா 24-34, கௌ 29-55, ரா 1-40, வை ஏகா சன்யாசி மானயம். |
| சு | 26 | 6 | 20 | புத | துவா 0-3, திர 59-6, மக 2-25, சுப 21-26, தை 0-3, திவி 22-37, சித் 1 சுக் 30-43, மகர்த்திர யோதசி பிரதோ கலியுகாதி. [சித் 1 வக்புத 27-47, மாசி சங்கிர மான சைவ கேதா. |
| ரபு | 27 | 7 | 21 | வியா | சது 56-58, பூர 3-1, சுப் 17-33, பத் 28-3, திவி 20-51, அக 29-53, அஸ் 4 ரவி 12-39, |
| | 28 | 8 | 22 | வெ | ● அமா 53-42, உத்தி 2-29, பிரா 12-45, சது 25-20, திவி 22-56, சர்வ பிதுரு அமா. |
| செசு | 29 | 9 | 23 | சனி | பிர 49-28, அஸ் 0-55, சித் 57-33, மா 7-8, கிம் 21-35, திவி 20-6, ஆச்வின சுத் பூச 2 செ 42-23, சித் 2 சுக் 9-50, இஷ்டி நவராத்திரி தௌஹித் வாஜீ சீரா வை சிரா. |
| ர | 30 | 10 | 24 | ஞா | துதி 44-35, சுவா 55-17, வை 0-48, விஷ் 53-1, பா 17-1, திவி 11-1, சித் 1 ரவி 35-11, சங் துரி. |
| புசு | 1 | 11 | 25 | திங் | திரு 39-12, விசா 51-6, பிரி 46-36, தை 11-53, திவி 8-25, அக 29-45, அஸ் 4 வக்புத 46-54, துலாசுக் 60-0. |
| | 2 | 12 | 26 | செ | சது 33-25, அனு 47-33, ஆயு 38-57, வணி 6-18, திவி 0-55, சது விரு மழை 5-க்குள். |
| ர | 3 | 13 | 27 | புத | பஞ் 27-28, கேட் 43-26, சௌ 31-12, பா 27-28, திவி 0-35, சித் 2 ரவி 56-31, பஞ்சமிதிதி உபாங்க லலி கௌரீவ்ர. |
| சு | 4 | 14 | 28 | வியா | சஷ் 21-34, மூல 39-24, சோ 23-29, தை 21-34, திவி 2-6, திவி 18-50, சித் 4 சுக் 39-40, திதித்வயம் சஷ் உப சப் விரு சரஸ்வதி ஆவா. [திதி சப் நவா கரிநாள். |
| ச | 5 | 15 | 29 | வெ | சப் 15-54, பூரா 35-41, அதி 19-56, வணி 15-54, திவி 1-15, ரா 24-55, அக 29-40, புன 1 சனி 59-10, அஷ்டமி |
| செபு | 6 | 16 | 30 | சனி | அஷ் 10-37, உத்தி 32-23, சுக 8-46, பவ 10-37, ரா 12-25, பூச 3- செ 56-0, பிராகுதயபுத 10-38, அஸ் 3 வக்புத 40-0, கன் சு நவமிதிதி மகாநவமி சங்கிரசரஸ்வதி பூஜா ம. |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | செ சனி |
| | 1கன் சுக் 6 கும் து பு | | கே |
| ராகு | 11 ச செ 17 க பு 25 தச | | சு |
| | | | ரவி பு |

# விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸ௵ : ஆவணிமீ [பகுதி. 3


## மோக்ஷ ஸோபாநம்

### THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

2. கர்மகதி

முன் எடுத்துக்காட்டப்பட்ட விசித்ரங்களையுடைய கர்மா, பலிக்கும் வகை இன்னது என்பதை எடுத்து விளக்கப்புகுவோம். ஒரு கர்மா நடந்தேறியதும் செய்தவன்மனதிலுண்டாகும் பதிவுகளில் ஒருவிதப் பதிவுக்குத்தான் பிற்காலத்தில் ஸுகதுக்க ரூபமாகப் பலிக்கும் ஆற்றலுண்டு. இப்பதிவுக்கே பொதுவில் கர்மா என்ற பெயரும் உண்டு. இதுதான் கர்மா என்னும் பதத்தின் மூன்றாவதான பொருள் என்று முன்னமே குறிக்கப்பட்டுள்ளது. இது பலித்து வரும் தன்மையைப் பின்வரும் ஸூத்ரத்தால் நன்றாகக் குறிக்கலாம்.—

மக்கள்செய் ஒவ்வோரு வினையுமன்சேய்மையில்
தக்கசீர்ப் பயனைத் தெரியவும் தருமே·

இ-வை-அ

இக்கருத்தை மிகச் சுருக்கமாக 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' 'நன்மை விதைத்தால் நன்மை விளையும். தீமை விதைத்தால் தீமை விளையும்' என்ற பழமொழிகள் அடக்கியுள்ளன. இனி இந்த ஸூத்ரத்தில் அடங்கியுள்ள பொருள் சிறப்புக்களையெல்லாம் பின் வருமாறு விவரித்துக் கர்மகதியின் நுட்பத்தை விளக்கலாம்

மக்கள்.—நன்மை தீமை என்ற பகுத்தறிவும், தொழில் நடத்துங்கால் நான் என்ற கர்த்ருத்வ பாவனையுமுள்ள ப்ராணிகளைத்தான் குறிக்கும். மற்றைய ப்ராணிகள் வாழ்க்கைகளும், அனுபவங்களும் முன் மனுஷ்ய ஜன்ம கர்மானுபவங்களையொழிய புதுக்கர்மாக்களை செய்ய இடமே கொடாதவைகள். ஆகவே இக்கர்மகதி மானிடர் தேவர் முதலிய தம் முணர்வுடைய ப்ராணிகளை நோக்கித்தான்.

. செய்—நல்ல மனத்தெளிவுடன் விழிப்பு (அல்லது கனவு) முதலிய ஸாதாரண நிலைகளில் செய்வதாகிய (செயல்கள்).

ஒவ்வொரு வினையும் — 81 பாகுபாடுகளையும், பொதுச் சிறப்புத் தன்மைகளையும், முக்ய அவாந்தர வேற்றுமைகளையும் தாங்கியுள்ள ஒவ்வொரு கர்மாவும்.

மன்சேய்மையில்.—பெரும்பாலும் நாளடைவில்: அதாவது இப்பொழுது செய்யும் வினைகள் மரணத்திற்குப் பின்னர் பலிக்கும்; முன் ஜன்மத்தில் செய்தவைகள் இப்பொழுது பலிக்கும் என்பதாம். இதுபற்றியே விதைப்பு விளைவு உவமை இவ்விஷயத்தில் எடுத்தாளப் படுகிறது. ஆதலால், இப்பொழுது செய்யும் செய்கைகளுக்கும், அவைகள் முடிவில் ஏற்படும் ஸுகதுக்கங்களுக்கும் நேரான காரிய காரண ஸம்பந்தம் இல்லவே இல்லை. இதனால் தான் இவ்வுலகில் பெரும்பாலும் நல்லோர் திண்டாடுவதும், தீயோர் தேறியிருப்பதும் என்ற மாறுபாடு ஏற்படுகிறது. நல்லோர் பூர்வ ஜன்மத்தில் செய்துள்ள கொடிய செயல்களை அனுபவித்து சீக்ரம் தொலைத்துவிடுவர், மேல் இவை தொடாவண்ணம் அவர் முயல்வதால் மேன்மை பின்னர் வரும் அவர்களுக்கு. தீயோ

ருக்கோ முன்செய்த நல்வினைப்பயனால் இப்பொழுது ஸுகம் வர, அதில் மூழ்கிப் பெரும் பாபம் செய்து, மேல் துக்கமே நிலைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை விடாது கைக்கொண்டு அவர் அதோகதியைப் பின்னர் அடைவர் என்பதற்கு ஸந்தேஹமில்லை. மரணத்திற்குப்பின் ஏற்படும் அனுபவங்களுள் ஸ்வர்க்க நரக அனுபவங்களும் அடக்கம். இந்த பாகம் நமது ஞாபகத்தைவிட்டு நழுவுங்கால்தான் நல்லோர் படுந்துயரத்தைக்கண்டு பரபரப்பும், தீயோர் வாழ்வைக்கண்டு படபடப்பும் வரும். ஸீதா தேவி கதிதான் என்ன! இருந்தவரையில் வனவாஸம், ராவணன் பீடை, கணவன் ஸந்தேஹம், பூப்ரவேசம். உலகில் ஸுகம் எது அவளுக்கு? தர்மபுத்திராதிகள் கதியாவது வேறு? துர்யோதனாதியர்கள் அடைந்த ஸுகங்கூட அவர்களுக்கில்லையே! ஆனதுபற்றி கர்மகதியைக் கவனியாது இவை போன்ற உலக ஸம்பவங்களைப் பார்க்குங்கால் இவ்வுலகம் காலம் எல்லாம் நல்லவர்களுக்குத் தகுந்தவையல்ல என்று தோற்றி நமது நல்வழி முயற்சி குன்றும்படியாகி விடும். எமாந்தால் கெட்ட வழி நடத்தலும் உண்டாகி நாம் அதோகதியடைய வேண்டியதுதான். இதைத் தடுப்பதற்கு இந்த சேய்மையில் என்பதன் ஸாரம் ஞாபகத்திலிருக்கவேண்டும்.

இதனுடன் பெரும்பாலும் என்பதைச் சேர்க்குங்கால் சிறுபான்மை சீக்கிரம் கர்மாக்கள் பலிக்கலாம் என்பது த்வனிக்கும். அப்படிப்பட்ட கர்மாக்கள்தான், அவிஹிதா நிஷித்த உபேக்ஷித, அத்புத்கட கர்மாக்கள்: இவைகள் உடனேயாவது ஏற்பட்ட தேஹம் நீங்கும் முன்னராவது பலித்துவிடலாம்.

தக்க பயன்.—தகுந்தபயன்: ஒவ்வொரு கர்மாவுக்கும் தனித்தனி வெவ்வேறு பயனுண்டு என்பது இதனால் விளங்கும். பொதுவாக ஒரு கர்மபலன் மற்றொரு கர்மாவின் பலனைத்தாக்கி மாற்றவோ, மாய்க்கவோ மாட்டாது. ஸ்ரீமத் ராமாயணத்தில் ஹனுமார், முதல் முதல் ராவணனைக் காணும்படி நேர்ந்த காலத்தில் 'ஏ! ராவணா! நீ முன்னர் செய்துள்ள பகவத் பக்தியெல்லாம் இப்பொழுது பயன்படாது. நீ செய்துள்ள பிறர் பெண்டிரைக் கவருதல் என்னும் பாபத்திற்குப் பலன் தனிதான். இது பலிக்குங் காலம் அணுகுகிறது. உன் பகவத் பக்தியின் பலன் தனி, அது இப்பொழுது வரும் ஆபத்தைத் தடுக்காது. ஆதலால் பெருங்குற்றம் செய்துவிட்டு முன் சிறப்பைக் கருதி இறுமாந்திராதே' என்று கூறி, தக்க தனிப்பயன் விஷய கர்மகதி ரஹஸ்யத்தை நன்கு வெளியிட்டார்.

மன், என்ற பதத்தை இத்தொடருடன் சேர்த்தால், பெரும்பாலும் தனிப் பயன் தரும் என்றதாகும். இதனால் சிறுபான்மையில் தனிப்பயன் தராமலும் இருக்கலாம் என்று த்வனிக்கும்: அதாவது சில ஸந்தர்ப்பங்களில் ஒரு கர்மபலன் வேறொரு கர்மபலனைத்தாக்கி தனிப்பலனைத் தாராமல் போய்விடலாம் என்றதாகும். வேதத்தில் 'நல்ல கர்மாக்களில் முயன்று செய்து, கெட்ட கர்மப்பதிவுகளை அழித்து விடலாம். எதிரிடையாக தொழிற்பட முடியாது' என்று ப்ராயச்சித்த விஷய வாக்கியம் உள்ளது. இதன்படி இப்பொழுது செய்யப்படும் ப்ராயச்சித்தங்கள் என்ற ஒருவகை ஸத்கர்மாக்கள் அவைகளுடன் ஸம்பந்தப்பட்டுள்ள கெட்ட கர்மப்பதிவுகளை அழித்துவிடும் என்பது வெளியாகிறது. ஆனால், இவைகள்கூட எப்பொழுதும் இப்படிப் பலிக்கும் என்பதல்ல; பின் நடக்கப்போவதான பாபத்தொழிலின் பதிவுகளையும் (முன்னரே தெரிந்தால் அவைகளைத்தடுத்துவிடவேண்டியது) தெரியாத பாபப் பதிவுகளையும், பச்சாத்தாபமின்றிச் செய்

தால் தெரிந்த பாபப்பதிவுகளையும் ப்ராயச்சித்தங்கள் நீக்கா. ஆகவே, ப்ராயச்சித்தமென்பது ஏற்பட்ட பாபம் தெரிந்ததும் பின்னர் நடக்கவேண்டிய, பச்சாத்தாபத்தை முன்னிட்ட ஸத்கர்மா என்றாகிறது." இப்படிப்பட்ட ஸத்கர்மா தனிப்பயன் தராது, முன்னுள்ள பாபப் பயனைத் தாக்கி அழித்துவிடும்.

சீர்பயன்.—நன்றாகப் பொருத்தமுடைய பயன்; உடல், உரை, உள்ளம், இவைகளால் ஏற்பட்டு, முக்ய அவாந்தர வேற்றுமையோடு, அத்யுத்கடம், பலம் ஸாமாந்யம் என்ற பிரிவுடைய கர்மாக்கள் அவ்வவ் வழியே ஸுகதுக்க பலன்களை ஒழுங்காயும், இசைந்ததாயும் தரும் என்பதுதான். தேஹபாபம் தேஹதுக்கத்தையும், வாக்புண்யம், வாக்ஸுகத்தை, மானஸீக கர்மா ஸ்வப்நபலத்தையும், முக்ப புண்யகர்மா பெரிய ஸுகத்தை, அதனுடன் சேர்ந்துள்ள அவாந்தர பாபகர்மா, இடையில் சிறிய துக்கத்தையும், அத்யுத்கடம், உடனே பலத்தையும், பலமான பாபம் நரகபலத்தையும், ஸாமான்ய புண்யகர்மா, நர ஜன்மத்தையும் கொடுக்கும்.

· தெரியவும் தருமே:—வெளிப்படையாகத் தரும், அதாவது ஸுகதுக்கரூபமாக. ஸத்கர்மா ஸுகத்தையும், துஷ்கர்மா துக்கத்தையும் எப்பொழுதும் தரும். இதுதான் ஒழுங்கு. இதில் உள்ள உம்மையால் விளங்கா நுட்ப பலன் ஒவ்வொரு கர்மாவுக்கும் உண்டென்பதும், மன் என்பதை இதனுடன் பொருத்துகையில் சிறுபான்மையில் நுட்ப பலன்மாத்திரமாகவும் இருக்கலாம் என்றும் தோற்றும். இந்த நுட்ப பலனுக்குத்தான் வாஸனை என்று பெயர். இது ஒவ்வொரு கர்மா நிகழ்ந்ததும் மனதில் அதே கர்மாவை மறுபடி செய்யவேண்டும் என்று ஏற்படும் எண்ணவேகம். இது ஒரேகர்மாவை அடிக்கடி செய்பச் செய்ய தடித்துவரும் நுட்பப் பதிவு. இதற்கும் வெளிப்படையாகப் பலிக்கும் கர்மப்பதிவுக்கும் உள்ள வேற்றுமை ஒற்றுமைகளை மேல் விஸ்தரிக்கப்போகும் கர்மவாஸனைநுட்பத்தின்கீழ் எடுத்தாராய்வோம். ப்ராயச்சித்தம், உபேக்ஷித கர்மாக்கள். இவைகளுக்கு இந்த வாஸனைப்பதிவு பலம் அதிகம், அவிஹிதா நிஷத்தங்களுக்கு கர்மப் பதிவு பலம் அதிகம், மற்றைய கர்ம பேதங்களுக்கு இருவிதப் பதிவுகளும் ஸமமாக உண்டு.

இம்மாதிரி கர்மகதியின்படி பலிக்கும் கர்மப்பதிவுகளுக்கே கர்மா என்ற பெயர் சில விடங்களில் நமது சாஸ்திரங்களில் இடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பலிக்கும் மனப்பதிவுகளான கர்மா மூன்றுவிதம்.

ஸஞ்சிதகர்மா.—இப்பொழுதிருக்கும் ஜன்மாவுக்கு முன்னர் எடுத்த மனுஷ்ய ஜன்மாக்களில் செய்ததால் ஏற்பட்டுள்ள கர்மப்பதிவுகளுள் இடையிலேற்பட்ட பலவகை ஜந்துக்கள் ஜன்மாக்களில் அனுபவித்துத் தீர்த்துவிட்ட முக்ய பாபகர்மாக்களும், முக்ய அவாந்தரபுண்ய கர்மாக்களும் போக பாக்கியுள்ள கர்மப்பதிவு மூட்டைக்கே ஸஞ்சித கர்மா என்று பெயர். இவை இனிமேல் பலிக்கக்கூடியவைகள் எதிர் கர்மாக்களால் தாக்கப்படாமலிருந்தால். பதஞ்ஜலிபகவான் இதைக் கர்மா என்று பெயரிட்டழைக்கிறார். இவை குதிரிலிருக்கிற விதை நெல் போன்றவை. இவைகள் இரண்டுவிதம், துக்கமாகப் பரிணமிக்கக்கூடியவை, ஸுகமாக மாறக்கூடியவை, ஆகிய கெட்ட நல்ல ஸஞ்சிதங்கள் என்று. இவைகளுள் தகுந்த ப்ராயச்சித்தங்கள் வழியாக கெட்டவைகளை அழித்து மனது நல்லவைகளாலேயே நிறைந்திருக்கும்படி செய்துவிடலாம். நல்ல ஸஞ்சிதங்களும் ஞானத்தால் ஜன்ம ஸுகதுக்கந்தரும் தன்மையை இழந்தாவது அல்லது உருவின்றியே அழிந்தாவது போய்விடும், நெருப்பால் விதைகள் முளைக்கும் திறனை இழந்தாவது, சாம்பலாகவா

வது போய்விடுவதுபோல.' இந்த ஸஞ்சிதங்களை உள்ளபடி தாக்காது விட்டு விட்டால், மேல் பலித்து, வாவா ஸஞ்சிதமூட்டை அதிகப்பட்டுக் கொண்டேதான் வரும், கர்ம கதியை விட்டு விலக முடியாமலே போய் விடும்.

2. ப்ராரப்தகர்மா.—முன்னற்கூறிய ஸஞ்சித மூட்டையில் இந்த ஜன்மத்தில் பலிக்கும் தன்மை வாய்ந்துள்ளவைகளுக்கு ப்ராரப்தம் என்று பெயர். இவைகள் பலன் கொடுக்கத் தொடங்கிவிட்டபடியால் இப்பெயர் பொருத்தமுடையதே. பதஞ்ஜலி பகவான் இவைகளுக்கு விபாகம் என்று பெயரிட்டுள்ளார். ஸாதாரணமாக கர்மாஎன்ற பதம் விதி என்ற பொருளில் உபயோகப்படுங்கால் ப்ராரப்தகர்மா என்பதன் குறுக்கமே; இவைகள் முளைவிட்டிருக்கும் விதைகளைப் போன்றவை. இப்பிராரப்த கர்மாக்கள் மூன்று விதமாகப் பலிக்கும் தன்மை உடையவை. (i) தேஹம்:—உடல், ஜாதி, தொழில்,வர்ணம் இவைகள் ப்ராரப்தகர்மாவில் பலன் தர முனைந்துள்ள முக்யகர்மாவால் ஏற்படுவது. (ii).ஆயுஸ்:— தேஹம் விழும்முன் விட்டுத் தீர்க்கவேண்டிய மூச்சுக்கணக்கு, நாள் கணக்கேயல்ல, இது முக்ய அவாந்தர ப்ராரப்தங்களின் பொது வேகத்தால் ஏற்படுவது. கடைசி மூச்சுமுடியும் தருணம் எப்படிப்பட்டதாயினும் மரணம் நேர்ந்து விடும், இந்தக் கிளைப்பலனுல். (iii) ஸுகதுக்க ஒழுங்கு.—அந்த ஜன்மத்தில் அனுபவிக்கவேண்டிய ஸுகதுக்க ஒழுங்குகள் அவாந்தர ப்ராரப்த கர்ம ஒழுங்கால் ஏற்படுவது. இப்படிவரும் ஸுகதுக்கங்கள் விஷயத்தில் ஏற்படும் ஸந்தர்ப்பங்களில் தாமாகச் செய்துகொண்டவைகள் என்று தோற்றுவன தவிர,மற்றவைகள் எல்லாம் ப்ராரப்தத்தின் முதல்பாகத்தைச் சேர்ந்தவை. இவைகளால்கூட கெட்டவாஸனைகள் ஏற்படலாகாதென்று சாஸ்திரங்கள் ப்ராயச்சித்தங்கள் விதிக்கின்றன: உதாரணமாக கெட்ட ஸ்வப்நங்கள், பொய் அபவாதங்கள் முதலியன. மூன்றுவகையாகப் பலிக்கும் ப்ராரப்தங்களுள் முதல் இரண்டும் வந்த ப்ராரப்தம்; இவைகளைத் தடுக்கமுடியாது. மூன்றுவதற்கு வரும் ப்ராரப்தம் என்று பெயர். இது ப்ராயச்சித்தத்தாலும் ஞானத்தாலும் சற்று மாற்றமுடியும். முக்தர்கள், ஞானத்தாலும் ஸத்கர்மாக்கள் செய்யும் இயற்கை வழியாலும், தமக்கே இயற்கையாகிவிட்ட பலமான புண்ணிய கர்மாக்களின் வேகத்தாலும் வரும் ப்ராரப்தம் தம்மைத் தாக்காதுநிற்கும்படி செய்வர்.

ஆயுஸ்விஷயமான நுட்பம் இங்கு கவனிக்கத்தக்கது. இது மூச்சுக் கணக்கேயொழிய, நாள்கணக்கே யல்ல. ஆயுள் நாள் கணக்கை சாஸ்திரீய வ்யவஹாரங்களால் மூச்சுக்களைக் குறைத்து விட்டு பெருக்கிக் கொள்ளலாம்: அப்படியின்றிக் கண்டபடி ஸுகித்து உண்டு வ்யவஹரித்து மூச்சை அதிகமாக விட்டுக் குறுக்கியும் கொள்ளலாம். யோகிகள் தமது பழக்க விசேஷத்தால் ஆயுளை வெகுநாள் நீட்டிக்கொள்வர். ஒருவித சாஸ்திர முயற்சியுமின்றி,கண்டபடி வ்யவஹாரத்திலும் பாயாது மனதை அதிகமாகக் குழப்பிக்கொள்ளாது ஸுகஜீவனம் செய்யும் ஸந்மார்கி ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு 21,600 மூச்சு ஏற்படும். இக்கணக்கின்படி பூர்ணமான புருஷாயுஸ் 100 வருஷந்தான்: இந்த ஒரு நாள் மூச்சுக்கணக்குக் குறைந்தால் அல்பாயுளும் நீளும், அதிகப்பட்டால் பூர்ணயுளும் குறையும். இப்படித்தான் தசரதர் 60,000வருஷமும் ராமர் ஸுமார் 10,000 வருஷமும், உயிருடனிருந்தது. பெரியோர்கள் செய்யும் ஆசிர்வாதம் மூச்சுக்கணக்கை அதிகப்படுத்தவேமாட்டாது: நமது வ்யவஹாரங்களை சாஸ்திரப்படி ஒழுங்குபடுத்த

வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை நன்றாக நமக்குண்டாக்கி ஆயுள் நாள்களை அதிகப்படுத்தும் பெரும் ஆற்றலையுடையது. ஆகவே, யோகிகள் ஞானிகள் தவிர, மற்றையோர்கள் எல்லாம் ப்ராரப்தவேகத்தில்பட்டுத் திண்டாட வேண்டியதுதான்.

(3). ஆகாமிகர்மா.—இப்பொழுதிருக்கும் மானிடஜன்மாவில் இத்தருணமாகிய நிகழ்காலம் முதல், தேஹம் விழும்வரையில் மனதில் ஏற்படக்கூடிய கர்மப்பதிவுகளுக்கு ஆகாமிகர்மா என்று பெயர். இது ஏற்பட்டதும் ஸஞ்சித மூட்டையுடன் சேரும்: அத்யுத்கடமாகயிருந்தால் உடனே ப்ராரப்தமாகும். இது வயலில் அறுப்பதற்கு முன்னுள்ள கதிர்நெல் போன்றது. இந்தக் கர்மப்பதிவுகள் உண்டாக இனி நடைபெறவேண்டிய கர்மாக்கள் வேறு; ப்ராரப்தமான தடுக்க முடியாதவைகளையல்ல. இவைகள் நமது ஸ்வதந்திரம் சேர்ந்தே நடைபெறவேண்டியவை. ஆனால் இது முன் கர்மவாஸனைகளால் தூண்டப்பட்டும் மேல்வரும் ப்ராரப்தத்தின் முன் வேகமான தருணாதி ஸந்தர்ப்ப விசேஷங்களால் மொத்துண்டு இருக்கலாம். இதனால் இந்தக் கர்மாக்களை தடுக்கவே முடியாதென்பதல்ல. முன் பழக்கவேகத்தைப் பொருத்தது முயற்சிக்க வேண்டியதன் வலிமை. ஸரிவர முயலாது துர்வாஸனைக்கு இணங்கிவிட்டால், அதன் வலிமை அதிகமாக அது நம்மை முழுத்திவிடவேபார்க்கும். ஆகாமிகர்மா ஸரிவர ஏற்படுவதற்கு நமது வாஸனைகளின் சுத்தமே காரணமாகும்; கர்மாவேயல்ல. இந்த வாஸனையைப் பதஞ்ஜலிபகவான் ஆசயம் என்று பெயரிட்டழைக்கிறார். இந்த வாஸனைகளை ஸரிவர உணர்ந்து நல்லவைகளின் வழிச் சென்று கெட்டவைகளைத்தடுத்து நீக்கமுயலுவதற்கே சாஸ்திரங்கள் உதவியாக ஏற்பட்டுள்ளன: ஒன்றாவது ப்ராரப்தகர்மாவைத் தடுப்பதற்கல்ல. இப்படி சாஸ்திரப்படி ஒழுகி துர்வாஸனைகள் கர்மாவில் ஏவுங்கால் அதன்வழி ஈடுபட்டு நிற்காதிருந்தால் நமது ஸ்வதந்த்ரம் வரவர விஸ்தாரப்பட்டு பலப்படும். சாஸ்திர ஸஹாயமின்றி ஆகாமி ஸஞ்சித மூட்டையை கனமாகாதிருக்கும்படிச் செய்யமுடியாது: மனம் சுத்தப்படாது, கர்மகதியைவிட்டு விலகிவர முடியவே முடியாது. முக்தனுக்கோ ஆகாமி அணுகவேமாட்டாது. அவன் எப்பொழுதும் இயற்கையாகவே நல்வழியிலேயே இருப்பானாதலாலும், நற்காரியங்களில் ஸம்பந்தப்படாது நடத்தும் திறன் அவனுக்கிருத்தலாலும், இவைகள் பாறையில் விழுந்த நீர்போல அவனிடம் தங்காது சிதறிப்போய்விடும். முக்தன் எவ்வளவு நல்ல வழியிலிருந்தாலும் அது நம்போலியர் சிலருக்கு கஷ்டமாகவும் இருக்கலாம். ஸாதாரண மனதில் அத்தொழிலால் உண்டாகக்கூடிய பாப புண்யப் பதிவுகள் ஞானிக்கு ஏற்படாது சிதறுங்கால் முறையே அவனை அப்பொழுது கண்டு ஸந்தோஷித்து ஈடுபடுபவரிடமும், அவன் தொழிலைக்கண்டு இகழும் தடுக்குக்காரரிடமும்போய் அமரும் என்று சாஸ்திரங்கள் சாதுர்யமாகக் கூறும். ஆகவே ஞானி ஒழிந்த மற்றையோர்களுக்கு ஆகாமிப் பதிவு ஏற்படாமல் போகமாட்டாது. சாஸ்திரீய ஸத்கர்மாக்களோ இப்படி ஏற்படும் பதிவுகளில் சிலவற்றைக்கொண்டு முன்னுள்ள பாபஸஞ்சிதங்களை அழிக்கும்; சில நல்ல ஸஞ்சிதப்பதிவுகளை அதிகப்படுத்தும்; சில நல்ல கர்மப்பதிவுகள் ஏற்படாதவண்ணம் ஸத்கர்மானுஷ்டானம் செய்யத் தூண்டும்: இப்படியாக மேல் ஏற்படக்கூடிய ஆகாமி பலம் சாஸ்திரங்களால் குறைந்துகொண்டே வரும். ஆகவே சாஸ்திரமே இந்த மூன்றுவகை கர்மப்பதிவுகளையும் சென்று தாக்கி நம்மை கர்மகதியிலிருந்து விடுவிக்கும் திறனுடையது: இதை உள்ளபடி நிறைவேற்ற வேறு எவ்வழியிலும் முடியாது. இந்தக் கர்மப்பதிவுகள் நுட்பத்தையும் கர்மகதியின் எல்லையையும் பின் எடுத்து விவரிப்போம்.

# குங்கிலியக் கலய நாயனார் சரித்திரம்

## KUNGILIVA KALAYA NAYANAR
(A Life Sketch)

மாபாரதப் போரில் துரியோதனாதியரை வென்று பூமி பாரந்தீர்ப்பான் அவர்களைக் கொன்று, குவலயத்தார் கொழிக்க, தருமபுத்திராதியர்கள் சிம்மாசனத்தைப் பெற்றும், தம் உற்றார் பெற்றோர் மடிந்தார்களே, இனி யாருக்காக அரசாள்வதென்ற எண்ணம் மேலிட்டுத் துக்க மாற்றாது, ராஜபத்தைத் துறந்து இமயமலைச் சாரலை நோக்கிச் சென்ற பாதர்களாண்ட பூமி இப்பாரத கண்டம். இக்கண்டத்தில் ஜனிக்க என்ன புண்ணியம் நாம் புரிந்திருக்கவேண்டும் !

மார்க்கண்டேயர் காலனைக் கண்டு நடுங்கி, அவன் பாசக் கயிற்றுக்கிணங்காது சிவனை அணைத்து தன்னைக் கைவிட, பரமசிவன் லிங்கத்தினின்றும் வெடித்து, யமனுடன் போர் புரிந்து வென்று அவனிடமிருந்து விடுவிக்கப்பட்டு, என்றும் பதினாறு வயதாக வரம் பெற்ற விடமாகிய இச்சோழமண்டலத்தின்கண் திருக்கடவூரிலே, ஓர் அந்தணர் குலத்திலே சிவபக்தியிற் சிறந்த, கலயர் என்பவர் ஒருவர் இருந்தார். அழகிய குணங்களுடையவர் யாவரும் அந்தணராவர். இங்ஙனம் பிராமண குலத்தைக் குறித்தோம். அவர் அவ்வூரிலுள்ள வீரட்டானமென்னுங் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற சுயம்புவாகிய பரமசிவனுக்கு பிரதிதினமும் தவறாது குங்கிலியத் தூபம் ஏற்றி ஆராதனம் செய்துவந்தார். பக்தர்களைச் சோதிக்கும் திருவுளம்பெற்ற பரமசிவன், இவருக்கும் வறுமை யென்ற செல்வத்தைக் கொடுத்தார். பரமசிவன் திருவருளினால் வறுமை யோங்க, பக்தி சற்றேனுங் குன்றாத, குங்கிலியத் தூபம் நடத்திவந்தனர். ஆலவிருட்சப்போல் இவரைச் சுற்றி இருந்தவர்கள் அநேகர். இவரன்னம் புசிக்கும் கிளைகளனேகம். இவ்வறுமை வந்துற்ற காலையும் தருமம் செவ்வனே நடத்தினர். அவருக்கு ஒரு உத்தமி, பத்தினியாக வாய்த்திருந்தனள். அவ்வறுமை வந்த காலத்தும் தாம் பசியால் வருந்துகிறோமேயென்று நினையாது, தமது சுற்றத்தாருண்டிலரே யென்று அல்லும் பகலும் வருந்துபவளாயினள் அவ்வருந்ததி. இங்ஙனம் சிலநாள் கழிய, தம்மடிமைகளை விற்றும் நிலங்கள் மற்ற சொத்துக்கள் யாவற்றையும் பரித்யாகஞ் செய்து செலவழித்தும் அவ்வறுமைக் கிடுகொடாராயினர். அக்காலத்தும் திருப்பணியை விடாது நிறைவேற்றி வந்தனர். ஒரு நாள் அவர் தாரம், அரிசி முதலியன வாங்குவதற்கு ஒன்றும் இல்லாமையால் இரண்டு தினங்களாகப் பட்டினியிருந்து வாடுகின்ற புதல்வரையும் சுற்றத்தாரையும் நோக்கி மனமுருகித் தம் தாலியைக்கணவர் கையிலே, தன் கை கீழாகவும் அவர் கை மேலாகவும் கொடுத்து, அதன் விற்று முதலுக்கு, அன்று கழிக்க நெல் வாங்கிவரச் சொல்லி வேண்டினள். அத்தாலியின் பொறுமானம் அன்று கழிக்கத்தான் காணுமோ வென்றால், தங்கள் பசி மட்டுமல்ல, தம்மையடைந்தவர் பசியுமாற்றப் போதுமானது. அன்றையன்றுக் காலங் கழிப்பதே பெரும்பாடாயிருந்தபொழுது மறுநாட் கவலை தோன்றவில்லை அவ்வம்மைக்கென்றும் கொள்ளலாம்.

குங்கிலியக்கலய நாயனார், அம்மாதுரைகொண்டு, தாலியை வைத்துக்கொண்டு, நெற்கொள்ளப்போனார். செல்லுங்கால், வழியிலேயொரு வர்த்தகன் குங்கிலியப் பொதிகொண்டு தமக்கு எதிரே வரக்கண்டு, அகம் புளகி, "ஸ்வாமிக்குத் தூபமிடும்படி குங்கிலியத்தைப் பெற்றுக்கொண்டேன், இதிலும் பார்க்க மேலான பேறு உண்டோ?" என்று குதித்து, பரவசமாகி தம்முடைய கரத்திலிருந்த தாலியைக் கொடுத்து அந்தக் குங்கிலியப் பொதியை வாங்கிக்கொண்டு 'கண்டேம்' 'கண்டேம்' என கூத்தாடிக்கொண்டு, ஆலயம் சென்று அங்குள்ளண்டாரத்திலே அக்குங்கிலியத்தை வைத்துவிட்டு சுவாமியைத் துதித்தார். இது இங்ஙனமிருக்க, தமதடியார்க் கூழியனாயிருக்கச் சித்தமாயிருக்கிற பரமசிவன், சிவனடியாராகிய நாயனார் மனைவியார், குழந்தைகள் முதலியவர்கள் அன்றிரவு இவர் வரவை யெதிர்பார்த்துப் பசியினால் வருந்திக் களைத்துறங்குமிடம் தேடி வந்து, நெற்குவியலையும், பொற்குவியலையும், அரிசிக்குவியலையும், பிறவனங்களும் நிரம்பச் செய்து, அவ்வுத்தமிக்கு சொப்பனத்தில் தோன்றி அனுக்கிரகம் செய்தருளினர்.

பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான்,

"அஞ்ஞயாச் சிந்தயந்தோமாம், யேஜனா: பர்யு பாஸ்யதே; தேஹாந்நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்"

என்று உபந்யஸித்திருக்கிறார். அவ்வண்ணம் பரமசிவனருளிய செல்வத்தை, அப்பதிவிரதா சிரோன்மணி, திடுக்கென விழித்தெழுந்து கண்ணுற்று, அதுவும் அக்கிருபாநிதி அருளேயெனத் தெளிந்து தன் கணவருக்குத் திருவமுது பாகம் செய்ய யத்தனித்தனள். ஆலயத்தில் சிவபக்தியிலேயே லயமாகி, அமிர்தமுண்டு பசியாறிக்கிடக்கிற நாயனாரிடம் பகவான் தோன்றி, "அப்பா, நீ இல்லஞ்சென்று, பாலன்னம் உண்டு பசியாறுவாயாக" என்று அனுக்கிரஹித்து மறைந்தார்.

இதைக்கேட்ட நாயனார் பகவதாஞ்ஞையை மறுத்தற்கு அஞ்சி, அவ்வண்ணலை கைகூப்பி நெஞ்சாரத் துதித்து, வாயாரப்புகழ்ந்து, சிவன் செயலாலே யாதும் வருமெனத்தேறேன், ஆனுமவன் தரும் நினைவெல்லாம் அகற்றிலேன், என்றபடி உள்ளந்தெளிந்து, இல்லம்புக்கார். மனையெங்கும் மலையாய்க் குவிந்திருந்த செல்வம் நோக்கி, அதுவும் ஈசனருளென்று உன்னி, தன் மனையாளை நோக்கி, 'பெண்ணே, வறுமையால் வருந்தின நமக்கு இந்நிதிக் குவியல்கள் யாது சம்பவித்தன' வென்று வினவ, அவள் சிவலோகநாதனருளினால் வந்ததென்றாள். அடியேனை யாட்கொள்ள இதுதான் முறைபோ என்று பலகாலுமங்க பாசுபதனை வணங்கி, அய்யன் திருவிளையாட்டுக் கீடோவென்று வாயெல்லாம் புலம்புவாராயினர். சிவனடியார்களுக்கு தூபதீபாராதனைசெய்து அமுது அளிப்பாராயினர். செல்வமும், கடலளவு பெருகி, அதிதியாராதனை தினம் நடந்து வந்தது. ஈசனடியிலேயே தம் மனத்தை இருத்தி அவ்விருவரும் காலங்கழிக்கையில் திருப்பனந்தாளென்னும் திருப்பதியில் வீற்றிருக்கின்ற சிவலிங்கம் சாய்ந்திருந்தமையால் அதை நிமிரப்பண்ணிக் கும்பிடுதற்கு இராஜாவானவர் யானைகளெல்லாவற்றையும் கயிறுகட்டி யிழுக்கச்செய்தும், மற்றும் தம் யுக்திக்குத்தோன்றினவாறு இழுக்கப் பிரயத்தனப் பட்டும், நிமிராதது பற்றி அன்னம் துயிலின்றி இரவுபகலாய்த் துக்கித்துசோர்வுற்றிருக்கும் நிலையைக்கண்டு மனம் பொறுக்காது, அடியேனும் இளைப்பைத்தருகின்ற இத்திருப்பணியைச் செய்யவேண்டுமென்று சிவலிங்கத்தின் மேல் கட்டியிருந்த கயிற்றைத் தன் கழுத்தால் கட்டிக்கொண்டு இழுக்கலாயினர். அக்கயிறு பலத்தினால் சிவலிங்கம் நிமிரவில்லை. ஸஹாதேவன் கண்ணபிரானுடைய சுபரூபத்தை பக்தி யென்னும் கயிற்றினால் கட்டி, அசையவொட்டாமல் செய்ததுபோல், நாயனாரும் பக்திக்கயிற்றினால் சிவலிங்கத்தை நிமிரச்செய்து, தேக முயற்சியா லாகாததுமனோ முயற்சியால் சாத்தியமென்பதை விளக்கினார். இவ்வதிசயம் கண்டு இராஜாவும் சைன்னியங்களும் அளவற்ற ஆனந்தத்தை அடைந்து குங்கிலியக்கலய நாயனாரை நமஸ்கரித்து சுவாமிக்கு வேண்டிய திருப்பணிகளை நிறைவேற்றிக்கொண்டு தம் நகர் போய்ச் சேர்ந்தார்.

குங்கிலியக் கலயநாயனார், சில நாள் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அங்கேயிருந்து, தமது பிறப்பிடமாகிய திருக்கடவூருக்குச் சென்று, சுவாமி திருப்பணிசெய்து வருநாளையில், சைவசமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு நாயனார் இவர்கள் அவ்வூருக்கு விஜயஞ்செய்ய, அவர்களை எதிர்கொண்டழைத்து வந்து, அமுது செய்வித்து அவர்களுடைய அனுக்கிரஹமும், பரமசிவத்தின் திருவருளும்பெற்று சிலகாலம் இப்பூலோகத்தில் தங்கி, பின்னர் காலகதியடைந்தார்.

டி. எஸ். வேங்கடராமய்யர்.

---

பெண் கல்வியின் அபிவிருத்திக்காக பரோடா மஹாராணியின்நன்கொடை.—ஹிந்துஸ்திரீகளின் கல்வியபிவிருத்தியைக் கருதி பரோடா மஹாராணி, கல்வித்திறமைபெற்ற ஹிந்து ஸ்திரீகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்காக 1,50,000 ரூபாயைத் தண்டாக எடுத்து வைத்திருக்கிறார். இந்த நிதியை மேற்பார்வை பார்ப்பதற்காக மஹாராஜ குமாரர் ஜெயசிங்ராவ் கைக்கோவார், ஆனரெபில் ஸர் விட்டல்தாஸ் தாமோதர் தாக்கர்ஸே, ஸ்ரீமந்த் ஸம்பத்ராவ் கைக்கோவாட், ஆகிய இவர்கள் அடங்கிய டிரஸ்டிபோர்டு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. 29 ஸ்காலர் ஷிப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் 5 ரூபாய்வீதம் 16பேர்களுக்கும் 10 ரூபாய்வீதம் 8 பேர்களுக்கும் 25 ரூபாய் வீதம் 4பேர்களுக்கும் 35-ரூபாய் வீதம் ஒருவருக்கும் கொடுக்கப்படும். ஸ்காலர்ஷிப்புகள் ஹிந்து ஸ்திரீகளுக்கே யானாலும், இந்தியாவில் படிக்கிறவர்களுக்காகவா அல்லது அன்னிய தேசத்திற் படிக்கிறவர்களுக்காகவா என்று சொல்லப்படவில்லை.

## ஸ்விட்ஜர்லண்டு தேசத்து ஏரிகள்

## THE LAKES OF SWITZERLAND

ஐரோப்பா கண்டத்திலிருக்கும் ஸ்விட்ஜர்லெண்டு தேசத்து மனோரம்யங்களில், முக்யமாக இருப்பவை அதன் ஏரிகளே. அவற்றில் விசேஷமானவை ஜெனீவா (Geneva), கான்ஸ்டென்ஸ் (Constance), ஜ்யூரீச் (Zurich), ல்யூஸர்ன் (Lucerne). இவைகள் பள்ளத்தாக்குகளிலமைக்கப்பட்டு, நீல நிறமான ஆகாயத்தையும் மண்ணிறமான பூமியையும் பிரதிபிம்பிக்கின்றன. ஸ்வீடன், ரஷ்யா தேசங்களிலுள்ள ஏரிகள் இந்த ஏரிகளைப்பார்க்கிலும் பெரிதானபோதிலும் இவைகளைப்போல அவ்வளவு அழகாய் இல்லை. அநேக அடி ஆழமிருப்பதால், இந்த ஏரிகள் சுத்த நீலநிறமுடையதாகக் காணப்படுகின்றன. இவைகளைச் சுற்றியிருக்கும் ஊர்த்தோற்றமோ, நிகரற்ற சௌந்தர்யம் பொருந்தியிருக்கின்றது.

ஜெனீவா என்பது, ஸ்விட்ஜர்லாண்டிற்கும் ஐரோப்பாவின் தென்பாகத்திலிருக்கும் ஸேவாய் (Savoy) என்னும் மாகாணத்திற்கும் நடுவில் ஒரு இளம்பிறை வடிவில் அமர்ந்திருக்கின்றது. ஜ்யூரா (The Jura) குன்றுகளிலிருந்து ஆல்ப்ஸ் (The Alps) மலைத்தொடர்ச்சியைப் பிரிக்கும் பெரிய பள்ளத்தாக்கின் விசேஷ பாகத்தை அடைத்துக் கொள்ளுகிறது. இவ்வேரியின் நீளம் 45 மைல், அகலம் 1-10 மைல் வரையில் சில இடங்களில் அகன்றும் சில இடங்களில் குறுகியு மிருக்கிறது. மிகவும் ஆழமான இடத்தில் இந்த ஏரி 1000-அடி இருக்கின்றது. முதன் முதலில் 1824-ம் வருஷத்தில் புகைக் கப்பல்கள் இவ்வேரியின் மீது பிரயாணஞ்செய்யத் தொடங்கின. லார்ட் பைரன் (Lord Byron) என்னும் ஆங்கிலகவி இந்த ஏரியை, "தெளிய, சாந்த முள்ள ஜெனீவா," என்று கூறியிருக்கின்றார். "சைல்ட் ஹாரோல்ட்," (Childe Harold) என்னும் விதானத்தில், இந்த ஏரியை மிகவும் அழகாக வருணிக்கின்றார்.

கான்ஸ்டென்ஸ் என்னும் ஏரி 42 மைல் நீளமும் சுமார் 9-மைல் அகலமு முள்ளது. ரைன் (Rhine) என்னும் நதியானது இந்த ஏரியின் கீழ்க்கோடியிற் பாய்ந்து மேற்கு பாகத்தில் வெளிச்செல்கின்றது. இவ்வேரியின் கரைகளும் கொஞ்ச தூரத்திலுள்ள சுற்றுப் பிரதேசங்களும் அதிக செழிப்பாய் இருக்கின்றன. அநேக அழகுள்ள காட்சிகளை இங்கே காணலாம்.

ஜ்யூரிச் என்பது, ஜெனீவாவைப்போல ஓர் இளம்பிறை வடிவில் இருக்கின்றது. இதன் நீளம் 23 மைல்; அகலம் 2 மைல். இந்த ஏரி ராப்பர்ஸ்சர்ல் (Rapperschuryl) என்னுமிடத்துள்ள ஜலசந்தியால், மேல் கீழ் என்று இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜலசந்தியின் குறுக்களவு அரை மைல். இதற்குக் குறுக்கே ஒரு மரப்பாலம் போடப்பட்டிருக்கின்றது. இது, ஐரோப்பாவிலிருக்கும் ஏரிகளுள் மிகவும் நேர்த்தியாய் இருப்பதோடு நன்றாய் பயிரிடப்படுகிற பூமியாலும் ஜன நெருக்கமுள்ள தேசத்தாலும் சூழப்பட்டிருக்கின்றது. அநேக விநோதக் காட்சிகள் காணப்படுகின்றன.

ல்யூஸர்ன் ஏரியானது, மலைகளுக்குமேல் இரண்டு சிகரங்களுக்கு நடுவில் அமர்ந்திருக்கிறது. இச்சிகரங்களில் ஒன்று, பிரயாணிகளுக்கு தங்குமிடமாக உபயோகப்படுகின்றத. மலைகளிலிருந்து பார்க்கும்பொழுது இந்த ஏரி அதி நேர்த்தியாகக் காணப்படுகின்றது. நீளம் 25 மைல். அகலம் அரைமைல் முதல், இரண்டு மைல் வரையில் வித்தியாசப்படுகிறது. இயற்கை ஊர்த்தோற்றமானது ஒப்பற்ற அழகுள்ளதாயிருக்கின்றது.

இயற்கையழகில் விருப்பமுள்ள ஐரோப்பியர், வெயிற்காலங்களில் இவ்வேரிகளின் கரைகளிலுள்ள ஊர்களில் தங்குவர். அவர்கள் பணச்செலவைக் கவனியாது, மலை இருப்புப்பாதைகளினுதவியால் இவ்வேரிகளுக்குச் சென்று சிலர் தம் தேகாரோக்யத்திற்காகவும், மற்றுஞ்சிலர், அவ்வேரிகளின் பொலிவைக்காணவும் வருகின்றனர். இவ்விதமாக வருபவர்களில் சிலர் அமெரிக்கா முதலிய தேசங்களினின்றும் வருகிறார்களென்றால் ஸ்விட்ஜர்லண்டிலுள்ள ஏரிகளின் சிறப்பு நன்கு விளங்கும்.

இவ்வேரிகள் மனதை உத்ஸாகப்படுத்துவதன்றியும், அத்தேசத்தாருக்கு நன்மையும் புரிகின்றன. மலையில் உற்பத்தியாகும் ஆறுகளினின்றும், ஏரிகளினின்று வெளிச்செல்லும்

(இதன் தொடர்ச்சி [illegible]7-ம்பக்கம் பார்க்க)

# தேவாலயம்

## THE TEMPLE

எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள எண்டத்து நான்கு கோடி ஜீவராசிகளையும் படைத்துக் காத்து ரட்சிக்கும் கருணாநிதியின் இருக்கையையே தேவனது ஆலயம் என்று கூறுவர்.

"அரிதரிது மானிடராதலரிது"

என்று ஔவையார் சொல்லியதின் கருத்தென்னை? தெருவிலும் கானகங்களிலும் அலையும் மிருகங்களைப்போலவே நாமும் பசிதாகங்களினால் வருந்துகின்றோம். அப்படியானால் அவைகளைவிட நாம் எவ்விதத்தில் உயர்ந்தவர் எனின், நம்மிடத்துள்ள பகுத்தறியுந் தன்மையினாலேயே. அருமையான பகுத்தறிவுடைய மானிடஜன்ம மெடுத்து விட்டோமென்ற பெருமிதத்தால் அழிவுறும் பேதைகளைப் போல் அழிவுறாமல் அவ்வறிவினால் கடவுளின் திருவருளைப் பரிபூரணமாய்ப் பெற முயல்வதே மாந்தர்க்கழகாம்.

நமக்கு ஒருவன் சமயத்தில் ஒரு சிறு உதவியைச் செய்தானேயானால், அவனை நாம் உயிருள்ள மட்டும் புகழ்கிறோம். மற்று மொருவன் நம்மைப் பெரிய விபத்தினின்றும் காப்பாற்றினால் அவனை அநுதினமும் கொண்டாடுகின்றோம்.

நமக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இல்லமும் ஈந்து, நம்மைச் சதா சூழ்ந்திருக்கும் தீமையை நீக்கி நம் நன்மையை நாடும் பரமபுருஷன் யார்? அவர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பதென்னை?

நமக்கு இத்துணை உதவியைச் செய்யும் வள்ளல் ஆதியந்த மில்லாக் கிருபாநிதியே. அவர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பதெல்லாம்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா
முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் அருளொழுகும் திருக்குறளை மனத்துட் கொண்டு முழுமுதற் கடவுளை மனத்தில் இருத்தி இறுதியில் அவர் பொற்பாதம் சேர்வதேயாம்.

ஆம்! தேவனை வழிபடல் வேண்டுவது அவசியந்தான். ஆனால் அன்னவரை வணங்குவதற்கு ஆலயம் அவசியமோ! மனத்தினாலேயே அவனை ஸ்மரித்தல் போதாதோ? என்று கேட்கப் புகுந்தால், தேவாதி தேவனை மனதினால் தியானிக்கலாம் என்று சொல்வது எளிது.

"சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்று நம் நாயனார் கூறுவதுபோல் மானஸீக பூஜை செய்வது எல்லாருக்கு மியலாது. அது மிக்க ஞானிகளுக்கே கூடும். அவ்வித ஞானிகளும் நமக்கு ஆலயவழிபாடே சிறந்ததென்று ஸ்மிருதி மூலமாய் வெளியிட்டிருக்கின்றனர்.

மாடத்துக்குப் போகவேண்டுமானால் படிகளின் மூலியமாய் ஏறுவது சுலபமேயன்றி திடீரென்று தாவுவது அரிதாகும். அதேபோல் வேதங்களினாலும் அறியமுடியாத அம்பலவாணனை அறிவதற்குப் படிகள் போன்றன இவ்வாலயங்கள். நாதனில்லை யென்னும் நாஸ்திக வாதிகளின் படுகுழியில் விழாமல் தாங்கிக் கொள்ளும் ஊன்றுகோல் போன்றன இக்கோயில்கள். ஸதா இவ்வுலக வியாபாரங்களில் உழன்று அவதிப்படும் பாமரர்களாகிய நாம் பரமனைப் பக்தி செய்யாமல் பாவத்தைத் தேடிக் கொள்ளுகிறோம். நாம் தெருவழியாகப் போகும்பொழுது ஸர்வேசுவர

(86-ம் பக்கத் தொடர்ச்சி)

நதிகளினின்றும் உண்டாக்கப்படும் மின்சார சக்தியினால் அவ்வூர்களிலுள்ள யந்த்ரசாலைகள் வேலைசெய்கின்றன. நிலக்கரியின் உதவியில்லாமலே ஸ்விஸ் ஜாதியார் தங்கள் தொழிற்சாலைகளை நடத்துவது நாம் கவனிக்கத்தக்கது.

இவ்விதம் இயற்கையழகைத், தொன்றுதொட்டு அநுபவிக்கும் ஸ்விஸ் ஜாதியார், ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் சிறியவற்றி லொன்றாக இருந்தபோதிலும் வேற்றரசா ஆளுகைக்கு டேல் என்பவன் காலந்தொடங்கிக் கீழ்ப்பட்டவரல்லர். பகைவரால் எளிதிலடைய முடியாத மலைச்சிகரங்களில், ஏரிகளை அரணாக்கொண்டு, வாழ்ந்துவரும் ஜன்ம வீரரை அடக்கியாளுதல் அரிதன்றோ?

வீ. ராமச்சந்திர ராவ்.

ரது இருக்கையைக் கண்டவுடன் நம் மனதில் ஒருவித உணர்ச்சி உண்டாகின்றது அவ்வுணர்ச்சியானது நம் மனதைப் பரமனிடத்தில் செலுத்துகின்றது. ஆலயத்தினுட் சென்றால் கவலையை மறந்து பக்த சிரோமணிகளின் ஆனந்த பரவசத்தில் மயக்குண்டு நம்மை அறியாமலே பரமனைப் பணிகின்றோம். இக்காரணம்பற்றி யன்றோ, நம்முன்னோர்கள் நதிக்கரைகளிலும், நாடு நகரங்களின் மத்தியிலும், காடுகளிலும் ஆலயங்களைக் கட்டிவைத்திருக்கின்றனர். காட்டில் வழிதப்பிப் போனவர்கள் இராக்காலங்களிலாயினும் பகற்காலங்களிலாயினும் ஆலயத்தைக் கண்டால் தங்கள் துக்கத்தை மறந்து என்றுங் கண்டிராத ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர்.

கிறிஸ்தவர்களும் மகம்மதியர்களும், மற்ற மதஸ்தர்களும் தொழுவதற்கென்று பிரத்யேகமாக, மாதா கோவில்களும் மஜீதுகளும் அமைக்கின்றது எதற்காக?

பரிசுத்தமான ஓரிடத்திற்குச் சென்றால் நம் மனது பரிசுத்தமாகவிருக்கும் அவ்விடத்தில் தொழும் நம் ஸகோதரர்களைக் கண்ணுறுவதினால் நாமும் பரமனைப் பிரார்த்திக்க வேண்டுமென்னும் பேரவா நம்மைத் தூண்டும். மேலும் ஜகந்நாதனை ஆராதிப்பதற்கும், நம் மனதைக் கலைக்கும் சப்தமில்லாமல் உற்சாகத்தைக் கொடுத்து எம்பெருமானைத் தியானிப்பதற்கும் தகுந்த இடம் ஆலயமே.

சிலர் விக்கிரஹ ஆராதனை செய்தல் கூடாதென்று சொல்லுகிறார்களே அதற்கென் செய்வது? நாம் விக்கிரஹத்தை ஆராதனை செய்வது அச்சிலையை அன்று, அதனிடத்தில் அந்தர்யாமியாயுள்ள பரம்பொருளின் சக்தியையே. மோக்ஷ சாம்பிராஜ்யத்தை அடைவதற்கு பக்தி என்பதே தக்க எணி. அவ்வேணியைச் சாத்துமிடம் தேவாலயமும் விக்கிரஹமும் என்று அறிதல் வேண்டும். ஆலய வழிபாட்டின் மேம்பாட்டை "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்னும் ஔவையின் வாக்கினின்று நன்கறியலாம்.

தேவாலயங்கள் நித்யத்துவம் வாய்ந்த நாதனைப்பணிவதற்கு மாத்திரமேயன்றி வேறு விதங்களிலும் பயன்படுகின்றன. காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம், திருப்பதி, சிதம்பரம், சீயாழி முதலிய திவ்ய க்ஷேத்ரங்களுக்கு பற்பல திக்குகளினின்றும் பாகவத சிரோமணிகளும், அடியவர்களும் ஆண்டவனைச் சேவிக்க ஆவலுடன் கூடுகிறார்கள். அன்னவர்களின் சாதுர்ய சம்பாஷணையிலிருந்து மதசம்பந்தமாகவும், உலகவிஷயமாகவும் அநேக அரியவிஷயங்களை அறியலாம்.

"காணாததெல்லாம் காணலாம் காஞ்சீபுரத்தில்" என்று பழமொழியும் வழங்குகின்றது. பொதுவாக ஆலயங்கள், கண்ணைக்கவரும் காட்சிகள் நிறைந்த இடங்களிலும் அழகிய ஆற்றோரங்களிலும், இருக்கின்றன. இக்காட்சியைக் காண்பதினால் நம் மனதில் ஒருவித ஆனந்தம் உண்டாகின்றது. அவ்வானந்தம் நமக்கு வலிமையைத் தருகின்றது. வலிமை நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கக்கூடியது. யாத்திரைகளினால் அறிவு விசாலமாகின்றது. மேலும்,

'மூர்த்திதலந்தீர்த்தம் முறையாகத்தொடங்கினர்க்கோ'
வார்த்தைசொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" [ர்

என்று நம் தாயுமானவர் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். இச்செய்யுளின் கருத்தையுற்றுநோக்கின் ஸ்தலயாத்திரைகளினால் உண்டாகும் நன்மை அமோகமென்பது கரதலாமலகம் போல் விளங்கும்.

அதாவது ஆலயங்களுக்குச் சென்றும், புண்ணியஸ்தலங்களை தரிசித்தும், எல்லாம் வல்ல இறைவனைப் பணிபவர்களுக்குத் தேவாதிதேவனே ஞானசம்பாஷணை அருளுகின்றானெனின் ஆலயத்தின் மேம்பாட்டைக் கூறவும் முடியுமோ? இதற்கு நந் தாயுமானவரின் சரித்திரமே ஏற்ற திருஷ்டாந்தம்.

மேலும் முற்காலத்தில் எல்லாக்கட்டிடங்களிலும் சிறந்ததும் பலமானதுமானவை கோவில்களே. இப்பொழுதும் திரிசிரபுரம் மலைக்கோட்டைக்குச் சென்றால் அங்குச் சுவர்களில் விசித்ரமான அக்ஷரங்களும், சித்திரங்களும் காணப்படுகின்றன. அவைகள் யாவை? முற்காலத்தில் அச்சு முதலியவைகள் இல்லாததினால் மன்னவர்களும் மற்றவர்களும் தங்கள் காலத்தில் நடந்த விசேஷ வர்த்தமானங்களைக் கல்லின்மேலும் கோவிற்சுவர்களின் மீதும் செதுக்கிவைத்த சிலாசாசனங்களே. இவைகளால் சிலாசாசன பரிசோதக உத்யோகஸ்தரின் வர்த்தமானங்களினின்று மறைந்து கிடக்கும் பல அரிய உண்மைகள் வெளியாகின்றன. இவைகளினால் நாம் அடையும் பயன்கள் அமோகமானவை.

தற்காலத்தில் பல இடங்களில் உன்னதமானதும் விசாலமானதுமாகிய பொதுக்கட்டடங்கள் கோவில்களே. பெரிய பட்டணங்களைச் சுற்றிப்பார்க்கும் அநேக அந்நியர்கள் ஆலயத்தைக் குறிப்பாகக்கொண்டு தங்கள் விடுதியை அடைகிறார்கள்.

மேலும் ஆலயங்களின் தர்மத்தினால் பல ஏழைகள் பிழைக்கின்றார்கள். மானிடர்களுக்குத் தர்மசிந்தையை புகட்டுவதற்கு ஆலயம் பிரதானமாயிருக்கின்றது. ஆலயங்கட்டுதல் சிறந்த தர்மமென்பது நம் சித்தாந்தமல்லவா?

மேலும் ஆலயங்கள். எல்லா நன்மைகட்கும் இன்றியமையாதனவாம்.

மேற்கூறியவற்றை யெல்லாம் கருத்துட்கொண்டன்றோ "கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம்" என்று நந்தமிழ் மூதாட்டியாரும் திருவாய்மலர்ந்திருக்கின்றனர். ஆலயமில்லா நகரம் ஆரண்யமே. கருணாகரனின் இருக்கை காடாயினும் அது மாடமாளிகை கூடகோபுரம் நிறைந்த நகரமேயாகும். ஆலய மில்லாவிடம், அமைச்சரில்லா அரசுபோலும், கவிஞரில்லா ஸபைபோலும், தாமரையில்லாத் தடாகம் போலும், மதியில்லா வானம்போலும், கண்ணில்லா வதனம்போலும், பதியில்லா பத்தினிபோலும், சீர்குலைந்து போகுமென்பதற்கு ஐயமென்?

புண்ணியத்தைக்கண்டது யார்? பாவத்தைக் கண்டது யார்? என்று நாத்தழும்பேற மனங் கூசாமற் சொல்லும் மானிடப்பதர்களுக்கு நாதனைப்பணிந்து நற்கதியடைய நற்புத்தி புகட்டுவதற்கு ஆலயங்கள் அவசியமென்பதை வற்புறுத்துவதற்கு ஏதுவானவை மேற்கூறியவைகளே யன்றோ?

"நாற்பயிறேயஞ்சன்னினுன் மறைநாட்டில்
விரவுதலொழிந்து தோன்றன் மிக்க
புண்ணியந்தானகும்"

என்னும் சான்றோர் வாக்கின்படி மலைகளிலும் கானகங்களிலுமிருக்கும் கள்ளர், மறவர், வேடர் முதலியவர்களைப்போல் பிறவாமல் யாவராலும்புண்ணிய பூமியென்று புகழப்படும் பரதகண்டத்தில் பிறந்த நாம் ஈசுவரனது பொற்பாதத்திற்கு பாத்திரப் பட்டவரென் பதிற்கையமுண்டோ? இவ்வளவு பாக்கியமும் பரமனருளால் பெற்ற நாம் வீணாய்க் கழித்த நாட்கள்போக எஞ்சிநிற்கும் நாட்களை நல்வழியில் கருத்தனருளால் கழிக்க முயலவேண்டும்.

நம் நாட்டின் இதிகாசபுராணங்களையும், அவதார புருஷர்களையும், பக்தர்களையும், இக்கோளத்திற்கப்பாலுள்ளவர்களும் பெரிதும் புகழ்கிறார்கள். அவ்விதமான பெரியோரின் பாலர்களாகிய நாமும் அவர்களைப்போலாக முயல்வது அவசியமன்றோ?

தேவாலயம் அனாவசியமென்று பிதற்றும் அறிவீனர்களை அகட்டி அவிவேகத்தை ஒட்டி ஆன்றோர்கள் ஸ்மிருதிமூலமாயும் அனுபவமூலமாயும் அருளியிருக்கும் ஆண்டவனை அறிவதற்கு ஏற்ற வழியாகிய ஆலயமென்னும் படியின் வழியால், பக்தி யென்னும் பாதத்துணை கொண்டு ஏறிச்சென்று மோக்ஷ மென்னும் அழிவில்லாப் பதத்தை அடைவோமாக.

"கண்ணுதலாலய நோக்குங் கண்களே கண்கள்
கறைக் கண்டன் கோயில் புகுங்கால்களே கால்கள்
பெண்ணெருபாகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே நன்னா
பரன் சரிதை கேட்க படுஞ் செவியே செவிகள்
அண்ணல் பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக் கேடிமை புகுமடிமையே யடிமை"

என்றபடி ஸர்ப்பாபரணரும், சங்காரரும், காமதகனருமாகிய எல்லாம்வல்ல முழு முதற் கடவுளின் பொற்றாள்களை வணங்கி இகபர ஸௌக்யங்களை யம்மங்கைபாக னருளாற் பெற்று இனிது வாழ்வோமாக. சுபம்

வி. சு. கந்தசுப்பிரமணியன்.

---

மதனப்பள்ளி க்ஷயரோக சுகவசதிச்சாலை.— மதனப்பள்ளியின் சீதோஷ்ணநிலை, நோயாளிகளுக்கு மிகுந்த அனுகூலத்தைச் செய்யக் கூடியது. அது பற்றி நோயாளிகளா யுள்ளவர்கள் அவ்வூரில் போய் வசிப்பதுண்டு. அதுவேயன்றி, அவ்வூரில் க்ஷயரோகிகள் வசிப்பதற்கு ஏற்றவிடமென்பது வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயமாதலால், அவ்வூருக்கு க்ஷயரோகிகள் விசேஷமாய்ப் போகிறார்கள். அவ்வூரிலுள்ள ஆற்காடு அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த பாதிரிமார்களும், அவ்வூரில் ஒரு ஆஸ்பத்திரி வைத்திருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரியையொட்டி ஆர்காட் அமெரிக்கன் மிஷன் பாதிரிமார்கள் சமீபத்தில் கட்டி முடித்த க்ஷயரோக சுகவசதிச்சாலைக் கட்டடத்தை லார்ட் பெண்ட்லண்ட் அவ்வூருக்குப் போயிருந்த போது திறந்துவைத்தார். அப்போது அவர் பாதிரிமார்கள் அவ்வூரில் செய்திருக்கும் தருமவேலைகளை மெச்சிப் பேசினர்.

# செவ்வாயென்னும் கிரகத்தில் பிராணிகள் வஸிக்கக்கூடுமா?

## THE HABITABILITY OF MARS

சூரியனைச்சுற்றியுள்ள மண்டலங்களிலெல்லாம், அங்காரகமண்டலத்தில் மட்டும் பிராணிகள் ஜீவிக்க, ஸாதனங்கள் அனேகமிருப்பதாகத் தெரியவருகிறது. கிரகசாஸ்திரத்தினால் இம்மண்டலத்தைப்பற்றி நாம் அறிந்தது யாது?

கண்ணாடியின்றிப் பார்த்தால், இம்மண்டலம், ஆகாசத்தில் சிவந்த நிறமுள்ளதாயும், தூரதிருஷ்டிக்கண்ணாடியினால் பார்க்கின், உடலில் இரண்டுவெள்ளைப்புள்ளிகளோடும், காணப்படுகின்றது. இப்புள்ளிகள், துருவமுனைகளென்று ஊகிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும், சாஸ்திர ந்யாயங்களால், இம்மண்டலத்திலுள்ள வாயுவும், பூமியிலுள்ளவாயுவும் ஒத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். பூமண்டலத்திலுள்ள வாயுவில் ஜலஸம்பந்தமான ஆவியுள்ளபடியால் செவ்வாயிலுள்ள வாயுவும் அப்படியேயிருக்கவேண்டும்.

ஆனால், ஆவி எங்கிருந்துண்டாகும்? ஸமுத்திரங்களிலிருந்தும், நதிகளிலிருந்துந்தான் உண்டாகலாம். ஆகையால், இம்மண்டலத்தில் சமுத்திரங்களும் நதிகளும் இருக்கவேண்டியதவசியம்.

மேலும் சூரிய வெப்பத்தினால் பூமியிலும் கடலிலுமிருந்து கண்ணுக்குத்தெரியாத அணுரூபமாக விடாது எழும்பும் நீராவி ஆகாசத்தில் உயர்ந்து, தடித்து, நுண்ணிய துளிகளாய்ச்சேர்ந்து மேகங்களாகிறதுபோல, இச்செவ்வாய் மண்டலத்திலேயும், நீராவிகள் நில்லாமல் ஏராளமாய் எழும்பும்போது சடிதியில் உண்டாகும் குளிர்ச்சியால், குளிர்ந்து மேகமாய் அமைந்த ஸ்திதியில் காற்றின் விசையினால் அடிக்கப்பட்டு, வெப்பமில்லாத விடங்களில் மழையாய்ப் பொழிவதனால், அவ்விடங்களை உஷ்ணமுள்ளதாய்ச் செய்கிறது.

அப்படிப் பெய்கிற மழை ஒருபாகம் ஓடைகளிலும் ஆறுகளிலும் சேர்ந்து பெருகி உத்தண்டமாய் ஓடிச் சமுத்திரத்தில்தான் போய்ச்சேரவேண்டும். மழைத்தண்ணீரின் மற்றைப் பங்கு எப்படி பூமிக்குள் இறங்கி அங்குள்ள சுனைகளில் கலந்து, சீவராசிகளுக்கும் தாவரங்களுக்கும் அனுகூலப்பட பூமியின் ஈரத்தைக் காத்துவருகிறதோ அப்படியே இம்மண்டலத்திலேயும் மழைத்தண்ணீர், ஜீவராசிகளுக்குப், புல், பூண்டு. மரங்கள் வளர்வதற்குந்தான் ஸாதனமாயிருத்தல் வேண்டும்.

இப்பூமியில் எப்படி பருவகாலங்களிருக்கின்றனவோ, அப்படியே செவ்வாயிலேயும் பருவகாலங்களுண்டு. மேலும் பூமியின் மணல்வெளிகளில் பிரசண்டமாருதம் எழும்பி, வானமும் பூமியுங் கலங்கவடித்து ஓரோர் சமயத்தில் பிரயாணக்கார வர்த்தகர்களுக்குச் சௌகரியமாகவும், மற்ற சமயத்தில் அவர்களுடன் செல்லும் சகலரையும் மூடிப்போடுஞ் சக்தியுள்ளதாகவுமிருப்பதுபோல, இம்மண்டலத்திலேயும் அப்படிப்பட்ட காற்று வீசவேண்டும். ஏனெனில், இக்காற்றில்லாவிடின் மேகங்கள் எப்படி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும்?

மேற்கூறிய பிரகாரம் பெருங் காற்றுகள் நாசஞ்செய்பவைகளாயிருந்தாலும், அவை ஆகாயத்தையும், தண்ணீரையும் புரட்டிச் சுத்திபண்ணி ஜீவராசிகளுக்கு அனுகூலமாக்குகின்றன.

ஆகையால் இவ்வளவு ஸாதனங்களும் ஆறுகளும், நதிகளும், எங்குமோடி நிலத்தைச் செழிக்கச்செய்பவும், உயர்ந்த மலைகளும் குன்றுகளும், சமநிலங்களும், பள்ளத்தாக்குகளும் மேகங்களும், சூரியவெளிச்சமும், ஆகாயமும், காற்றும் இவைகளெல்லாம் பயிர்கள் முதலியவை வளர்ந்து செழிக்கவும், ஜீவராசிகளை காப்பாற்றும்பொருட்டு மல்லாமல் மற்றைக் காரணங்களுக்காக இயற்கை தவறி இருத்தலும் கூடுமோ?

என். கஸ்தூரிரங்கன், பீ. ஏ.

---

**மிஸ்டர் P. ராமஸ்வாமி அய்யர்.**—மிஸ்டர் P. ராமஸ்வாமி அய்யர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த கல்வியிலாகாவில் பலவித உத்தியோகங்களை வகித்து சென்ற 32-வருஷகாலமாக சிறந்த வேலைகளைச் செய்து நல்ல பேர்வாங்கினவர். கல்வியிலாகா டைரெக்டரின் பர்ஸனல் அஸிஸ்டண்டாக வேலைபார்த்த இவர், கல்வி யிலாகா டிப்டிடைரெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறதைக் கேட் ந்தோஷப்படுகிறோம்

# மலைகள்

## MOUNTAINS

மலைகள் மிக உயரமாகவும் வலிமையுடையனவாயும், பார்ப்பதற்குப் பயங்கரமாயும், புற்பூண்டு, செடி கொடி, விருக்ஷங்களால் சூழப்பட்டு மிருக்கின்றன. வெகுதூரத்திலிருந்து பார்த்தால் பச்சை நிறமாகத் தோன்றும். சில மலைகள் மிருகங்கள் போலவும், சில ஊர்வன போலவும் நானாவிதமாகத் தோன்றும் அம்மலைகளினுச்சியிலிருந்து நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்தால் அநேகவிதகாட்சிகள் வெகு அழகாய்த் தோன்றுவதன்றி, ஆறுகளும், நதிகளும், குளங்களும், கோவில்களும், பூந்தோட்டங்களும், உயர்ந்தகட்டடங்களும், சிறியகிராமங்களும் நன்றாகத் தெரிகின்றன. தூரதிருஷ்டிக்கண்ணாடி கொண்டு, நாலாபக்கமும் பார்ப்போமானால் தேசநிலையை ஒரு குறிப்பாகக் கொள்ளலாம். மலையடிவாரத்தில் நின்று உயர் நோக்கிப் பார்த்தால் மிகவும் பயங்கரமாயும் கம்பீரமாயும் தோன்றும் பர்வதங்களைச் சுற்றிலும் அநேக உயர்ந்த பெரிய விருக்ஷங்கள் ஆகாயத்தை அளாவிநிற்கும். புதர்களும், நீருவிகளும், பயங்காமான குகைகளும், ஆங்காங்கு கண்ணுக்குத் தெரிகின்றன.

சிற்சில மலைகளின் அடிவாரங்களில் பெரிய பட்டணங்களும், கிராமங்களுமிருக்கின்றன. சிலவிடங்களில் மலைகளின் உச்சியில பெரிய கோயில்களும், சிறிய பட்டணங்களும், கோட்டைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. மலைகள் தொடர்ச்சியாக ஒன்றன்பின்னொன்றாக இருக்கிற இடங்களில் அநேகம் பள்ளத்தாக்குகளும், செழிப்பான கிராமங்களும், மதிலணைகளால் சூழப்பட்டிருக்கிற பல நகரங்களும், காடுகளும், நீர் வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன. சில மலைகள் அதிக நீளமாகவும், அகலமாகவுமிருப்பதன்றி, 20,000 அடிக்கு மேற்பட்டனவாயுமிருக்கின்றன. சிறுபான்மை சிறு பர்வதங்களாகவும், குன்றுகளாகவுமிருக்கின்றன.

மலைகளில் அநேகவிதங்கள் உண்டு. பெரிய மலைத்தொடர்கள், மலைப்பிரதேசங்கள், சாதாரண சிறு மலைகள், குன்றுகள், எரிமலைகள், முதலியன. சில இடங்களில் மண்மேடுகளே மலைகளாகத் தோன்றுகின்றன. எரிமலைகளும் பார்ப்பதற்கு ஸாதாரண மலைகளையே ஒத்திருக்கும். இம்மலைகள் பூமிக்குள்ளிருக்கும் உஷ்ணப்பொருள்களை வெளிக்கொண்டு வந்து பக்கத்திலுள்ள பட்டணங்களையும், கிராமங்களையும் நாசஞ்செய்கின்றன. எந்த தேசங்களில் எரிமலைகளிருக்கின்றனவோ, அந்த இடங்களில் பூகம்பங்கள் அடிக்கடி உண்டாகும். அதனால் அத்தேசத்தார்களுக்கு அதிக தொந்திரவுகள் ஏற்படுகின்றன. குன்றுகள் மலைகளைப் போலவே யிருக்கும். ஆனால் அவைகள் 2,000 அடிக்குக் குறைவாயிருக்கும். மண்மேடுகள் அல்லது மண்மலைகள் வனாந்திரங்களிலும், ஆற்றோரங்களிலுமிருக்கும். மலைகளிலெல்லாம் ஹிமயமலையே உயர்ந்தது.

மழை சிற்சில இடங்களில் பெய்தும், வேறு இடங்களில் வர்ஷிக்காமலிருப்பதற்கும் மலைகள் காரணமாம். ஏனெனில், அவை ஒரு பக்கமாகச் செல்லும் காற்றைத் தடுத்து மற்றொரு பக்கமாகத் திருப்புகின்றன. காடுகளடர்ந்த பர்வதங்களில் மேகங்கள் தாக்கப்பட்டவுடன் அங்கேயே மழை பெய்கிறது. உதாரணமாக மலையாள தேசத்தில் மலைகளிருக்கிறபடியால் அங்கே அதிக மழை பெய்கிறது. அம்மலைகள் அநேக பெரிய நதிகளுக்குப் பிறப்பிடமாயும் பெரிய ஊற்றுகளுக்கும், நீருவிகளுக்கும், ஏரிகளுக்கும், ஆதாரமாயுமிருக்கின்றன. மலைகள் பனிக்கட்டிகளுக்கு உறைவிடமாகின்றன. கோடை காலங்களில் அப்பனிக்கட்டிகள் உருகுவதால், அதிக உஷ்ணகாலங்களில் வேனிற்காலங்களைவிட சில ஆறுகளில் அதிக நீர் வருகிறது. ஆகவே வருஷமுழுதும் உலகத்திலுள்ள சில பாகங்கள் செழிப்புடன் விளங்குகின்றன. மழை மலைகளில் பெய்வதால், அவைகள் கொஞ்சம் கொஞ்சமாகக்கரைந்து, சிறு பொடிமணல்களாக மாறுகின்றன. இந்த மணல்களையும் சிறு கற்களையும் ஆறுகள் அடித்துக் கொண்டு வருகின்றதனால் சிறு கூழாங்கற்களும், சாதாரண கற்சிலைகளுமுண்டாகின்றன. இவ்விதமே உலோகப் பொடிகளும் ஆறுகளுடன்வருகின்றன. சில உலோகங்கள் தண்ணீரை சுத்தம் செய்யக் கூடியவையாதலால், எப்பொழுதும் ஆற்று நீர் பரிசுத்தமாகவும், தேகத்துக்கு ஆரோக்கியமாகவுமிருக்

கின்றது. ஆனதுபற்றியே முற்காலத்தில் ஆரியர்கள் செழிப்பான நதிதீரங்களில் குடியேறினார்கள். இக்காலத்தும், பிராமணர்கள் ஆற்றோரங்களில் வசிக்கிறார்கள்.

மலைச் சாரல்களில் புற்பூண்டுகளும், தேக்கு, சந்தனம், மூங்கில், வேங்கை முதலிய உபயோகமுள்ள பலவித விருக்ஷங்களும், கனிவர்க்கங்களும் இயற்கையிலேயே வளருகின்றன; தேயிலை, காப்பி முதலியவைகளை நம்மவர்கள் பயிரிட்டு வருகிறார்கள்; ஆடு மாடுகளும், யானை, சிங்கம் புலி, கரடி முதலிய காட்டு மிருகங்களும் ஜீவிக்கின்றன. மலைகளிலகப்படும் மூலிகைகள் சிறந்த மருந்துகளாக பயன்படுவதை யாவரும் அறிவர். மலைப் பிரதேசங்களிலிருப்பவர்கள் பலசாலிகளாயும் நீடித்தகாலம் வசிக்கிறவர்களாயும், வியாதியற்றும் இருக்கிறார்கள். தேககாத்திரத்தையும் மனோகம்பீரத்தையும் உடையவர்களாகிய அவர்களோடு வேற்று தேசத்தார் போர் புரிந்து ஜயிப்பது அரிது; மூலிகைக் காற்றையும், வேறு நற் காற்றையும் சுவாசிக்கிறபடியால், சுக ஜீவிகளாயிருக்கிறார்கள். ஆனதுபற்றியே வியாதிஸ்தர்களை மலையடிவாரங்களுக்குக் கொண்டு போகிறார்கள். மலைகள் கோடை காலத்திற்குத் தங்கு மிடமாயுமிருக்கின்றன. அனேகர் நீலகிரி, கொடைக்கானல், ஸிம்லா முதலிய சமசீதோஷ்ண இடங்களுக்குக் கோடையில் செல்லுகிறார்கள். மற்றும்மலைகளிலுள்ள குகைகளும், அடர்ந்தகாடுகளும், தபசிகளுக்குத் தகுந்த இடங்களாம். முனிவர்கள்ஒருவித தொந்திரவுமின்றி நித்ய கர்மங்களை நன்கு நடத்தலாம். ராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும், வேட்டையாடுவோர்களுக்கும் தகுந்தவிடமாதலால் மிருகங்களை வேட்டையாடுகிறார்கள். அம்மிருகங்களின் தோல்களையும், யானைகளின் தந்தங்களையும் பலவிதங்களில் உபயோகிக்கிறார்கள்.

சிலநதிகள் மலைகளின்றும் செங்குத்தான பாறைகளிலிருந்து கீழே விழுகின்றன. அப்படி விழுவதை நாம் நீர் வீழ்ச்சியென்று சொல்லுகிறோம். அந்நீர் வீழ்ச்சியின் சக்தி யந்திரசாலைகளை நடத்தவும, மின்சாரசக்தியை உண்டாக்கவும் உபயோகப்படுகிறது. பாறைகளும், கற்களும், பெரிய கட்டடங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றன. கோயில்களும் கோட்டைகளும் முற்காலத்தில் மலைகளின் உதவியால்தான் கட்டப்பட்டன. பாறைகளினின்றும் விக்ரஹங்கள் செய்யலாம். மலைகளுக்கு மத்தியிலுள்ள பள்ளத்தாக்குகளின் வழியே வியாபாரங்கள் நடத்தலாம். ஒருதேசத்தைச் சுற்றி மலைகளிருப்பதால் சத்துருபய மேற்படாது, ராஜ்யத்திற்கு ஒரு பாதுகாப்பாகும். இம்மலைகள், அடிவாரத்திலுள்ள நாடுகளை உஷ்ணக்காற்றினின்றும், புயற்காற்றினின்றும் நீக்கி சுகத்தை மானிடர்களுக்குப் பேணுகின்றன. இதனால் ஜனங்கள், சுறுசுறுப்புள்ளவர்களாயும், திடசாலிகளாயும், புத்தியுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். சிற்சில மலைகளில் தங்கம், வெள்ளி இரும்பு முதலிய சுரங்கங்களிருக்கும். பாறைகளோடு கலந்திருக்குமவைகளைப் பொடிப்பொடி யாக்கி, தனியே எடுத்து பற்பலவிதமாய் உபயோகிக்கலாம்.

மழை, மாரிகாலங்களில் மலையின்மேற் பெய்தவுடன், சலசலவென மழைநீர் கீழே விழவும், நாலாபக்கங்களிலும் உன்னதமான பச்சை மரங்களடர்ந்த பர்வதங்கள் மழை நீரால் நனைந்து பளபளப்புடன் பிரகாசிக்கவும், பற்பல இடங்களில் நீர்த்தடாகங்களும், பூந்தோட்டங்களும், கனிவர்க்கங்களும் கண்ணுக்குத்தோன்றவும், குளிர்ந்தகாற்று வீசவும்,—ஆகிய இவ்வழகிய காட்சி வெகு விசித்திரமாயும், ரம்யமாயு மிருக்குமென்று நாம் கூறவும் வேண்டுமோ?

எம். எஸ். ராமச்சந்திரய்யர்.

---

போஸ்டல் டிபார்ட்மெண்ட்.—இந்தியாவிலுள்ள போஸ்ட் ஆபீஸ்களின் மூலமாய், சென்ற 15 வருஷத்துக்குள் அனுப்பப்பட்ட போஸ்ட் கார்டுகள், கடிதங்கள், பத்திரிகைகள் இவைகளின் விவரம் பின் வருமாறு.—

| | போஸ்ட்கார்டு. | கடிதங்கள். | பத்திரிகைகள் |
|---|---|---|---|
| 1900-1 | 2180 லக்ஷம் | 2500 லக்ஷம் | 320 லக்ஷம் |
| 1913-14 | 4550 ,, | 4670 ,, | 56) ,, |

இவைகளில் பத்திரிகைகளின் தொகை, ஒன்றுக்கு ஒன்றே முக்காலாக அதிகமானது சந்தோஷத்துடன் குறிப்பிடப்படும். சென்ற 10-வருஷங்களாக ப்ரெஸ் ஆக்ட் (அச்சுக்கூடம்) முதலிய அடக்குத் திட்டங்கள் செய்யப்படாதிருந்தால் இந்தத் தொகை இன்னும் அதிகமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை, இந்தியப் பத்திரிகைகளே இப்படி அதிகமானதிற்குக்காரணம்.

# வாலி ராம ஸம்வாதம்

## RAMA & VALI : A Dialogue

(கம்பராமாயணம், வாலி வதைப்படலம்)

திருமால், தசரதராமன் என்னும் நாமத்துடன் அவதரித்து, தந்தையின்சொல்லை மெய்ப்பிக்கும்வண்ணம் வனம்புகுந்த காலத்தில், அப்பெருமானுடைய அருமைப் பத்தினியாம் ஜானகியை இராவணன் அபகரித்துச் செல்லவே, அவனையும் அவனுடனிருந்த கொடியவரக்கரையும் வேரறக் களைந்தெறிவதற்காக வானரவீரனாகிய சுக்கிரீவனது தோழமை கொண்டதும், அச்சுக்கிரீவனது தமையனும் வாலி என்பான் மீது அம்பு தொடுத்தவளவில், அப்பெருமானுக்கும் வாலிக்கும் நடந்த சம்வாதத்தைக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் வெகு அழகாகக் கூறியுள்ளார். அப்பாகம் "வாலி வதைப்படலம்" எனப்படும். அப்படலத்தை வசன நடையில் மொழிபெயர்த்தெழுத வேண்டுமென எனது நண்பர் பலர் அறிவித்ததனால், அதற்கிணங்கியே, அப்படலத்தை இச்சஞ்சிகையில் எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் மொழிபெயர்த்துதவ முன் வந்துளேன். அந்த வாலிவதைப் படலத்தை மொழிபெயர்க்குமுன், வாலியின் வரலாறு பராக்கிரமம் முதலியவற்றைச் சுருக்கமாகச் சொல்லுவது அவசியமாகும். அவை பின்வருமாறு:—

பூர்வத்திலே இத்தென்னாட்டில் கிஷ்கிந்தை என்றொரு மலையுண்டு. அம்மலையைச் சார்ந்த நாடும், கிஷ்கிந்தை என்னும் பெயர் கொண்டுளது. அந்த நாட்டை ஆண்டுவந்த அரசன் பெயர் வாலியெனப்படும். அவனுக்குச் சுக்கிரீவன் என்ற தம்பியொருவன் இருந்தான். அவ்விருவரும் வானர ஜாதியைச் சேர்ந்தவர். ஒருதாய்வயிற்றில் உதித்த மக்களாவர். அவர்களில் மூத்தவனான வாலியென்பான் முடிசூடி அரசாண்டுவர, அவனுடைய இளையவன் இளவரசனாயிருந்து வந்தான். அண்ணன் தம்பி இருவரும் மிகுந்த புஜபலபராக்கிரமம் பொருந்தியவர். ஆயினும் அவர்களில் வாலியே பெருவலியும் பரமசிவனது பேரருளும் பெற்றவன். முன்னொருகால் தேவரும் அசுரரும் பாற்கடலில் மந்தரகிரியை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் நாகத்தைக் கடைகயிறாகப் பூட்டி அக்கடலைக் கடைந்து அமுதமெடுக்க முடியாது மனஞ்சலித்து நின்றனர். தினந்தோறும அஷ்டதிக்குகளிலும் சென்று, அங்குள்ள கடல்களில் யக்ஞம் கொடுக்கும் வாலி அச்சமயம் பாற்கடலை அடைந்தான். அடைந்ததும் அங்கே சுராசுரர் வாடி நிற்பதைக் கண்ணுற்றவளவில், தானே அப்பாற்கடலைக் கடைய, அதினின்று அமுதம் திரண்டுவந்தது. அதுகண்ட அனைவரும் வாலியினுடைய போற்றலைப் புகழ்ந்தனரென்றால், அவ்வாலியின் பெருவலியை விரித்துரைப்பானேன்! இனி, வாலியின் புஜபலபராக்கிரமத்தை அறியாத இராவணன் ஒரு சமயத்தில் வாலியின் வலியை அழிக்க ஆசைகொண்டு அவன் தனது நித்தியகடன்களைக் கடற்கரையிலிருந்து செய்துகொண்டிருக்கையில், அவனுக்குப் பின்னே சென்று, அவனைத் தனது இருபது கரங்களாலும் இறுகக் கட்டிப் பிடிக்க முயன்றான். அதனையறிந்த வாலியோ தனது வாலை நீட்டி, அதனால் இராவணனை ஒரேகட்டாய்க் கட்டித் தூக்கிச்செல்லவே, நானாதிக்குகளிலும் அரக்கனது இரத்தம் சிந்தாத இடமில்லை. இத்தகைய வன்மைவாய்ந்த வாலி தனது நாட்டிலிருந்து அரசுபுரிந்து வருகையில் மாயாவி என்னும் அசுரனொருவன் வாலியை வலியப் போருக்கு அழைத்தான். உடனே வாலி சிங்கநாதஞ்செய்து யுத்தத்திற்குக் கிளம்பி அவ்வரக்கனைத் தாக்கினன். தாக்கியதும், அரக்கன் அடி பொறுக்கமாட்டாமல் ஓட்டமெடுத்தான். வாலியும் அவனை விடாது பின்தொடர்ந்துசெல்ல, அவ்வரக்கன் குகையொன்றில் புகுந்துகொண்டனன். அச்சமயம் வாலி தன்னுடன் வந்த தம்பியைநோக்கி, 'அப்பனே! நான் இப்பிலத்துவாரத்தில் புகுந்து மாயாவியை மாய்த்துவருகிறேன். அதுவரையில் நீ இங்கேயே இருப்பாயாக!" என்று சொல்லி அக்குகையில் புகுந்தனன். அவ்வாறு சென்ற வாலி அந்த அரக்கனைக்கண்டு 28 மாதகாலம் அவனுடன் யுத்தம் புரிந்துகொண்டிருந்தான். இது இப்படியிருக்க, அப்பிலத்தினுட்சென்ற தமையன் பல மாதங்களாகியும் திரும்பிவரவில்லையே என்று சுக்கிரீவன் பெரிதும் வருந்த நேரிட்டது. அத்தருணத்தில் வானரத் தலைவர்கள் பலரும் சுக்கிரீவனை அடைந்து "ஐயனே! உமது தமயன் இருபத்தெட்டு மாதமாகியும் திரும்பி வரவில்லை. ஆதலின், நீரே முடிசூடிக்

"கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். பகைவனுடன் போருக்குச் சென்ற தமையன் திரும்பி வாராதிருக்கையில் சுக்கிரீவன் அரசாள மனமிசைவது எப்படி? ஆகலின் சுக்கிரீவன் தனது குலப்பெரியோரை விளித்து "மாயவரக்கனுடன் யுத்தத்திற்குப்போன என் மூத்தவன் மீண்டு வாராதிருக்க, அவனுடைய கதி என்னவாயிற்றோ தெரியவில்லையே! ஆகலின், நானும் இப்பிலத்தினுட் புகுந்து, என் தமயனைத் தேடிவருவேன். ஒருவேளை அவன் அரக்கரால் ஆவிதுறந்திருப்பின், அவ்வரக்கனைக்கண்டு அவனுடன் சமர் முருக்கி அவனை நமனுலகனுப்பி நானும் உயிர்விடுவேனேயல்லது, அரசுரிமையை ஏற்றுக்கொள்ளேன்" என்று மிகவும் மனங்கலங்கினான். அதுகண்ட குரங்கினத்தலைவர் அனைவரும் பல நீதிகளைச்சொல்லி, நாட்டையாண்டுவரும்படி சுக்கிரீவனை யிரந்து வேண்டிக்கொண்டனர். பெரியோர்களின் சொல்லைத்தட்டி நடக்க முடியாத சுக்கிரீவன், அரசுரிமையை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. ஆயினும் அவன் முழுச் சம்மதத்துடன் செங்கோலை ஒப்புக்கொண்டதில்லை. பின்னர் ஒரு சமயம் அம்மலைக் குகையின் வழியாய் மாயாவி மீண்டுவருவானோ என்று பயங்கொண்ட வானரர் பலரும் அப்பிலத்தைப் பாறைகொண்டு மூடிவிட்டனர். ஈதிங்ஙனமிருக்க, வாலியோ அக்கொடியவரக்கனைக் கொலைபுரிந்து மகோன்மத்தனாய் அப்பிலத்தின் தலைப்பையடைய அதுமூடப்பட்டிருந்தது. உடனே தனது தம்பியைக்கூப்பிட்டுப் பார்த்தும் மறுமொழி இல்லாது போகவே, வாலிக்கு உண்டான கோபம் கட்டுக் கரையில்லை. உடனே அவன் அப்பெருமலையைத் தன் பாதங்களால் உதைத்தான். உதைத்தவளவில் மலை பிளந்து போயிற்று. அந்த அதிர்ச்சியினால் அப்பிரதேசத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் திடுக்கிடென ஒடுங்கின. பின்னர் வாலிதனது தலைநகரையடைந்தான். அதுகண்ட சுக்ரீவன் விரைந்தோடிச் சென்று, தன் தமையனுடைய அடியிணைகளில் வீழ்ந்து 'அண்ணா! நீர் நெடுநாளாகியும் திரும்பி வாராதது கண்ட நம் குலத்தலைவர்கள் அனைவரும் அரசுரிமையை ஏற்றுக்கொள்ளும்படி என்னை வேண்டிக்கொண்டனர். அவ்வேண்டுகோளை மறுக்க வஞ்சி, நான் முடிதரித்தேனேயல்லது என்னிடம் எவ்வளவும் வஞ்சனையில்லை. ஆயினும் என்மீதுள்ள குற்றத்தைப் பொறுத்தருளி, அரசாட்சியை ஒப்புக்கொள்ளுவீராக" என்று வணக்கமுடன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். ஆத்திரம் மிஞ்சியிருக்கும் வாலிதனதுதம்பியின் வார்த்தைகளைக் கவனியாது அவனைக் கடல் கடைந்த தன் கையினால் குத்தினான். அதைத் தாங்க முடியாத சுக்கிரீவன் ஓட்ட மெடுக்கும்படி நேர்ந்தது. அப்பொழுதும் அவனைவிடாது, வாலி பின்பற்றிச் சென்று அவனைப் பிடித்து அந்தரத்தில் தூக்கி யெறிந்தான். பின்னர் சுக்கிரீவன் மெதுவாய் வாலிக்குத் தப்பிப் பிழைத்து அந்நாட்டிற்கு அப்பாலுள்ள இரிசியமூகபர்வதத்தில் பதுங்கிக் கொண்டான். அம்மலைக்கு வாலி போகமுடியவில்லை. அதன்விவரம் என்னவெனில்.—

முன்னம் வாலியினால்கொல்லப்பட்டுப்போன மாயாவி என்பவனுக்கு உடன் பிறந்தவன் பெயர் துந்துபி. அவன் எருமைக் கடாவின் உருவம் பூண்டவன். மிகுந்த வாவலியும் புயவலியும்படைத்தவன். அவனை எதிர்த்துப் போரில் நிற்பார் எவருமிலர். ஆகலின் மிக்க செருக்குக் கொண்டு, பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனைப் போருக்கு அழைத்தனன். அது கண்ட பெருமான் புன்முறுவல் பூத்து 'அப்பனே பெருவலி படைத்த உன்னுடன் போர் புரிவதற்கு ஏற்றம் வாய்ந்தவன் கங்காதரனேயாகும்' என்று பதிலளிக்க அவன் உடனே கைலை மலை சென்று அக்கிரியைத் தனது கொம்புகளாற்குத்திப் பெயர்க்கமுயன்றனன். அத்தருணத்தில் சிவபெருமான் புன்னகையுடன் தோன்ற 'ஐயனே! என்னொடு யுத்தஞ்செய்ய வரவேண்டும். அதுதான் என் காரியம்,' என்றான் துந்துபி. அப்பொழுது பசுபதி, 'அப்பா நீ தேவருலகம் செல்லின்உனது எண்ணம் ஈடேறும்,' என்றுரைக்க, அவ்வாறே அசுரன் இமையவருலகடைந்தான். அது கண்ட இந்திரன், அசுரனை விளித்து, 'உன்னோடு போர் புரிய எங்களாலாகாது. ஆயினும், நிலவுலகில் எம்மினும் வலிமிகப்படைத்த என் மகன் உளன். அவன் பெயர் வாலி. ஆதலின் அவனிடத்துப் போ,' என்றுரைத்தான். அங்ஙனமே அசுரன் கிஷ்கிந்தையை அடைந்து வாலியை அழைத்தான் யுத்தத்திற்கு. உடனே இருவருக்கும் கடும்போர்

விளைந்தது. அக்கடும் போரில், அவன் தான் வாலி, இவன் தான் துந்துபி என்று எவரும் காண முடியாதவாறு இருவரும் வலசாரி இடசாரியாக சுழல்வதும் விழுவதும் எழுவதுமாய் இருக்கையில், அந்த யுத்தத்தைக் காண வந்திருந்த தேவர்களும் அசுரர்களும் அவ்வுக்கிரத்தைக் கண்டு அஞ்சியோடினராயின், அக்கொடும் போரை என்னென்று எடுத்தியம்புவது! நெடு நாள் வரையில் அவ்விருவரும் வெற்றி தோல்வியில்லாது போர்புரிந்த பின்னர், வாலிக்குக் கோபமுண்டாக அவன் அசுரனது கொம்பைப் பிடுங்கி அது கொண்டு அவனைக் குத்தி ஆகாயத்தில் வீசி யெறியவே துந்துபியின் ஆவிபறந்தது. அவன் உடலோ இரிசியமூக மலையில் தவம் புரிந்துவரும் மதங்கமுனிவரின் ஆசிரமத்தில் போய் விழுந்தது. அதனால் அவ்விடமெங்கும் அசுத்தமாய்ப் போகவே, முனிவருக்குக் கோபமுண்டாயிற்று. உண்டாகவே, அவர் தமது ஞானக்கண்ணால் நோக்கி வாலியே இவ்விதஞ்செய்தான் என்று தேர்ந்து "அவன் இங்குவரின் தலை வெடித்து இறக்கக்கடவன். அன்றியும் அவனைச்சேர்ந்த மித்திரர்கள் இங்குவரின் அவர்களும் கல்வடிவமாகக் கடவர்" என்று சபித்தார். ஆதலின், வாலி அம்மலையை அணுகமுடியாது போயிற்று.

அந்த இரிசியமூக பர்வதத்தில் சுக்கிரீவன் வாலிக்குப் பயந்து பதுங்கி யிருக்கையில், தந்தையின் மொழியைத் தலைமேற்கொண்டு, மாற்றாந்தாயின் வார்த்தையைத் தட்டாமல் தசரதராமன் தன் தேவியும் தம்பியும் உடன் வர, வனம்புகுந்து, கோதாவரி நதிக்கரையிலே பஞ்சவடி என்னும் க்ஷேத்திரத்தில் தங்கியிருக்க, ஜானகியை இராவணன் வஞ்சகமாய் எடுத்துச் சென்றனன். பின்பு இரகுவீரனும் இளையவரும் சீதையைத் தேடிச் செல்லுகையில் சபரி என்பாளைக் கண்டனர். அவள் அவ்விருமைந்தரையும் உபசரித்த பின்னர், 'கிஷ்கிந்தைக்குச் சென்று, சுக்கிரீவனைத் தோழமை கொண்டு, சீதையைத் தேடின் காரியம் கைகூடும்' என்றனள். அவ்வாறே இருவரும் புறப்பட்டுச் சென்று சுக்ரீவனது நட்பைத் தேடிக்கொண்டனர். பின்னர் வீரர் இருவரும் சுக்கிரீவனது இருப்பிடத்தில் விருந்துண்ட சமயத்தில், "அப்பனே! நீயும் நின்மனைவியைப் பிரிந்தாய் போலும்" என்று சுக்கிரீவனை வினவினர் இராகவன். உடனே அனுமான் ஜானகிரமணனை அடிபணிந்து, வாலி சுக்கிரீவருக்குள்ள பகைமையை விரித்துரைத்ததுடன் சுக்கிரீவனது மனைவியாம் உருமை என்பாளை வாலி அபகரித்துக் கொண்டதாகவும் வெளிப்படுத்தினன். அதைக் கேட்டதும் இராமன் அடங்காக் கோபங் கொண்டு சுக்கிரீவனை நோக்கி "முதலில் உன் மனைவியை உனக்குத் தேடிக் கொடுத்து, உன்னைக் கிஷ்கிந்தை நகருக்கு அரசனாக்கியபின்பே, என் மனைவியைத்தேடி யடைய முயலுவேன்" என்று வாக்குறுதி செய்தார். அப்பால் இராமன் இலட்சுமணன் சுக்கிரீவன் அனுமான் முதலிய பலரும் கிஷ்கிந்தையை நோக்கிப் பயணமாயினர்.

M. S சுப்பிரமணிய அய்யர்.

---

கல்மழை—மழைத்துளிகள் மேகத்தினின்று கீழே விழும்போது, சடிதியில் உண்டாகும் குளிர்ச்சியினால் இறுகிப்போனால், அது ஆலங்கட்டி அல்லது கல்மழையாகிறது. மேகம் இறுகி மழைத்துளிகளாக விழும்போது, திடீரென்று மிகவும் குளிர்ந்த காற்று அவற்றின்மீது பட்டால், அத்துளிகள் சில சமயங்களில் உறைந்து சிறு நீர்க்கட்டிகளாகின்றன. கல்மழையானது சாதாரணமாக அதிக சுவல்ப காலந்தான் பெய்யும்; கால்மணிநேரத்திற்கதிகமாகப் பெய்கிறது மிகவும் அரிது; ஆனால், சுமார் தொண்ணூறு வருஷங்களுக்கு முன்பாக வட அமெரிக்காவில் இரண்டு நாள் கல்மழை விடாமல் பெய்ததாகச் சொல்வார்கள். சாதாரணமாக ஆலங்கட்டிகள் சிறுபட்டாணியளவினவாக இருக்கும். இந்து தேசத்தில் சில இடங்களில் சற்றேறக்குறைய மூன்று நான்கு அங்குல கனமுள்ளனவாகவும், ஒவ்வொரு ராத்தல் எடையுள்ளனவாகவும் விழுந்திருக்கின்றன. பதினைந்து ராத்தல் எடையுள்ள ஆலங்கட்டிகளும் ஓர் காலத்தில் விழுந்தனவென்று சொல்வதுண்டு. கல்மழையானது சாதாரணமாகக் கொஞ்ச தூரந்தான் பெய்கிறது; ஆனால் ஏகதேசத்தில் விஸ்தாரமான பிரதேசத்தில் பெய்திருக்கிறது. 1788-ஆம் வருஷத்தில் பிரான்சுதேசத்தில், சுமார் 600 மயில் நீளமும், 6 முதல் 12 மயில் வரையில் பரப்புமுள்ளதாக இரண்டிடங்களில் பெய்தது. ஆலங்கட்டிகள் பெரிய அளவாகவும் நீடித்த காலமாகவும் விழுமானால் சிறிய ஜெந்துக்களும் பயிர்பூண்டு முதலானவைகளும் அதிக நஷ்டமடையும்.

மிஸ்டர் கீர் ஹார்டி:—இங்கிலாந்திலும் இந்தியாவிலும், கூலியாட்களின் நன்மைக்காக மிகவும் உழைத்துவந்தவரும் இந்தியாவின் ஆப்தர்களில் ஒருவருமான மிஸ்டர் கீர் ஹார்டி என்னும் பார்லிமெண்ட் மெம்பர் காளதுமீ 26உ இறந்ததில் இந்தியாவுக்கும் பெருநஷ்டமே.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## ஆத்திசூடி விளக்கம்

### 54. சோம்பித் திரியேல்

சோம்பலைப் பின்பற்றி ஒருபயனுமின்றி மனம் போனபடியே இழுபட்டுத் திண்டாடாதே என்பது இந்த ஸூத்ரத்தின் முழுப் பொருள். முதலில் சோம்பலை அடைந்துள்ளவர் ஒன்றுஞ்செய்ய மனம் எழாமலே தூங்கி வழிவர்; அப்படியிருக்க அவர்கள் திரிவதெப்படி என்ற சங்கை ஏற்படலாம். இதை நன்றாக நீக்கவே ஒளவையார், சோம்பேறிகள் திண்டாடும் வகையை கொன்றைவேந்தனில், 'சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்' என்று கூறி, நல்வழி முயற்சியில் மனஞ்செல்லாது பயனற்ற கொடியவழிகளில் மனதால் இழுபட்டு மிகுந்த வருத்தமடைந்து திண்டாடுவர் என்று விளக்கியிருக்கிறார்.

உலகில் எவனும் விழிப்பில் எத்தருணத்திலும் ஒன்றும் செய்யாமலே இருந்துவிட முடியாது. இதை பகவான் கீதை அத் III-5-ம் ச்லோகத்தில்:—

கன்மத்தை விட்டிருத்தல் இல்லைக் கணமேனும்
இம்மண்டலத்தெவனும் எந்நாளும்—மும்மைக்
குணவயத்தனெவனும் கூர்ந்துவினை செய்யத்
தணவறவே தள்ளுண்பான் தான்.

என்றுகூறி அவனவன் வாஸனைகள் வழி இழுபட்டு ஏதாவது ஒருசெயலை மனத்தாலோ, சொல்லாலோ, உடலாலோ ஓயாது செய்துகொண்டே இருப்பன், தனது விழிப்பு முதலிய நிலைகளில் என்று நன்கு விளக்கியிருக்கிறார். ஆகவே சோம்பலென்பது நல்வழி முயற்சியை நோக்கித் தொழிற்படாது மனம்போன விஷயஸுக வழிபோக ஆபத்தமாக விருக்கும் தன்மையே. இதற்குத்தான் தாமஸ நிலை என்று சாஸ்திரங்களில் பெயர். இந்தப் பெரும் மயக்கம் ஒருவனுக்கு வந்துவிட்டால், கெட்ட வாஸனைகள் முனைந்தெழுந்து அவனைக் கண்டபடி எல்லாம் இழுத்துத் துன்பப்படுத்திவிடும். ஆதலால் சற்றுநேரங்கூட நல்வழி முயற்சியான அறனை மறவாது அதைச்செய்ய விரும்பிக்கொண்டே இருத்தல்வேண்டும். இப்படி இல்லாத சோம்பேறியின் மனம் பாபக்களஞ்சியமாகத் தானிருக்கும். இதுபற்றியேதான் ஒளவையார் திரியேல் என்றாள்.

இம்மாதிரி நல்வழி முயற்சிக்குச் சோம்பியிருப்பதற்குக் காரணங்கள் யாவை என்ற கேள்வி பிறக்கலாம். முதலாவது நல்வழி முயற்சிகள் தொடக்கத்தில் மிகுந்த துயரத்தை உண்டாக்கிப் பின்னரே நன்மை பயப்பதால், அவைகளில் தொழிற்படுவதற்கே சிலருக்கு மனம் செல்லாதிருக்கலாம். முயற்சியின் முடிவைப்பற்றிய தெளிவும், நல்லோரிணக்கமுந்தான் சேர்ந்து இந்தச் சோம்பல் காரணத்தை வேரறுக்கவேண்டும். மேலும் மனம்போனபோக்கே போய் விஷயஸுகம் அனுபவிப்பது எவ்வளவுதான் முதலில் ஸுகம்போலத் தோற்றியபோதிலும் முதலிலும், இடையிலும், முடிவிலும் துக்கமயமே என்ற பகுத்தறிவு சோம்பித்திரிய விரும்பாது நம்மைச் செய்துவிடும். இப்படி சோம்பித் திரியாதிருக்க முயன்று வருகையில் எல்லாம் தம் நயத்திற்கே முயலும் படியாகவாவது அல்லது இப்படி நல்வழி முயற்சி குன்றிப் போவதைக் கண்டு இப்படிப்பட்ட முயற்சி எவ்வளவு நல்லதாயினும் வேண்டாம் என்றாவது இரண்டாவதாக சோம்பல் ஏற்பட இடமுண்டு. இதைப் பரோபகார சிந்தையாலும், ஈசனிருக்கிறார் எல்லோருக்கும் படியளக்க, நம்மால் நல்வழி முயற்சிதான் முடியும், அதுதான் நமது கடமை, அது பிறருக்குப் பயன்படுவது நமது திறனிலில்லை என்ற எண்ணம், ஆகிய இவைகளால் சோம்பல் வரவொட்டாது தடுத்து இந்த இரண்டாவது சோம்பல் காரணத்தையும் நீக்கிக் கொள்ளவேண்டும். சோம்பல் உண்டாவதற்கு மூன்றாவதான நுட்பகாரணமும் ஒன்றுண்டு. இது கற்றுத் தேறிய மூடரிடம் வந்து வெகு பலமாக அவர்களைச் சோம்பலில் அழுத்தி அவரது பலகால நல்முயற்சிகளை வீணாக்கிவிடும். இந்தக் காரணம் 'நாமோ மேலான நிலைக்கு வந்துவிட்டோம், இனி நமக்கு நல்வழி முயற்சியால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. அவைகள் எல்லாம் ஸாதாரண மந்தர்களுக்கு ஏற்பட்டவை' என்ற இறுமாப்பு உருவமாக நன்றாகக் கற்றுத்தேர்ந்த கவனக் குறைவுடைய மூடர்களிடம் குடிகொண்டிருக்கும். இது வந்து விட்டால், அவர்கள் மனம் எல்லாம்

கொடியதாக மாறிவிடும்: தம் நல்வழி முயலாச் சோம்பலை எல்லோருக்கும் எடுத்துக் கூறி பிறர் நல்வழி முயற்சிகளும் நடைபெறவொட்டாது தடுத்து வருவர். இக்காரணம் இதோடு அவர்களை விட்டுவிடாது. நாளடைவில் இந்த இறுமாப்பு, 'நாமோ நல்வழி தாண்டியஆண்டியாகி விட்டோம், நம்மைத் தீய வழி முயற்சி என்ன செய்யும்! அதற்கு அஞ்சி ஒதுங்குவது வெறும்பயங்கொள்ளித் தனமல்லவா? நமது தைர்யத்திற்கு இப்படி ஓடி ஒளிவது அழகா?' என்ற திடமான கொடிய நிலைக்கு மனதைக் கொண்டு ஏற்றிவிடும். ஆகவே நல்வழி முயற்சியில்லாது சோம்பேறியாக இருந்த மேதாவி நாளடைவில் கெட்டவழிகளிலே தங்கு தடையின்றிப் பாய்ந்து திரியும்படியாகிவிடும். இதுபற்றியே இந்த ஸூத்ரத்தில் சோம்பலாக இருந்தால் வீண் குழப்பமும் சஞ்சலமும் ஏற்படும், அவ்வளவு தூரம் சோம்பலுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது என்பது தோன்ற சோம்பித்திரியேல் எனப்பட்டது.

விஷய ஸுக அனுபவத்தால் ஏற்படக்கூடிய சோம்பலுக்கும் அதனால் விளையும் தீங்குகளுக்கும் அநேக உதாரணங்கள் உண்டு. ஹார்நிபல் என்ற கார்தேஜ் ஸேநாதிபதி தனது ஸேனைகளையெல்லாம் வெகுச்ரமப்பட்டு நடத்தி ரோமபுரியை நோக்கி வந்து அநேக விடங்களில் ஜயித்தும், ஆல்ப்ஸ் மலையை நல்ல விடா முயற்சியால் தாண்டியும், இடலியுள் வந்து ஜயம் பெற்றும். அங்கு ஸுகமான ஒரு பாகத்தில் தண்டிறங்கும்படி நேர்ந்தது. அங்கு அவன் ஸேனை, ஸுகங்களில் மூழ்கிவிட கொஞ்ச காலத்திற் கெல்லாம், இடலி தேசத்தவர்களால் அவர்கள் முறியடிக்கப்பட்டுத் தத்தளிக்கும்படி யாகிவிட்டது. நம் நாட்டு அரசர்களில் அநேகர் கண்டபடி விஷய ஸுகத்தில் மூழ்கித் தமது நாடுகளை நன்றாகப் பாதுகாக்க முடியாமல்போய்த் தத்தளித்துக்கொண்டிருந்தனர். பொதுவாக பணக்காரர் சீரழிந்து திண்டாடுவதெல்லாம் விஷய ஸுகத்தால் உண்டாகும் சோப்பலால்தான்.

சிலர் கொஞ்சகாலம் வெகு சுறுசுறுப்பாகவிருந்து தம் முயற்சிகள் பயன்படாதது கண்டு சோம்பலைக் கைக்கொண்டு விடுவர். இவர்களுக்குத்தான் ஆரம்ப சூரர்களென்று பெயர்கொடுக்கலாம். ஒரு நல்வழி முயற்சியில் இறங்குங்கால் தம்மால் எவ்வளவு வரையில் முயல முடியும் அது எவ்வளவுதூரம் பயன்படக் கூடும், என்பதை எல்லாம் ஆராயாது மிகுந்த பரபரப்பாய்த் தொடங்கி விடுவதால் அவர்களுக்கு மேல் தாங்கி நிற்கமுடியாச் சிதைவு வந்துவிடுகிறது. இதற்கு உதாரணம், இக்காலத்திய வ்யாபார விஷயங்களில் காணலாம். கடைகள் முறிந்து போவது, பெரிய வ்யாபாரக்கூட்டங்களும் நிதிகளும் தமது பாதகங்களைத் தீர்த்துக்கொள்ள முடியா நிலைமைகளை அடைந்துவிடுவது, இவைகள் எல்லாம் தேம்பித்திரியும் சோம்பேரிகளை அதிகப்படுத்தும் வழிகள். இக்காலக் கொடுமையால் இவ்வித சோம்பேறித் திருடர்கள் அதிகப்படுவரே யல்லாது குறைபடமாட்டார்கள். விஷய ஸுகவிருப்பம், அதைத் தீர்க்துக் கொள்ளப் பொருள் தேடுவது ஆகிய இவைகளே முக்ய நோக்கமாக உடைய இக்காலத்தில் இச்சோம்பலால் திரிவது அதிகப்படாமல் போகுமா? திண்டாடும் திருடர்களுள் பலர் தற்கொலையை வழியாகக்கொண்டு தமது வருத்தங்களைக் குறைத்துக்கொள்ள குறுக்கே பாய்ந்து விடுகின்றனர். வரவரத் தற்கொலை பெருகுமே ஒழிய ஒன்றும் ஒழுங்குபடாது இப்படிப்பட்ட கொடிய நிலைக்கு பாமரர் வருவர் தர்மம் தவறி என்பதை உணர்ந்து அவர்களை நோக்கி ஔவை இச்சூத்திரம் செய்திருப்பாளாயின் 'சோம்பிச் சாகேல்' என்றாவது கூறியிருக்கலாம். நம் பாதகண்ட வாஸிகள் எக்காலத்திலும் கண் மூடித்தனமாய் உலக விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு, மரத்துளையில் கால் நுழைத்துக்கொண்டு ஆப்பதனை அசைத்துப் பிடுங்கிய குரங்கு பட்ட பாடு படார்கள் என்று அறிந்தே மரண விஷயத்தை இச்சூத்திரத்தில் ஔவையார் கூறாது விட்டாள் போலும்.

மூன்றாம் காரணத்தால் சோம்பித்திரிபவர் இக்காலத்திய ஆபாஸ வேதாந்திகளே. இவர்கள், 'ஞானிகளுக்கு கர்மமே இல்லை. அவர்களுக்கு நல்வினை தீவினைப் பகுத்தறிவே இல்லை. அவர்கள் என்ன செய்தாலும் செய்யலாம். ஒன்றும் அவர்களுக்கு பந்தம் விளைக்காது. ஞானியாவதற்கு நாமும் சாஸ்திரக் குப்பைகளுக்குள் சிக்காது, அவைகளில் விதிக்கப்பட்டுள்ள ஜாதிவர்ணாச்ரம ஸ்திரீபுருஷ விக்ரஹாராதன தர்மங்களைவிட்டு விலகி ஞானவழியிலேயே நின்றுவிடவேண்டும்' என்று அபிப்ராயப்

படுவர். இதனால் இவர்களுக்கு சாஸ்திர அனுஷ்டானங்களில் சோம்பலால் மிகுந்த அச்ரத்தையும் அனாதரவும் ஏற்படும்: அவைகளைக் கைக்கொள்ள மனம் எழாது. பிரஹ்ம விஷயத்திற்கும் இக்குதர்க்கிகளுக்கும் வெகு தூரம் என்று கூறவும் வேண்டுமா? வைதிக வழியையே அணுகமுடியாத கொடிய துர்மார்க்கத்தில் சிக்கித் தத்தளிப்பதுதான் இவ்வித சோம்பேறிகளுக்கு ஏற்பட்ட மாருக்கதி. இப்படிப்பட்ட கற்றுத்தேர்ந்துபிடிவாதக்காரரான குதர்க்கிகள்தான், இக்காலத்தில் நமது மதம் ஒழுக்கம் இவைகள் நிலை குலைவதற்குக் காரணம். இவர்கள் அன்பார்ந்த உதவியில்லாவிடில் நம்மவரில் பெரும்பாலரும் வைதிக மதவிஷயத்தில் சோம்பித்திரிய இடமில்லாமலே போகும்.

இப்படி வைதிகவழி விஷயமாக சோம்பித்திரியாது தப்புவித்துக்கொண்டு நல்வழி நடந்து உய்யக் கருதி முயலும் ஸந்மார்க்கிக்குக்கூட மேல் நிலைகளில் இந்த சோம்பல் மாறுவேஷத்துடன் வந்து தாக்கும். நல்வழியில் மனதைச் செலவிட்டு ஸமாதி பழகுங்கால் திடீரென்று மனதிற்கு நான்குவிதத் தடைகள் வரலாம். இதை நன்கு விளக்க, அரசனைக்கண்டு நற்கதியடைய விரும்பிப்போகும் ஒருவனை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். இவன் வெகு தூரம் வழிநடந்து வந்த களைப்பால் அரண்மனைவாயில் வந்ததும் ராஜ தர்சனத்தைக்கூடக் கவனியாது அங்குள்ள ஸுகமான குளிர்காற்றில் படுத்துறங்கிப்போய்விடலாம். இதைப்போன்ற தடைக்கு லயம் என்று பெயர். இது முன் அப்யாஸ பலத்தால் தூக்கம்போல வந்து மூடிக்கொண்டுவிடும்: ஸமாதி கைகூடாது: ஒரு சூந்யநிலையில் சோம்பிநின்றுவெளிப்பட்டுவிடும்படிசெய்துவிடும். இப்படி வரக்கூடிய தருணங்களில்கற்றசாஸ்திரஉண்மைகளை மனதில் கிளப்பிவிட்டு இந்த சூந்யத்திற்கும் ஸாக்ஷியாக உள்ள உணர்வை நாடி எழும்பவேண்டும். இதற்கு ஞானப்யாஸம் என்று பெயர். இதைத் தடுத்துவிட்டால் அரண்மனை விநோதத்தோற்றங்களில் ஈடுபட்டு காலம்போக்கலாம் ராஜபேட்டிக்கு வந்தவன். இதுபோன்றது விக்ஷேடம்என்பது. இது ஸமாதிப்பழக்கஇடையில் முன்னுள்ள தோற்ற ஸுகங்களையாவது,விட்டுவந்தஸுகநிலைகளையாவது மனம்நாடிச்செல்வது. இதுகுறுக்கிடுங்கால் வைராக்யபாவனைகளை முன்னிட்டு இதை அழுத்திவிடவேண்டும். தோற்றமயக்கத்தில் ஈடுபடாது தடுத்து விட்டாலும் அரண்மனையினுள் பாட்டு, கூத்து, ஸ்திரீகள், இவைகளில் ஈடுபட்டு மயங்கிச்சொக்கிவிடலாம் ராஜபேட்டிக்கு வந்தவன். இதுபோன்ற தடைக்கு கஷாயம் என்று பெயர். முன் தடைகளை நீக்கி என்ன முயன்றாலும் மனதில் பூர்வ வாஸனா வேகமுண்டாகி மேலே முயற்சி ஏற்படாது அசைவற்று நின்று விடுவதுதான் இதன் ஸ்வரூபம். இது வந்துவிட்டால், அடுத்த கீழ்ப்படிக்குவந்து பழக்க பலத்தை அதிகப்படுத்திக்கொண்டு ஸாவதானமாக மறுபடியும் மேல்போக பலமாக முயலுவதாகிய பதுங்கிப் பாய்வதை கைக்கொள்ளவேண்டும். ராஜபேட்டிக்குப் போயுள்ளவன் பாட்டு கூத்துக்களையும் கவனியாது அரசனை அணுகிச்சென்றாலும் அங்குள்ள ராஜனது உறவினர்களைக்கண்டு ராஜனென்று மயங்கிநின்று விடலாம். இதுபோன்ற தடைக்கு ரஸாஸ்வாதம் என்று பெயர். முன்னுள்ள தடைகள் எல்லாம் நீங்கிவிடுங்கால் மனதிற்கு ஒருவித ஒய்வான சூந்யநிலை ஏற்படும். அதிலுண்டாகும் ஸுகத்தையே முடிவான ஸமாதிபலனான ஸாக்ஷாத்காரம் என்றுகருதி திருப்திபட்டுவிடுவதுதான் இந்தத் தடையின் ஸ்வரூபம். இதற்கும் ஸாக்ஷி விருத்தியான ஞானப்யாஸத்தை ஸூக்ஷ்மமாக கைக்கொண்டு வேறு ஒரு முயற்சியுமின்றி நின்று விடவேண்டும்.

முன்னர்க் கூறிய நான்கு தடைகளையும் சஞ்சலம், அஸ்திரம் என்ற இரண்டுள் அடக்கிக் கூறலாம். முன்னதில் விக்ஷேபரஸாஸ்வாதமும்,பின்னதில் லயகஷாயமும் அடக்கம்.விளக்கைத்தூண்டுவது போன்றது, முதல் மூன்று சோம்பல்களையும் நீக்குவது, சுடலடிப்பது போன்றது, நான்காவது கவிந்து கொள்ளாமல் தடுப்பது.இப்படிசோம்பல்களைத்தடுத்து விலக்காவிடில், இந்த ஸமாதி விஷயங்களைவிட்டு சஞ்சலத்தடைகள் நம்மை விஷயஉழற்சியில் இழுத்துவிடும். அஸ்திரத்தடைகள் நமது ஸந்மார்க்க முயற்சிகளை வீணாக்கிவிடும். இதுபற்றியே, ஔவையார் ஞானப்யாஸியை நோக்கி நான்குவிதசோம்பலை கைக்கொண்டு, கோரிய முடிவு கைகூடாது திண்டாடாதே என்றாள் இச்சூத்திரத்தில்.

———

# மாணவரின் மனோலக்ஷ்யங்கள் *

## STUDENTS: THEIR IDEALS

அறிவின் அபிவிருத்திக்கும், பொதுஜன உபகாரத்திற்கும் உழைத்துவரும் இதைப் போன்ற சங்கங்களில் சம்பந்தப்பட்டிருப்பதில் நான் உண்மையாய் ஆநந்திக்கிறேன்.

கலாசாலைகளிலும் சங்கங்களிலும் இளைஞருடைய நன்னோக்கங்கள், உயர் நாட்டங்கள், சுயநலமற்ற சிரத்தையோடு கூடிய உழைப்புகள் இவைகளுடன் சேர்ந்திருத்தல் எனக்கு எப்பொழுதும் பிரியம். சதா என் மனதைக் கவர்ந்துகொண்டிருப்பதும், உலகத்தில் இவைகளைப்பார்க்கிலும் நன்றாய் வாழ்க்கைக்குப் பொருத்தமானது வேறொன்றுமில்லையென்று நிரூபிக்கக் கூடியதுமான மேலான உத்ஸாகங்கள், சிறந்த மனோலக்ஷ்யங்கள் இவைகளைப் பற்றி என்னால் இயன்றமட்டும் அவர்களுக்குச் சொல்வது எனக்கெப்பொழுதும் மகிழ்ச்சியே. மனோலக்ஷ்யங்களைப்பற்றி இளைஞருக்கு எடுத்துரைக்கக் கருதுகையில் முகவுரையாவது வேண்டுகோளாவது அனவசியம், அஸம்பாவிதமே. விவேகத்தோடும் மேன்மையோடுங்கூடிய ஜீவ்ய முறையில் மனோலக்ஷ்யங்கள் எவ்வித சம்பந்தம் உடையன? அவைகள் நமது செய்கைகளை உத்கிர்ஷ்ட நிலைமைக்குக் கொண்டுவருகின்றன. நமது காரியங்களைக் கழிந்ததற்கும் இனி வரப்போகிறதற்கும் தொடர்புடையதாகச் செய்கின்றன; சிரேஷ்டமான பலன்களையும் காரியாதிகளின் ஒருமைப்பாட்டையும் கொடுக்கின்றன; ஒவ்வொருவனுடைய இருதயத்திலிருப்பதும் இயல்பிலேயே அமைந்ததுமான பூர்ணத்துவ ஆசையைத் தீர்க்கின்றன. மனோலக்ஷ்யங்கள் இல்லையானால் வாழ்க்கையானது அதன் மேன்மையுள்ள அம்சங்களை இழந்துவிடுகிறது; வேலையானது உத்ஸாகமற்ற முறையாகிவிடுகிறது; சென்றதைவிட்டு யூகமாய்க்கிளம்பி இனி நடக்கவேண்டியதில் யூக்த்துடன் முன்செல்கிறதில்லை; நமது காரியாதிகளும் ஒன்றுக்கொன்று குறுக்கிட்டுக்கொண்டு ஒன்றுக்கொன்றும்சக்திகேடு பண்ணிக்கொண்டும் இருக்கின்றன (அதனால் நிலைபான கெடுதியில்லை, யென்றாலும் அபிவிருத்தியின்றி முன்னே இருந்த நிலைமையே ஏற்படுகிறது. உயர்வுள்ள ஸௌக்யத்திற்கும் பூர்ணத்திற்கும் நம்மிடம் இயல்பாயுள்ள ஆசையானது திருப்தியடையாதிருப்பதினால் நம்மைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொன்றைக் கண்டபோது நாம் மிகுந்த அதிருப்தி அடைகிறோம். ஆனால் இது வாஸ்தவம். ஒவ்வொரு காலத்திலும் மனோலக்ஷ்யங்கள் மாறிக்கொண்டு வருகின்றன. எல்லாக் காலத்திற்கும் எல்லாத்திற்கும் ஜனங்கள் மெச்சி ஸாக்ஷாத்கரிக்கவேண்டி ஒரேவிதமான மனோலக்ஷ்யங்களை உலகம் தனக்கு ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஒவ்வொரு தலைமுறையிலுள்ளவர்கள் தங்களுக்காகத் தீர்க்கமான மனோலக்ஷ்யங்களை யேற்படுத்திக்கொண்டு கூடியமட்டும் நன்றாய் அவைகளைப் பிரத்தியக்ஷப்படுத்தத் தீர்மானித்தாலொழிய யாதொரு பிரயோஜனகரமான காரியமும் சிரேஷ்டமான பலன்களும் ஸித்தியாகமுடியாதென்பதை ஐயமறக் கூறலாம். இந்த விஷயத்தில் சரித்திரமும் பொருந்தவே அத்தாக்ஷி கொடுக்கின்றது. அதை மறக்கவாவது அறியாதிருக்கவாவது முடியாது. ஜனஸமூஹத்தை வாழ்க்கையின் உத்கிர்ஷ்டபதவிக்குக் கொண்டுவந்திருக்கும் சிரேஷ்டர்களின் ஜீவ்ய சரித்திரங்களும் இம்முக்கிய விஷயத்திற்கே சாக்ஷியம் கூறுகின்றன. வெளிப்படையாயுள்ள ஜனங்க சம்பந்தமான விஷயங்களைச் சற்று கவனித்து ஆலோசிக்குங்கால் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு ஜாதியாருக்கும் மனோலக்ஷ்யங்கள் அவசியமாயிருப்பதுடன் நமது ஜாதியாருக்கும் அவைகள் கட்டாயமாய் அவசியமென்பது தெளிவாய் விளங்கும். நமது நாட்டில் பலஜாதி வகுப்பினர், பல மதங்கள் பலவித நாகரீகங்கள் இவைகளெல்லாம் சேர்ந்துள்ளன. இப்புதிய காலாரம்பத்தின் ஆவாரங்கள் முன்பு ஒரு பொழுதும் நேர்ந்திராத வண்ணம் அனேகமாயும் பலத்ததாயுமிருக்கின்றன. நாம் நம்மரசனுக்கும், நாட்டிற்கும், தெய்வத்திற்கும் பக்தி பூண்டவர் என்பதற்

* இவ்வியாஸம், ம-ா-ா-ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரியார், பி.ஏ., பி.எல். அவர்களால், திருநெல்வேலி மாணவர் சங்கத்தில் சபாநாயகராய்த் தெரிந்தெடுக்கப்பட்டபோது உபந்யஸிக்கப்பட்டது.

கிசைய மேன்மையான நற்காரியத்திற் குரிய முக்கியஸ்தலமாக நமது நாட்டை சிறப்புறச் செய்து உலகத்திலுள்ள ஜாதியார்கள் அதனிடம் நேசித்துக் கண்ணியம் பாராட்டச் செய்யுமாறு, தீர்க்க புத்தியோடு மனோலக்ஷ்யங்களைத் தெரிந்து ஏற்படுத்திக்கொண்டு விடா முயற்சியுடன் அவைகளைப் பின்பற்றி வருதலே நமது கடன்.

இந்திய இளைஞருக்குத் தெரிவித்துக்கொள்வதில் எனக்குண்டான பேராவலுக்காக முகவுரையாவது வேண்டுகோளாவது அவசியமில்லை. உத்தம மனோலக்ஷ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு, அவைகளை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதில் மிகுந்த விருப்பமடைவதற்கான காலம் இளமையே. உத்ஸாஹம், நம்பிக்கை, தயாளகுணம், சுயநலமற்ற பரோபகாரச்செய்கை முதலியவைகளுக்குரிய காலம் அதுவே. நண்பர்காள்! பரதகண்டம் உங்களை நம்பியிருக்கிறது. மேலாம்பாமான பலன்களும் சாத்தியங்களுங்கூடிய எதிர்காலம் உங்களுடையதே. எங்கள் காலமோ முடிவுபெற்றுக்கொண்டிருக்கின்றது. அன்பு வழியிலும் சத்தியமார்க்கத்திலும், தர்மநெறியிலும் எங்களைவிட நீங்கள் முன்னடைவதைப் பார்ப்பதே எங்களது புருஷார்த்தமாயும், பேரானந்தமாயுமிருக்கும். ஒரு நிலைமையிலிருந்து வேறொன்றுக்குக் கடந்து செல்லும் காலாவதியில் வசித்து வருகிறீர்கள். உத்தமஜீவிய மென்கிற நிர்மலமான ஜோதியில் பிரவேசித்தல் உங்களது காரியம். இதனால்தான் இச்சமயம் உங்களுடன் கூடியிருந்து நான் பிரீதிவைத்திருக்கிற கருத்துக்களிற் சிலவற்றை உங்களுக்குத் தெரிவித்தலை விசேஷ சுதந்தரமாகப் பாராட்டுகிறேன்.

தற்காலம் மாணவரிடம் தங்கியுள்ள குணசார்புகளைக் கண்டுரைப்போர் கல்விச்சாலைகளில் மாணவர் தங்கள் கடமையில் சிரத்தை யெடுப்பதையும், பொதுவாய் அவர்கள் கீழடங்கிப் பணிந்திருக்கக்கூடியதையும், அவர்களது குணோத்கிர்ஷ்டத்தையும் ஒத்துக்கொள்ளும்போது அச்சந்தோஷத்துடன் சில குறைபாடுகளை யெடுத்துக்காட்டிக் குறிப்பான குற்றஞ் சிலவற்றையும் கூறுகின்றனர். நமது மாணவர்கள், அபிவிருத்தியின் மேலான நிலைமையிலிருக்கவில்லையென்பதும், அபிவிருத்தியடைய வேண்டிய பதவியை கெட்டுருப் போடுதலே வகித்துள்ளது என்பதுமே இக்குற்றங்களிலொன்று. கலாசாலையில் பொதுவாய் மாணவருக்கு வணக்கவொடுக்க வுபசாரமும் பயபக்தியு மில்லையென்பதே இரண்டாவதானது. சமீபத்தில் குழப்பகாலம் உண்டாயிருந்தது காரணமாக, பொதுஜனத்திற்கும் இராஜாங்கத்தாருக்கும் தோன்றிக் கொண்டிருக்கும் குற்றத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். மாணவர் இராஜ தந்திரங்களில் தலையிடுகிறார்கள் என்றதே அது. குறைகளை அறிந்துகொண்டு அவைகளை நீக்க அதிக ஆவல் கொள்ளுதலே பின்னால் சீக்கிரத்தில் அக்குறைபாடுகளையே போக்கி விடுமாதலால் இவ்விஷயங்களைப்பற்றிக் கொஞ்சம் விரித்துரைக்கிறேன்.

அபிவிருத்தியென்றாலென்ன? அபிவிருத்தியென்பது இன்னபடியாயிருக்கிறதென்பதைப்பற்றிப் பலவகையானதும் அடிக்கடி ஒன்றுக்கொன்று வேறுபாடுடையதுமான சங்கதிகளை நீங்கள் கேட்கவும் வாசிக்கவும் செய்வீர்கள். நான் அதை மூன்றுவிதத்தில் அறிகிறேன். முதலாவது ஒருவன் வாழ்க்கையில் தன் பதவியையறிதல், இரண்டாவது யோக்கியதையோடு அதை வகித்தல், மூன்றாவது, ஜீவியம் விகாஸம்பெற்று அபிவிருத்தி யடைதலிலும், தைவிகமான ஜீவ்யாதாரங்களிலும் முழு நம்பிக்கைவைத்தல். அபிவிருத்தியென்பது நாம் பெரும்பாலும் பள்ளிக்கூடத்தில் அடைகிற பிரதிவஸ்துவல்ல, அது இதனின்றும் முற்றிலும் வேறுவிதமாயும் வேறுபடித்தானதாயுமுள்ளது. அது கல்வி (பயிற்சி) யென்னும் மகிமை தங்கிய நாமதேயத்தை அநீதமாய் அபகரித்துள்ள பலவிஷயங்களைப் புத்தியில் நிரப்பிக்கொள்ளும் செய்கையல்ல. இனி முன்கூறப்பட்ட அபிவிருத்தியின் அம்சம் மூன்றையும் தெரிந்துகொள்வோம். ஜீவியத்தில் நாம் நமது பதவியையறிந்துகொள்வது முதன் முதலான சாரியம், நண்பர்காள்! ஒருவன் வாழ்க்கையில் தன் ஸ்தானத்தைத் தெரிந்துகொள்ளுதல் எவ்வகையிலும் கஷ்டமானதன்று என்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது மிகக்கஷ்டமானதென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன், அது, ஆத்ம சிக்ஷையும் தீர்க்க திருஷ்டியும் அதிகமாய் வேண்டியதானகாரியம்.

(தொடரும்.)

K. S. ராமஸ்வாமி சாஸ்திரி, பி.ஏ., பி.எல்.

# குளத்தங்கரை அரசமரம்
# (ஒரு சிறிய கதை)

## THE PEEPUL TREE NEAR THE TANK
## (A SHORT STORY)

பார்க்கப்போனால் மரந்தான். ஆனால் என் மனதிலுள்ளதை யெல்லாம் சொல்லுகிறதானால் இன்றைக்கெல்லாம் சொன்னாலுந்தீராது. இந்த ஆயுஸுக்குள் கண்ணாலே எத்தனை பார்த்திருக்கிறேன்! காதாலே எத்தனை கேட்டிருக்கிறேன்! உங்கள் பாட்டிகளுக்குப் பாட்டிகள் தவிழ்ந்து விளையாடுவதை இந்தக் கண்ணாலே பார்த்திருக்கிறேன். சிரிக்கிறீர்கள். ஆனால் நான் சொல்லுகிறதிலே எள்ளளவேனும் பொய்யில்லை. நான் பழைய நாளத்து மரம்—பொய்சொல்லக் கற்றதில்லை. இப்போ தொண்ணூறு நூறு வருஷமிருக்கும். உங்கள் கொள்ளுப்பாட்டிகளின் பாட்டிகளெல்லாம் நம்ம குளத்தங்கரைக்குத்தான் குடமுங் கையுமாக வருவார்கள். சிலபேர் குழந்தைகளையுங் கூடக் கூட்டிக்கொண்டு வருவார்கள். பட்டுப் பட்டாயிருக்கும் குழந்தைகள். அதுகளைக் கரையில் விட்டுவிட்டு, புடவைகளை அழுக்குப் போகத் தோய்த்து, மஞ்சள் பூசிக்கொண்டு அழகாக ஸ்நானம்பண்ணுவார்கள். குழந்தைகளெல்லாம் ராஜகோபாலன்போலத் தவிழ்ந்துகொண்டு மல்லிகைச் செடியண்டேபோய் மல்லிகை மொக்குகளைப்பார்த்துச் சிரிக்கும். அந்தக் காலத்திலே ஒரு பவளமல்லிகைச் செடி, முத்து முத்தாய்ப் பூ பூத்துக்கொண்டு அந்த ஓரத்திலிருந்தது. குளத்தங்கரை யெல்லாம் கம் என்று மணம் வீசும். இப்போது ஆதரிப்பாரில்லாமல் பட்டுப்போய்விட்டது. கொஞ்சம் பெரிய குழந்தைகள் அதன் புஷ்பங்களைப் பொறுக்கி ஆசையுடன் முகரும்...... ஆ! அந்த நாளையெல்லாம் நினைத்தால் என்ன ஆசையாயிருக்கிறது!

ஆனால் இப்போது நான் உங்களுக்கு அந்தக் காலத்துக் கதை ஒன்றும் சொல்லுவதாகவில்லை. மனது சந்தோஷமாயிருக்கும்போது சொல்லுகிறேன். எழெட்டு நாளாய் எனக்கு ருக்மணியின் ஞாபகமாகவே யிருக்கிறது. பதினைந்து வருஷமாச்சு. ஆனால் எனக்கு நேற்றுப் போலிருக்கிறது. உங்களில் ஒருவருக்கும் ருக்மணியைத் தெரியாது. பார்த்தால் சுவர்ண விக்கிரகம் போலிருப்பள் குழந்தை. அவளுடைய சிரித்த முகத்தை நினைத்தால் அவளே எதிரில் வந்து நிற்பதுபோல விருக்கிறது எனக்கு. அவள் நெற்றியின் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். நல்ல உயரமாக இருப்பள். அவள் கையும் காலும் தாமரைத் தண்டுகள் மாதிரி நீளநீளமாயிருக்கும். அவள் சரீரமோ மல்லிகைப் புஷ்பம்போல மிருதுவாக விருக்கும். ஆனால் அவள் அழகெல்லாம் கண்ணிலேதான். என்ன விசாலம்! என்ன தெளிவு! என்ன அறிவு! களங்கமற்ற நீல ஆகாயம் ஞாபகத்துக்குவரும் அவள் கண்களைப் பார்த்ததும்—நீலோற்பலம் நிறைந்த நிர்மலமான நீரோடையைப் பார்ப்பது போலிருக்கும். பார்வையிலுந்தான் எத்தனை அன்பு! எத்தனை பரிவு! ஸோமவார அமாவாஸைகளில் பரமாத்மாவைப் பஜிக்கிறதற்காக என்னைப் பிரதக்ஷிணம்செய்வள். அப்போது அவள் என்னைப் பார்க்கும் பார்வையிலிருக்கும் அன்பை என்ன என்று சொல்லுவேன்! என்னுடைய காய்ந்துபோன கப்புகளுங்கூட அவளுடைய பிரேமையான பார்வை பட்டதும் குளிர்த்துவிடுமே! ஐயோ, என் ருக்மணித் தங்கமே? எப்போ காண்பேன் இனிமேல் உன்னைப்போலக் குழந்தைகள் ?

அவள் குழந்தைப் பருவம் முதல், அவளுடைய கடைசிநாள் வரையில் இங்கே வராத நாளே கிடையாது. ஐந்தாறு வயதின் போதெல்லாம் ஸதாஸர்வகாலமும் இங்கேயேதான் விளையாடிக்கொண்டிருப்பாள். அவளைப் பார்த்ததும் வாரியெடுத்து முத்தங் கொடுக்க வேணுமென்று நினையாதவர் பாவம். எத்தனை அவசரமான காரியமிருந்தாலும் சரி, நம்ம வேணுகோபால சாஸ்திரி யிருந்தாரே, அவர் காலமே ஸ்நானஞ்செய்துவிட்டு, குழந்தை கைநிறைய மல்லிகைப்பூப் பறித்துக் கொடுத்துவிட்டுத்தான் போவர். நம்மூர் மாடுகன்றுகள்கூட எத்தனை முரடாக இருந்தாலும் சரி, அவளைக் கண்டதும் உடனே முரட்டுத்தனத்தையெல்லாம் விட்டு விட்டு, அவளுடைய சிறிய கைகளால் தடவிக்கொடுக்கவேண்டுமென்று அவள் பக்கத்திலேபோய்க் காத்துக்கொண்டிருக்கும்.

எனக்கு? குழந்தைகள் என்றால் எனக்கு எப்பொழுதுமே ஆசை. ஆனால் அவள் வந்துவிட்டால் போதும், மெய் மறந்து போய்விடுவேன். அவள்பேரில் துளி வெயில் படக்கூடாது.' அவள் கொஞ்சம் ஒதுங்கியிருந்தால் கூட என் கைகளை நீட்டி அவளுக்குக் குடை பிடிப்பேன். என்னுடைய ஆசை நாதனை சூரியனுடைய முகத்தைக் காலமே பயபக்தியோடு தரிசனம்செய்தானதும் எனக்குக் குழந்தை ருக்மணியின் ஞாபகம் வந்துவிடும். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பேன். அவள் வந்ததும் எனக்குள் அடங்காத ஆநந்தம் பிறந்துவிடும். குழந்தைகளுக்குள் பேதம் பாராட்டக்கூடாது தான். ஆனால் மற்ற யார் வந்தாலும் எனக்கு அவள் வருகிறதுபோல விருப்பதில்லை. நான் மாத்திரமா? ஊரிலுள்ள மற்றக் குழந்தைகள் கூட அவள் வந்தபிறகுதான் பூரணமான ஆநந்தத்துடன் விளையாடும். அவள்தான் அவர்களுக்குள்ளே ராணி. அத்தனை காந்த சக்தியிருந்தது அவளிடத்தில்.

அப்போதெல்லாம் அவள் அப்பா காமேசுவரய்யர் நல்ல ஸ்திதியிலிருக்கிறார். குழந்தைபேரில் அவருக்கு மிகுந்த பிரேமை. அவளுக்குச் செய்வதற்கு என்றால் அவருக்குச் சலிக்கிறதே இல்லை. கடைவீதியில் பட்டுத்தினுசுகள் புதிதாகவந்திருப்பது ஏதாவது பார்த்தால் நம்ம ருக்மணி அணிந்துகொண்டால் அழகாக இருக்கும் என்று உடனே வாங்கிக்கொண்டு வந்துவிடுவார். முதல்தரமான வைரமும் சிவப்பும் இழைத்து அவளுக்கு நிறைய நகைகள் செய்திருந்தார். அவளுக்குப் பத்து வயதாயிருந்தபோது கோலாட்ட ஜாத்ரைக்கு என்று ஒரு பாவாடையும் தாவணியும் வாங்கியிருந்தார். அந்த நிலவுக்கும் அவளுடைய அலங்காரத்துக்கும் அவளுடைய அழகுக்கும் என்ன எர்வை, என்ன எர்வை, கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது எனக்கு. அவள் குரலைப்பற்றி உங்களுக்குச்சொல்ல மறந்துபோய்விட்டேன். குயில் என்னத்துக்காச்சு? தங்கக்கம்பிபோலே இழையும் அவள் சாரீரம். இன்றைக்கெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாலும் சலிக்காது. ஜாத்ரைகளின் போதுதான் அவள் பாட்டை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் இப்போது நினைத்தாலுங்கூட அவளுடைய குரல் அதே இனிமையுடனும் நயத்துடனும் என்மனதில் கேட்கிறது.

அவளுக்கு வயதாக ஆக, அவளுடைய அன்பு வளர்ந்த அழகை என்ன என்று சொல்லுவேன்? குழந்தையாக இருக்கும்போதே யாரிடத்திலும் ஒட்டுதலாக இருப்பாள். இந்தக் குணம் நாளுக்குநாள்விருத்தியாகிக்கொண்டே வந்தது. தோழிகள் வேறு, தான் வேறு என்கிற எண்ணமே அவளுக்கு இராது. ஏழைவீட்டுப் பெண்ணாயிருந்தாலும் சரி, பணக்காரர் வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் சரி, அவளுக்கு எல்லாத் தோழிகள் பேரிலும் ஒரே பக்ஷந்தான். இன்னும் பார்க்கப்போனால் ஏழைக்குழந்தைகள்பேரில் மற்றவர்கள் பேரில்விட அதிகமான பக்ஷம்பாராட்டுவாள். யாராவது கஷ்டப்பட்டால் சகிக்கமாட்டாள். பிச்சைக்காரர்கள் வந்தால் கைநிறைய அரிசிகொண்டுவந்து போடுவாள். கண் பொட்டையான பிச்சைக்காரர்களைப் பார்க்கும்போது அவளையறியாமலே அவள் கண்ணில் தாரைதாரையாய்க் கண்ணீர் பெருகுவதை எத்தனை தடவைகளில் எட்டிப் பார்த்திருக்கிறேன்! அவர்களுக்கு மற்றவர்களுக்குப் போடுவதைவிட அதிகமாகவே பிச்சை போடுவாள். இப்படி அளவு கடந்த தயையும் இரக்கமும் அவளுக்கு இருந்ததனால் தான் அவளை நினைக்கும்போதெல்லாம் எனக்கு, கடினமான கோடைக்குப் பிறகு நல்ல மழை பெய்யும்போது உண்டாகுமே, அந்த நிரதிசயமான ஆநந்தம் உண்டாகிறது.

இவ்விதம் கண்ணுக்குக் கண்ணாய் நான் பாவித்து வந்த என் அருமைக் குழந்தையின் கதி இப்படியா போக’ணும்! நான் பாவிவைத்த ஆசை பழுதாய்ப் போக’ணுமா? பிரும்மதேவனுக்குக் கொஞ்சங்கூட கண்ணில்லாமல் போய்விட்டதே! ஆனால் பிரும்மதேவன் என்ன பண்ணுவான் மனுஷர்கள் செய்யும் அக்கிரமத்துக்கு?

ருக்மணிக்குப் பன்னிரண்டு வயதானதும் அவள் அப்பா அவளை நம்மூர் மணியம் ராமசுவாமி அய்யர் குமாரன் நாகராஜனுக்குக் கன்னிகாதானமாகக் கொடுத்தார். கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. தோழிப் பொங்கலன்றைக்கும், ஊர்வலத்தன்றைக்கும் அவள் ஸர்வாலங்காரத்துடனும் கிராமப் பிரதக்ஷிணம் வருவதைப் பார்த்தேன். கண்

பட்டுவிடும், அத்தனை அழகாயிருந்தது. அவள் தோழிகளுக்கு மத்தியில் இருந்ததைப் பார்க்கும்போது, மின்னற் கொடிகளெல்லாம் சேவித்து நிற்க மின்னரசு ஜ்வலிக்குமே, அம்மாதிரியேதானிருந்தது.

காமேசுவரய்யர் ருக்மணிக்குக் கல்யாணப் பந்தலில் நிறைய சீரும் சினத்தியும் செய்திருந்தார். ருக்மணியின் மாமியாருக்கும் மாமனாருக்கும் ரொம்ப திருப்தியாக இருந்தது. கலியாணத்துக்குப் பிறகு மாமியார் அவளை அடிக்கடி அழைத்துக்கொண்டுபோய் அகத்திலேயே வைத்துக்கொள்ளுவாள். ஆசையோடு அவளுக்குத் தலைபின்னி பூச்சூட்டுவாள். தன் பந்துக்களைப் பார்க்கப்போகும்போது அவளை அழைத்துக்கொண்டு போகாமல் போகவே மாட்டாள். இப்படி சகல விதமாகவும் ஜானகி (அதுதான் ருக்மணி மாமியார் பேர்) தனக்கு ருக்மணியின் பேரிலுள்ள அபிமானத்தைக் காண்பித்து வந்தாள். மாப்பிள்ளை நாகராஜனும் நல்ல புத்திசாலி. அவனும் ருக்மணியின் பேரில் மிகவும் பிரியமாக இருப்பான். கிராமத்தில் அவர்கள் இருவருந்தான் ரூபத்திலும் புத்தியிலும் செல்வத்திலும் சரியான இணை என்று நினைக்காதவர், பேசிக்கொள்ளாதவர் கிடையாது.

இப்படி மூன்று வருஷம் சென்றது. அந்த மூன்று வருஷத்துக்குள் எத்தனை மாறுபாடுகள்! காமேசுவரய்யருக்குக் கைபிளைத்துப் போய்விட்டது. தன் ரொக்க ஐவேஜியை யெல்லாம், ஏதோ அர்ப்பத்நாட் கம்பெனியாம், அதில் வட்டிக்குப் போட்டிருந்தார். நம்மூர்ப் பணம் நாலு கோடி ரூபாயையும் விழுங்கிவிட்டு அது ஏப்பம் விட்டுவிடவே, காமேசுவரய்யர் ஒரு நாளில் ஸர்வ ஏழையாய்ப் போய்விட்டார். ருக்மணியின் தாயார் மீனாக்ஷியம்மா உடம்பிலிருந்த நகைகள்தான் அவருக்கு மிச்சம். பூர்வீக சொத்தான வீட்டையும் நிலங்களையும் விற்றுத்தான் அவர் கொடுக்கவேண்டிய கடன்களைத் தீர்க்கவேண்டியதாயிருந்தது. இப்போ குப்புசாமி அய்யர் இருக்காரே வாக்காங்கரை யோரத்திலே, அந்த வீட்டில் வந்து அவர் குடியிருக்கலானார். மீனாக்ஷியும் பார்க்கிறதற்கு மஹாலக்ஷ்மி மாதிரி இருப்பள். அவளுடைய சாந்தத்திற்கு எல்லையே இல்லை. இத்தனை பெரிய கஷ்டம் வந்துவிட்டதே, இருந்தாலும் அவள் மனம் கொஞ்சமேனும் இடியவில்லை. "ஏதோ இத்தனைநாள் சுகமாகவாழ்ந்தோம். ஆரைக் கேட்டுக்கொண்டு ஸ்வாமி கொடுத்தார்? அவர் கொடுத்ததை அவரே எடுத்துக்கொண்டுவிட்டார். இதனாலே என்ன இப்போ? அவாளும் ருக்மணியும் ஆயுஸோடு இருக்கிற வரையில் எனக்கு ஒரு குறைச்சலுமில்லை. இந்தத் தைமாசத்திலே ருச்மணிக்கு சாந்தி முகூர்த்தம் பண்ணி புக்காத்துக்கு அனுப்பித்துவிட்டால் அப்புறம் எங்களுக்கு நிர்விசாரம். கஞ்சியோ கூழோ சாப்பிட்டுக்கொண்டு வழக்கம்போல பகவத்தியானம் பண்ணிக்கொண்டே எங்கள் காலத்தைக் கழித்துவிடுகிறோம்," என்று சொல்லுவாள். ஐயோ பாவம், நடக்கப்போகிற சங்கதியை அவள் எப்படி அறிந்திருப்பாள்.

காமேசுவரய்யர் ஐவேஜியில், கொஞ்சமேனும் தேருது என்று ஏற்பட்டதும் ராமசுவாமி அய்யருக்கு அவருடனிருந்த சினேகம் குளிர ஆரம்பித்துவிட்டது. இதற்கு முன்னெல்லாம் அவர் காமேசுவரய்யர் அகத்துக்கு அடிக்கடி வருவார். வழியில் அவரைக் கண்டால் பத்து நிமிஷம் நின்று பேசாமல் போகவேமாட்டார். இப்பொழுதோ, காமேசுவரய்யர் தூர வருகிறதைக்கண்டுவிட்டால்ஏதோ அவசரகாரியமாகப் போகிறதுபோல இன்னொரு பக்கம் திரும்பி வேகமாகப் போய்விடுவார். இப்படிச் செய்பவர்; அவர் வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டார் என்று நான் சொல்லாமலே நீங்கள் நினைத்துக் கொண்டு விடுவீர்கள். அவர் சமுசாரம் ஜானகியும் அதே மாதிரி மீனாக்ஷியம்மாளிடம் நெருங்குவதை நிறுத்திவிட்டாள். ஆனால் இதையெல்லாம் மீனாக்ஷியம்மாளும் காமேசுவரய்யரும் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. செல்வமுள்ள போது உறவு கொண்டாடுகிறது, அது போய்விட்டபோது வேற்று மனுஷியாள் போலப் போய் விடுகிறது,—இதெல்லாம் ஒரு சினேகத்தோடு சேர்த்தியா?

ஆனால் அவர்கள் ருக்மணி விஷயத்திலுங் கூட வேற்றுமை பாராட்ட ஆரம்பித்து விட்டார்கள். அர்ப்பத்நாட் உடைகிறதற்கு முந்தி சில மாதங்களாக ஜானகி பிரதி வெள்ளிக்கிழமையும் சாப்பிட்டானதும், ருக்மணியை அழைத்துவரும்படி வேலைக்காரியை அனுப்

பித்து விடுவாள். அன்றைக்கு அவளுக்குத் தலைபின்னி மைசாத்திட்டு சிங்காரித்து அகிலாண்டேச்வரி கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய் தரிசனம் பண்ணிவிட்டு அன்றைக்கு இரவு முழுவதும் தங்கள் அகத்திலேயே வைத்துக் கொண்டிருந்து அடுத்த நாள் காலமேதான் அவளை அகத்துக்கு அனுப்புவாள். ஆனால் அர்ப்பத்துநாட்டில் போனது போனதுதான் என்று ஏற்பட்டுவிட்ட பிறகு, வந்த முதல் வெள்ளிக்கிழமை யன்றைக்கே "எனக்கு ஆத்தில் இன்னைக்கு ரொம்ப வேலையாக இருக்கும், அடுத்தவெள்ளிக் கிழமை ருக்மணியை அழைத்துப் போறேன்" என்று மீனாக்ஷிக்கு சொல்லியனுப்பிவிட்டாள். அடுத்த வெள்ளிக் கிழமை முதல் அவ்விதம் சொல்லியனுப்புவதைக் கூட நிறுத்திவிட்டாள். இது மீனாக்ஷிக்கும் காமேசுவரய்யருக்கும் மிகுந்த துக்கத்தைத் தந்தது. ருக்மணியும், நம்மை இவ்வளவு இளைக்காரம் செய்கிறாள் பார்த்தாயா நம்ம மாமியார்கூட என்று மிகவும் வருத்தப் பட்டாள்.

* * * *

இப்படிக் கொஞ்சநாளாயிற்று. ஊரெல்லாம் குசுகுசு என்று பேசிக்கொண்டிருப்பார்கள். எல்லா ரகசியங்களும் குளத்தங்கரையிலேதான். ஆனால் அரைவார்த்தையுங் குறைவார்த்தையுமாகத்தான் என் காதில் விழுமே யொழிய முட்டமுழுக்க ஒரு பேச்சும் எனக்கு எட்டாது. ஊரிலே இப்படி எப்போதுமிருந்ததில்லை. எனக்கு மனஸு குறுகுறுத்துக்கொண்டேயிருந்தது. என்னவோ கெடுதலுக்குத்தான் இத்தனை ரகசியம் வந்திருக்கிறது என்று எனக்கு அப்பொழுதே தோன்றிவிட்டது. ஆனால் யாருக்கு, என்ன, என்று மாத்திரம் தெரியவில்லை.

கடைசியாக அப்படியும் இப்படியுமாய், அதையும் இதையும் கூட்டி. சேர்த்துப்பார்க்கப் பார்க்க கொஞ்சங் கொஞ்சமாய் சமாசாரம் என் மனஸுக்கு அத்துபடியாச்சு. ராமசாமியும் ஜானகியும் ருக்மணியை வாழாதே செய்துவிட்டு நாகராஜனுக்கு வேறு கலியாணம் செய்துவைக்க நிச்சயித்து விட்டார்கள்! என்ன பண்ணுவேன்? என் மனம் இடிந்து போய்விட்டது. குழந்தை ருக்மணியைத் தள்ளி வைக்கத் துணியுமா மனுஷியாளுக்கு? அடி பாவி! உன்னைப்போல அதுவும் ஒரு பெண்ணில்லையா! என்ன பண்ணித்து அது உன்னை? அதைக் கண்ணாலே பார்த்தால் கல்லும் இரங்குமே! கல்லையும்விட அழுத்தமா உன் நெஞ்சு! ......காமேசுவரய்யருக்கும் மீனாக்ஷிக்கும் முகத்திலே ஈ யாடாது. எனக்கே இப்படி இருந்தபோது பெத்த தாயார் தகப்பனருக்குக் கேட்கணுமா?

இனிமேல் நாகராஜனைப்பற்றி ஏதாவது நம்பிக்கை வைத்தால்தானுண்டு! அவன் பட்டணத்தில் படித்துக்கொண்டிருந்தான். மார்கழி பிறந்துவிட்டது. அவன் வருகிற நாளை எண்ணிக்கொண்டே இருந்தேன். கடைசியாக வந்து சேர்ந்தான். வந்த அன்று காலமே அவன் முகத்தில் சிரிப்பும் விளையாட்டுமாக இருந்தது. சந்தோஷமாக இருந்தேன். ஆனால் அன்றைக்கு சாயங்காலமே முகம் வேறாகி விட்டது. தாயார் தகப்பனர் அவன் மனதைக் கலைக்க ஆரம்பித்துவிட்டார்கள். நாளுக்கு நாள் முகத்தில் கலக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது. 'கரைப்பார் கலைத்தால் கல்லுங் கரையும்' என்பார்கள். அவன் கலங்கின முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு வயிற்றிலே பகீர் என்னும் இனிமேல் எது? இந்த ஒரு ஆசை இருந்தது. அதுவும் போய்விட்டது. ருக்மணியின் கதி அதோகதிதான் என்று நினைத்துவிட்டேன்.

தை பிறந்தது. வெளிப்படையாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஏதோ கிழக்கத்திப் பெண்ணாம். தகப்பனருக்கு நாலுலக்ஷ ரூபாய்க்கு ஆஸ்திதியாம். பிள்ளை கிடையாதாம். இந்தப் பெண்ணைத் தவிர இன்னும் ஒரே ஒரு பெண்தானாம். காலக்கிரமத்தில் ராமசுவாமி அய்யர் குடும்பத்துக்கு இரண்டு லக்ஷ ரூபாய் சொத்து சேர்ந்துவிடுமாம். இதெல்லாம் எனக்குக் கர்ண கடூரமாக இருக்கும். ஆனால் என்னசெய்கிறது, தலைவிதியே என்று கேட்டுக்கொண்டிருப்பேன்.

இந்தப் பேச்சுப் புறப்பட்டது முதல் மீனாக்ஷி பகலில் வெளியிலேயே வருகிறதில்லை. சூரியோதயத்துக்கு முன்னேயே குளத்துக்கு வந்து ஸ்நானம் செய்துவிட்டு தீர்த்தம் எடுத்துக்கொண்டு போய்விடுவாள். அவள் முகத்தைப் பார்த்தால் கண்டிராவியாயிருக்கும். சரியான தூக்கமேது சாப்பாடேது? ஒஹோ என்று வாழ்ந்துவிட்டு, இந்த கதிக்கு

ஆளானோமே என்கிற ஏக்கம் அவள் அழகை அழித்துவிட்டது. வீடுவாசல் போய்விட்டதே என்றாவது, நகை நட்டெல்லாம் போய், வெறும் உரிசல் தாலியை மாத்திரம் கட்டிக்கொண்டிருக்கும்படியாகிவிட்டதே என்றாவது அவள் வருத்தப்படவில்லை. கிளி போலக் குழந்தை அகத்திலிருக்க, ஜானகி அதன் பேரில் கொஞ்சமேனும் இரக்கங்கூடக் காட்டாமல் கண்ணுக்கெதிரேவே பிள்ளைக்கு வேறு விவாகம் செய்துவைக்க நினைத்துவிட்டாள் பார்த்தாயா என்னும் ஏக்கந்தான் அவளுக்கு இரவு பகலெல்லாம். அவள் முகத்தைப் பார்த்தால் ஜானகிக்குக் கூட மனது உருகிப்போய்விடும். ஆனால் ராணி, அவளெங்கே பார்ப்பள்!

அப்பொழுதெல்லாம் ருக்மணி எப்படி இருந்தாளோ, என்ன நினைத்தாளோ, எனக்கொன்றுந் தெரியாது. அறியாக் குழந்தைபே அது, என்ன நினைத்திருக்குமோ? ஒருவேளை, மாமியார் நம்மைக் கட்டோடே கெடுத்துவிட மாட்டாள் என்று நினைத்தாளோ? அல்லது மாமியார் என்ன நினைத்தாலும் நாகராஜன் சம்மதிக்கமாட்டான் என்று நினைத்தாளோ? இன்னும் முட்டமுழுக்க அஞ்சு வருஷமாகவில்லையே அவர்களிருவரும் ஜோடியாய் நம்ம குளத்தங்கரையில் விளையாடி! கலியாணமான பிறகுங்கூட ஒருவருக்குந் தெரியாமல் எத்தனை தடவை பார்த்து, பழையநாள்போலவே அன்பும் ஆதரவுமாக நாகராஜன் அவளோடு பேசியிருக்கிறான்! அவன் கைவிடமாட்டான் என்றேதான் ருக்மணி நினைத்திருப்பாள்.

ஆனால் நாளாக ஆக நாகராஜனுடைய கலியாணப் பேச்சு முற்றிக்கொண்டே வந்தது. நாகராஜன் மனதில் மாத்திரம் இன்னது இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. பட்டணத்திலிருந்து வந்த அன்று, மாமனாரையும் மாமியாரையும் நமஸ்காரம் செய்வதற்காக அகத்துக்கு வந்தானே அவ்வளவுதான்: பிறகு ருக்மணியை அவன் ஸ்மரித்தான் என்பதற்கு எள்ளளவுகூட அடையாளமில்லை. ஆனால் முகத்தைவிட்டு முதனாள் போன உல்லாஸக்குறி மறுபடியும் திரும்பிவரவேயில்லை. யாருடனும் பேசாமல் எப்பொழுதும் சுளித்த முகமாகவே இருப்பான்.

கடைசியாக நாள் வைத்தாகிவிட்டது. பெண்ணகத்துக்காரர் வந்து லக்கினப் பத்திரிகையும் வாசித்துவிட்டுப் போய்விட்டார்கள். ஐயோ! அன்றைக்கு மேளசத்தத்தைக் கேட்க என் பஞ்சப்பிராணனும் துடித்தது. காமேசுவரய்யருக்கு எப்படி இருந்திருக்குமோ! மீனாக்ஷிக்கு மனம் எப்படித் துடித்ததோ! ருக்மணி எப்படி சகித்தாளோ? எல்லாம் ஈசுவரனுக்குத்தான் தெரியும்.

நாகராஜனுக்குக்கூட துளி இரக்கம் பச்சாத்தாபமில்லாமற் போய்விட்டது பார்த்தாயா என்று நான் அழாத நாள் கிடையாது. சில வேளைகளில், இப்படியெல்லாம் பண்ணினால் இவன்மாத்திரம் நன்றாக இருப்பானா என்றுகூடச் சொல்லிவிடுவேன்......இப்படி என் மனஸு தளும்பித் தத்தளித்துக்கொண்டிருக்கிறபோது ஒருநாள் வயிற்றிலே பால்வார்த்தாப்போலே ஒரு சங்கதி என்காதிலே விழுந்தது. நாகராஜனோடுகூட படித்துக்கொண்டிருந்தவனும், ஸ்ரீநிவாஸன் என்றொருபையன். அவன் நாகராஜனைப் பார்க்கிறதற்கு என்று வந்தான். அவர்களுக்கெல்லாம் ரகசியமாகப் பேச இடம் வேறெங்கே, நம்ம குளத்தங்கரைதானே. ஒருநாள் சாயங்காலம் ஏழெட்டு மணிக்கு எல்லோரும் போய்விட்ட பிறகு இவர்கள் இரண்டுபேரும் இங்கே வந்தார்கள். ஸ்ரீநிவாஸன் நிரம்ப நல்லவன். அவன் ஊர் 50, 60 கல்லுக்கந்தண்டையிருக்கிறது. நாகராஜன், பெண்ணிருக்கப் பெண் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறான் என்று யாரோ அவனுக்கு எழுதிவிட்டார்களாக்கும். உடனே தபால் வண்டிமாதிரி ஓடி வந்துவிட்டான். குளத்தங்கரைக்கு வந்ததும், தான் கேள்விப்பட்டதைச் சொல்லி இதெல்லாம் வாஸ்தவந்தானா என்று அவன் நாகராஜனைக் கேட்டான். நாகராஜனும், "அம்மாவும் அப்பாவும் சேர்ந்து நிச்சயம் செய்துவிட்டபோது நான் மாட்டேன் என்று சொன்னால் தான் தீரப்போகிறதா? தவிர, பெண்ணும் லக்ஷணமாக இருக்கிறதாம். அவள் தகப்பனார், லக்ஷரூபாய் ஆஸ்தி அவள் பேருக்கு எழுதிவைத்திருக்கிறாராம். அவருக்குப் பிற்காலத்தில் இன்னொரு லக்ஷரூபாய் சொத்து சேருமாம். இப்படித் தானே வருகிற சீதேவியை எதற்கு வேண்டாமென்று சொல்லுகிறது?"

என்று சொன்னான். இந்த வார்த்தையெல்லாம் சொல்லும்போது ஸ்ரீநிவாஸன் முகம் போன போக்கை என்ன என்று சொல்லுவது? நாகராஜன் நிறுத்தினதும் அரைமணி தேசகாலம் ஸ்ரீநிவாஸன் அவனுக்கு, 'எத்தனை லக்ஷந்தான் வரட்டுமே, ஒரு பெண் பாவத்தைக் கட்டிக் கொள்ளலாமா, 'கலியாணப் பந்தலில் மந்திர ரூபமாகச் செய்த பிரமாணத்தை யெல்லாம் அழித்துவிடலாமா,' என்று நாலாவிதமாய் தர்மத்தையும் நியாயத்தையும் எடுத்துச்சொல்லி, கல்லுங் கரையும்படியாக ருக்மணிக்காகப் பரிந்து பேசினான். அவன் நன்றாக இருக்கவேணும், க்ஷேமமாக இருக்கவேணும், ஒரு குறைவு மில்லாமல் வாழவேணும், என்று நிமிஷத்துக்குநிமிஷம் நான் வாழ்த்திக்கொண்டே இருந்தேன்.

ஆனால் அவன் பேசியானதும் நாகராஜன் அவனைப் பார்த்து, "ஸ்ரீநிவாஸா, உன்னிடம் நான் இதுவரை சொன்னதெல்லாம் விளையாட்டாக்கும், நான் காசுக்காக இவ்வளவு அற்பமாகப் போய்விடுவேன் என்று நினைக்கிறாயா? நான் செய்யப்போகிற காரியத்தை யாருக்கும் தெரியாமல் வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்றிருந்தேன். ஆனால் எப்போ இவ்வளவு தூரம் பேசிவிட்டோமோ, இனிமேல் உனக்குத்தெரியாமல் வைக்கிறதில் காரியமில்லை என்று நினைத்துவிட்டேன். ஆனால் ஒன்றுமாத்திரம்: இதை நீ யாருக்கும் சொல்லக்கூடாது. இவர்களெல்லாம் ஆரியத்தன்மையைவிட்டு மிலேச்சத்தனமாய் நடக்க உத்தேசித்திருக்கிறதனால் இவர்களை நன்றாக அவமானம் செய்துவிடவேண்டியது என்று நிச்சயித்துவிட்டேன். நான் எத்தனை மறுத்தும் அப்பாவும் அம்மாவும் ஒரேபிடிவாதமாக இருக்கிறார்கள். ஆகையால் கொளிஞ்சிவாடிக்கேபோகிறேன்; அங்கே போயும் மாட்டேனென்றே சொல்லுவேன். ஆனால் கட்டாயப்படுத்தத்தான் போகிறார்கள், முகூர்த்தப் பந்தலிலும் உட்காருவேன். ஆனால் என்ன இருந்தாலும் திருமங்கலியத்தில் நான்தானே முடிச்சுப்போடவேணும், வேறு ஒருவரும் போடமுடியாதே. அந்த சமயத்தில் கண்டிப்பாக மாட்டேன் என்று விடப்போகிறேன்எல்லோரும் இஞ்சிதின்ன குரங்கு போல விழிக்கட்டும். ருக்மணியைத் தொட்ட கையினாலே இன்னொரு பெண்ணையும் நான் தொடுவேன் என்றிருக்கிறாயா"? என்று சொல்லி முடித்தான்.

"ஆனால் நீ விவாகத்துக்கு என்று போகுங் காலத்தில், ருக்மணி, அவள் அப்பா அம்மா மனதெல்லாம் எப்படி இருக்கும் என்று யோசித்துப்பார்த்தாயா?" என்று ஸ்ரீநிவாஸன் கேட்டான். அதற்கு நாகராஜன், "யோசித்தேன்; ஆனால் எல்லாம் போய்விட்டதென்று அவர்கள் நிராசையாய்த் தவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென நான் ஓடிவந்து மாமியார் மாமனாரை வணங்கி, 'துயரப்படாதீர்கள்! என் ருக்மணியை நான் ஒரு நாளும் கைவிட மாட்டேன்! பணத்தாசை பிடித்தவர்களையெல்லாம் மணப்பந்தலில் மானபங்கம் செய்துவிட்டு இங்கு வந்துவிட்டேன்,' என்று நான் சொல்லுங் காலத்தில் அவர்களுக்கு எத்தனை ஆநந்தமாக இருக்கும்! அதைப் பார்த்து அனுபவிக்க விரும்புகிறேன்" என்றான்.

"அந்த நாள் வரையில் அவர்கள் மனது எப்படி துடித்துக்கொண்டிருக்கும் நினைத்துப் பார்," என்றான் ஸ்ரீநிவாஸன். அதற்கு நாகராஜன், "இன்னும் 5 நாளில்லை. இன்று வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை இவ்விடமிருந்து எல்லோரும் புறப்படப் போகிறோம். அடுத்த நாள் முகூர்த்தம். அன்றைக்கே புறப்பட்டு அடுத்த நாள் காலையில் இங்கே திரும்பிவிடுவேன். இத்தனை நாள் பொறுத்தவர்கள் இன்னும் 5 நாள் பொறுக்கமாட்டார்களா?" என்றான். "என்னவோ அப்பா, எனக்கு இது சரியில்லை என்று தோன்றுகிறது" என்று ஸ்ரீநிவாஸன் பேசிக் கொண்டிருக்கும் போதே இருவரும் நகர ஆரம்பித்துவிட்டார்கள். எனக்கு மேலே ஒன்றும் கேட்கவில்லை.

அன்று இரவெல்லாம் எனக்குத் தூக்கமே வரவில்லை. பார்த்தாயா, நாகராஜனை வையக்கூட வைதேனே பாவி, அவனைப்போல ஸத்புத்திரன் உண்டா உலகத்திலே, என்று சொல்லிக் கொண்டேன். இனிமேல் பயமில்லை; அஞ்சு நாளென்ன, பத்துநாளென்ன, நாகராஜன் பிடிவாதக்காரன், சொன்னபடியே செய்துவிடுவான்; ருக்மணிக்கு இனிமேல் ஒருகுறைச்சலுமில்லையென்று பூரித்துப்போய் விட்டேன்.

ஸௌ. பாக்கியலக்ஷ்மி அம்மாள்.

(இக்கதை அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

# மாதவீகங்கணம்

### அத்யாயம். 4

பாரஸீஹப் பெண்மணி

ஹிந்து தேச சரித்ர முழுவதிலும் மிஹ்ருந்நிஸாவின் சரித்ரமே அதிக ஸ்வாரஸ்யமானது. அச்சரிதத்தைப் படிப்பவர்கள் அதனைக் கற்பனைக் கதையோ வென்று ஸந்தேஹிப்பார்கள். அவளுடைய தந்தை பாரஸீஹ தேசத்து உயர்குலச் சீமான்களுள் ஒருவர். ஆனால் காலவித்யாஸத்தால் வீடு வாசல், நிலம் புலம் யாவையும் விற்கவேண்டி வந்தது; பரம தரித்ரராயினர். இளைத்த பின் உள்ளூரில் வாழ்ந்திருப்பது மர்யாதை அன்றெனக் கருதியும், மொகலாய அரசர்களின் கீழ் நல்ல உத்யோஹம் பெற்றுக் கூடியவரை நல்ல ஸ்திதியிலேயே காலக்ஷேபஞ் செய்யலாமென உத்தேசித்தும் அவர் இந்தியாவுக்கு வந்தார். வரும் மார்க்கத்தில் கண்டஹார் என்னுமிடத்தில் அவருக்கொரு பெண்மகவு ஜனனமாயிற்று: குழந்தை பிறந்த வேளையோ பெற்றோர்களுக்கு ஆற்றொணா வறுமை. சொந்தத்துக்குக் கால் வயிறென்றால் கால்வயிறு கஞ்சி தேடிக்கொள்வதே பகீரதப்ரயத்னமாயிருந்ததென்றால்,குழந்தையை ஆதரிக்க அவர்களுக்கு திக்கு எங்கே? வறுமைப் பிணியின் கொடுமை, பத்து மாஸம் சுமந்து பெற்ற ரதிதேவியன்ன ஸ்வர்ண விக்ரஹத்தைச் சாலையோரத்தில் அநாதையாய்க் கண்ணீரும் கம்பலையுமாக விட்டுச் சென்றனர். என்னே வாழ்க்கை! என்னே வறுமை! பரிவாய்ப் பெற்றெடுத்த குழந்தையுமன்றோ ஒரு காலத்தில் பாரமாய்த் தோன்றிவிடுகிறது. கொடிக்குத் தன் காய்ப் பளுவாகுமோ என்பதுகூடப் பொய்த்துவிட்டது. வானம் போட்டுப் பூமி ஏந்திய இக்குழந்தையை, அவ்வழியே சென்ற ஒரு வர்த்தகன் எடுத்துத் தன் புத்ரியாகப் பாவித்து அதிக செல்வமாய் வளர்த்து வந்தான். குழந்தையின் தாயாரைத் தேடிப் பிடித்து அவளைத் தாதியாக அமர்த்தினான். இருபத்தைந்து வருஷங்களுக்குப் பின்னர் நூர்ஜஹான் அல்லது 'ஜகஜ்ஜோதி' என்னும் பொருள்படும் திவ்ய நாமதேயத்துடன் ஏக சக்ராதிபதியாய்த் தான் ஆட்சி புரியவிருக்கும் நாட்டில் மிஹ்ருந்நிஸா இப்போது இவ்வளவு சீரும் சிறப்பும் செல்வமும் ஸம்பத்துமாய் ஜனனமானாள்..

மிஹ்ருந்நிஸாவைத் தன் அபிமான புத்ரியாய் வளர்த்துக்கொண்ட வர்த்தகர் அவளுடைய பிதாவுக்கு அக்பர் ஸமஸ்தானத்தில் ஓர் உயர்ந்த உத்யோஹம் செய்து வைத்தார். அவ்வுத்யோஹத்திலிருந்து அவர் அதிசீக்ரத்தில் நல்ல பேரும் பதவியும் பெறலானார். அவருடைய மனைவியும் நாளடைவில் ராஜஸ்த்ரீகளுடன் பரிசயமானாள். அவ்வாறு ராஜஸ்திரீகளுடன் தனக்கு ஏற்பட்ட நட்பையும் பரிசயத்தையும் அஸ்திவாரமாகக்கொண்டு அதன்மேல் கட்டடம் கட்ட ஆரம்பித்தாள். தான் அரண்மனை செல்லும்போதெல்லாம் தன் மகளையும் உடனழைத்துச் செல்வாள். அரண்மனைக்குள் சென்றதும் ப்ரகாசமான நேத்ரங்களுடைய மிஹ்ருந்நிஸாவைப் புன்னகையுடனும் பூர்ண மனஸுடனும் அழையாத அரசிளங்குமரிகளும் ராணிமார்களும் பேகங்களுமே கிடையாது. ஆனால் மிஹ்ருந்நிஸா பக்வகாலமடைந்து ஒப்புயர்வற்ற ஸுந்தராங்கியாய் விளங்கத் தொடங்கிய காலந்தொட்டு அவள் அரண்மனையில் வேறு சிலர்களுடைய நோக்கத்துக்கும் கருத்துக்கும் இலக்கானாள்.

தனது தந்தையாருடைய அரண்மனைக்கு அடிக்கடி வந்து போகும் பாரஸீஹக்கட்டழகியின்டம் மையல் கொண்டான் ஸாலிம் இளவரசு. காதல் அதிகரிக்க அதிகரிக்க, பிற்கால இந்திய ராஜ்யாதிபதி பாரஸீக நாடோடியின் பெண்ணை மணம்புரிய மனங்கொண்டான். ஆனால் அக்பர் பெருமான் அவ்வித ஸம்பந்தத்துக்கு ஒப்பவில்லை. அவர் மிஹ்ருந்நிஸாவை வீரஸிம்ஹமாகிய ஷேர் ஆப்கனுக்கு விவாஹம் செய்துவைத்தார். மணமகனுக்கு வங்காள ஆதிபத்யமும் ஏராளமான பூஸ்திதிகளும் அளிக்கப்பட்டன. ஸாலிம் இளவரசருக்கு எட்டாதபடி மிஹ்ருந்நிஸா தன் கணவருடன் வங்காளம் செல்லும்படி ஏற்பாடாயிற்று.

அவ்வாறு வங்காளத்துக்கு ப்ரயாணப்படுவ

தன்முன் அக்பாது ப்ரதம பத்னியாகிய ராக்யாபீகம் அவனைத் தன் அரண்மனைக்கு விருந்துக்கழைத்தாள். அத்தருணம் மிஹ்ருந்நிஸா ஸாஹிம் இளவரசரைக் கடைசி முறையாய் ஸந்தித்து அவரிடம் விடைபெற்றுச் செல்ல ஸம்மதித்தாள்.

தாதிமார்களெல்லாம் அறையை விட்டகன்றனர். மிஹ்ருந்நிஸா மாத்ரம் ஏகாந்தமாயிருந்தாள். இளவரசர் தன்மீது கொண்டிருக்கும் காதலை ஒருவாறு த்ருப்திசெய்ய வேண்டுமென்ற நோக்கங்கொண்டல்ல அவள் தனிமையாயிருந்தது. ஸமஸ்தானத்தில் நல்ல உன்னத பதவியிலிருக்கும் உத்யோகஸ்தருடைய மனைவி இருக்கவேண்டிய மர்யாதையை அவள் நன்கறிந்தவள். இளவரசரை வரவேற்க படிதாவுக்கு வெளிப்புறத்தில் இருந்தாளெனினும், அவள் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரைக்கும் கோஷா உடை தரித்திருந்தாள். இளவரசருடன் பேச இசைந்தாளானாலும் அவள் வாய்மொழியிலிருந்து அவனுக்கு ஒருவித ஆறுதலும் தைர்யமும் உண்டாகவில்லை.

தன்னை ஆதரவாய் அழைத்து தன் மனஸுக்கு த்ருப்தி உண்டாகும்படி பேசாததைக் கண்டு அவமானப்பட்ட அவ்வரசிளங்குமரன் தான் எண்ணிய எண்ணம் நிறைவேறப் பெறாதவனாய் அந்த ஸுந்தரவதன ஸ்த்ரீரத்னத்தைப் பார்த்து, "ஏ, நாரீமணி, இதுதானா நாம் கடைசியாய் ஸந்திப்பது" எனக்கேட்டான். "ராஜகுமாரரே, முதன் முதலில் நாம் இம்முறையே ஸந்தித்திருக்கக்கூடாது. நானே விவாஹமானவள். இவ்வுலகத்தையே கட்டியாளும் சீமானாயிருந்தாலும் ஸரி, அவன் கூட என்னைப் பார்க்கமுடியாது. ஆனால் பால்யம் முதல்கொண்டு ராக்யாபீகம் மஹாராணியாரவர்கள் என் விஷயத்தில் தாயைக்காட்டிலும் அதிக அன்பும் ஆதரவுமாயிருக்கிறாள். நானும் அவளிடத்தில் எவ்வளவோ அன்பாயும் பயபக்தியாயுமிருந்து வருகிறேன். ஆதலால் அவளது விருப்பத்தை நான் கட்டளையாகக் கொண்டு இப்போது உம்மிடம் வார்த்தையாடுவதற்கு இசைந்தேன்" என்று பொறுமையாய்க் கூறிவிட்டு மிஹ்ருந்நிஸா சிறு குரலாய் "அது மாத்ரமே காரணமன்று. நமது பழைய நாளைய நட்பும் ஒரு காரணமாகும்" என்று முடித்தாள்.

"மிஹ்ருந்நிஸா, சிறிதும் இரக்கமில்லையா? இவ்வளவு கடூரமாய்ப் பேசுகிறாயே, இம்மொழிகள் நீ ஸ்வதாவாய்ச் சொன்னவையல்ல. ஸ்திரீயென்ற எண்ணத்துடன் பேசிய வார்த்தைகளல்ல. நீ 'மனைவி' என்னும் பதவியினின்று உலகத்தார் ஒப்ப அதற்கெவ்வாறு வெளிக்குப் பேசவேண்டுமோ அவ்வாறே பேசினாய் என்று நான் கருதுகிறேன்."

"அரசர் குமாரரே. விவாஹமானவள் பதிவ்ரதா தர்மத்துக்குப் பங்கம் வாராதபடி பேசுவதைவிட வேறு எவ்விதம் பேசக்கூடும்?"

"என்ன, ஆக்ராநகரத்து ப்ரதம காஜியைப் போல்பேசுகின்றனையே? மிஹ்ருந்நிஸா, இன்றிரவுநான்உன்னிடம்கோரான் படிக்கவரவில்லை."

"வல்லமை பொருந்திய வீரஸிம்ஹமே, ஒரு புருஷனை விவாஹம் செய்துகொண்டு அவரிடம் என்றைக்கும் பயபக்தியுடன் உண்மையாய் நடந்துகொள்ளவேண்டுமென்ற உறுதியைக்கொண்ட மனைவியைப்போல் நான் பேசுகிறேன். கோரானும் பதிவ்ரதா தர்மத்தின் லக்ஷணங்களைத்தான் நமக்குப் போதிக்கின்றது."

சற்றுநேரம் இருவரும் பேசாமலிருந்தனர். ராஜகுமாரன் அவளுடைய மனதை எப்படியாவது கலைக்கவேண்டுமென்ற தீர்மானத்துடன் வந்தவன். அவள் சற்றும் இடங்கொடுத்துப் பேசாததைக் கண்டு அவன் வருத்தமடைந்தான். அவன் மனது பெரிதும் சஞ்சலப்பட்டது. சிந்தாக்ராந்தனாய்ப் புத்தி ஒருவிடத்தும் செல்லாமல் தவித்தான். போனால் போகிறது, தன் அளவற்ற காதலை வாய்விட்டுச் சொல்லிப் பார்க்கலாம் என்றாலோ, அப்படி வெளிப்படையாகச் சொல்லும்பக்ஷத்தில் ஒருவேளை அவள் மனம் நோவாள் என்ற ஒரு பயம் அவன் மனதில் பூர்ணமாய்க் குடிகொண்டிருந்தது. இவ்வாறு அரசிளங்குமரன் தாமரை இலையில் நீர்த்துளிபோல் சஞ்சலச் சித்தனாய் வருந்திக்கொண்டிருந்தான்.

"மிஹ்ருந்நிஸா, என்மேல் கோபிக்காதே, நான் சொல்வதைக் கொஞ்சம் நிதானித்துச் செவிகொடுத்துக் கேள். என்னமோ சொல்கிறேன் என்றிராதே. அன்ன ஆஹாரமின்றித் தாபஜ்வரத்தால் நெடுநாளாக வருந்தும் வ்யாதியஸ்தன் ஏதாவது தின்பண்டங்களைக் கண்டு கைப்பாசைப்பட்டு வைத்யனுடைய சொல்லை

மீறி நடப்பதில்லையா? அதேமாதிரி காதல்பிணியால் பீடிக்கப்பட்டவர்கள் மதக்ரந்தங்கள் கூறும் கோட்பாடுகளாகிய எட்டுச்சுரைக்காயைக்கண்டு தம் ப்ராணனைவிடப் பதின்மடங்கு அதிகமாய்ப் பாராட்டும் நாரீமணிகளின்மீது ஆசையை ஒழித்துவிடுவார்களா? கொரான் புஸ்தகம் இருக்கவே இருக்கிறது; எங்கே போகிறது அது? அது ஒரு பெரிய ஆக்ஷேபனையாய் விடுமா? நான் உன்னிடம் கொண்டிருக்கும் அடங்காக் காதலின் தன்மையை நீ நன்கறிவாய். என் உயிருடனே நசிக்கும் ஸ்வபாவமுடைய என் ஆசையை, நீயும் ஒருவாறு ஆமோதித்தனையென்று நான் எண்ணுகிறேன். கொரானைப் பற்றி ப்ரமாதமாய்ச் சொல்லுகிறாயே! அது மாத்ரம் என்ன சொல்கிறது? ஸ்த்ரீ புருஷர்கள் இருவர் ஒருவர்மீதொருவர் பரஸ்பர உண்மைக் காதல் கொள்வதே விவாஹத்துக்கு ஸமானமென்று அவைகள் கூறவில்லையா!"

"ஸ்வாமி, நீர் சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை. நானோ ஸரியான விதிப்படி ஒரு புருஷரை மணம்புரிந்துகொண்டேன். இப்போது நான் அவருடையபத்னி. அப்படியிருக்க நீர் கூறும் வார்த்தை எவ்வாறு பொருந்தும்?"

"விவாஹமாயிருந்தாலென்ன? நான் ஒரு வார்த்தை சொன்னால் முல்லாக்கள் அடுத்த க்ஷணமே அவ்விவாஹத்தை ரத்து செய்துவிடுகிறார்கள். அது ஒரு பெருங்கஷ்டமா? நாம் என்ன ஹிந்துக்களா? ஒருவனைக் கட்டிக்கொண்டுவிட்டால் ஆயுள் பர்யந்தம் இஷ்டப்பட்டாலும் ஸரி, படாவிட்டாலும் ஸரி அவனையே கட்டிக்கொண்டு அழவேண்டுமென்பதற்கு? இந்த விஷயத்தில் நமது மதம் வேண்டுமட்டும் இடங்கொடுத்திருக்கிறதே! ஹிந்துக்களைப் போல் நாம் என்ன உடன்கட்டை ஏறவேண்டுமா? அந்தஜாதிதான் அவ்வாறெல்லாம் குட்டியுக்தி பண்ணிக்கொண்டு திரிகிறது. நமது மதம் இவ்விஷயங்களில் எவ்வளவோ நமக்கு அநுகூலமாயிருக்க இன்னும் ஆலஸ்யமேன்?"

"ராஜ குமாரரே, உடன்கட்டை ஏறுதல் முதலிய கோர ஸப்ப்ரதாயம் நமக்குள் இல்லை, வாஸ்தவந்தான். ஆனாலும் மனைவியெனப்படுபவள் உயிருள்ளமட்டும் கணவனிடம் பக்தியாயிருத்தல் வேண்டாமா? அவருக்கு த்ரோஹம் நினைப்பது ந்யாயமா?"

"மிஹ்ருந்நிஸா, நீ ஸம்மதியாவிட்டால் எனக்கு அது ஸஹகமனத்தைப் போலத்தான். நான் இப்பொழுது அனுபவிக்கும் ஹிம்ஸையில் பாதிகூட எந்த ஹிந்து விதவையும் அனுபவித்திருக்கமாட்டாள். ஒரு கிழப்பிணம் ஏதோ உத்தரவிட்டதாம்; அதற்காக நான் என் வாழ்க்கை ஸுகத்தைப் போக்கடித்துக்கொண்டு உள்ள நாள் உள்ளமட்டும், இவ்வுலக வாழ்வில் ஊக்கமின்றி நடைப்பிணம்போல நாட்களைக் கணக்கிட்டுக்கொண்டு காலங்கழிப்பதா? என்ன மூடத்தனம்!"

"அரசரே, உமது தகப்பனாரைப்பற்றி இவ்வளவு அவமர்யாதையாய்ப் பேசுவது ந்யாயமல்ல. உமக்காக அவர் ஒரு பெரிய ராஜ்யத்தை ஸம்பாதித்து வைத்திருக்கிறார். அவர் காலத்துக்குப்பின்னால் நீர் அந்த அகண்ட நாட்டிற்கு அதிபதியாகப் போகிறீர். நீர் இவ்வாறு பேசுவது தகுதியன்று."

"உன்னை அடையும் பாக்யம் இராமல் எனக்கு என்னத்துக்கு ராஜ்யமும் ஸிம்ஹாஸநமும்? கொஞ்சங்கூடத் தாக்ஷிண்யம் என்பது இராமல் உன்னை என்னிடமிருந்து பிரித்து என்னை என்றைக்கும் துக்கஸாகரத்தில் ஆழ்த்தியவராகிய அவரிடம் நான் ஏன் நன்றிபாராட்ட வேண்டும்? ஸாலிம் இப்பேர்ப்பட்டவனென்று அவருக்குத் தெரியாது போலும்; ஸாலிமா இவ்வித உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன்? எனக்குக் கோபாவேசம் வருமானால் நான் என்னதான் செய்யமாட்டேன்? அவர் என்னமோ, 'நமது பிள்ளை; நாம் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொண்டிருப்பான்' என்று எண்ணியிருக்கிறார். என் ஸமாசாரம் அவருக்குத் தெரியாது. பட்டால்தான் தெரியும். ஆகட்டும் ·என் கையாலானதைப் பார்த்துக்கொள்ளுகிறேன்."

"உச், உச், இப்படிக்கெல்லாம் பேசாதீர். ஜனானாவில் சுவர்களுக்கும் சாளரங்களுக்கும் கூடச் செவிகள் இருக்கின்றன. மஹா புத்திசாலியும், வைதிகசிஷ்டரும், தர்ம ஸ்வரூபியுமாகிய உமது தந்தையார் சொல்வது உமது நன்மைக்கே. அவருக்குக் கீழ்ப்படாதிருப்பது மதிஹீனம். அவர் சொல்படி நடப்பதே ஸர்வோத்தமமானது.

"வைதிகசிஷ்டரா! மிஹ்ருந்நிஸா, அவரை முஸல்மான் என்று இனி சொல்லலாமா? ப்ரதிதினமும் ஆதித்யபூஜை செய்துவருகி

றார். அவருடன் ஒருவர் இருக்கிறாரே, மஹா பெரியவர் அந்த அபுல் பாஸல். இரண்டு ப்ராக்யர்களுமாகச் சேர்ந்து ஒரு நூதனமதம் ஸ்தாபிப்பதாக வேஷம் போட்டுக்கொண்டு நம்மை இந்தக் கேடுகெட்ட ஹிந்துக்களுடன் ஒன்று சேர்க்க ப்ரயத்னப்படுகிறார்களே. அவரா மதாபிமானி, வைதிகசிஷ்டர்?"

மிஹ்ருந்நிஸா அடங்காக் கோபத்வனியுடன், "இளவரசே, என்ன சொன்னீர் நீர்! போதும். இனி இவ்வித வார்த்தைகள் என் செவியில் விழ வேண்டாம். எனது புருஷனுக்கு ஊரும் பேரும் புகழுமளித்து ஸந்மானித்த நமது காருண்ய அதிபதியைப்பற்றிய அவமர்யாதைப் பேச்சுகள் ஒன்றும் இனி என் முன்னிலையில் பேச வேண்டாம். 'கேடுகெட்ட ஹிந்துக்கள்' என்று சொல்லுகிறீரே. உமது தாயார் யார்? பேரும் ப்ரதாபமும் பெற்றதொரு க்ஷத்ரிய வம்சத்தில் பிறந்த ஹிந்துஸ்த்ரீயன்றோ உம்மைப் பெற்றெடுத்த சிமாட்டி. பேசுவதென்றால் பேச்சுக்கு ஒரு அத்து இல்லையோ? வாயில் வந்தபடிக்கெல்லாம் பேசிவிடுவதா?"

இளவாசருக்கு மிகவும் அவமானமாய்ப் போய்விட்டது. மிஹ்ருந்நிஸா இவ்வளவு தூரம் தன்னைத் தார்க்கணித்துப் பேசுவாள் என்று அவர் எண்ணவேயில்லை. "நான் ஏதோ தெரியாத்தனமாய்ச் சொல்லிவிட்டேன் மன்னித்துவிடு. அவர் எனக்கு த்ரோஹம் செய்தபோதிலும் எனது உத்தம தகப்பனைப்பற்றியாவது அல்லது என்னுடைய சீலமுள்ள தாயாரைப்பற்றியாவது அவமர்யாதையாய்ப் பேச வேண்டுமென்று நான் எண்ணிவரவில்லை அவர் செய்த பிழையைச் சீர்திருத்திக்கொள்ளலாமென்று உன்னிடம் வந்தேன். நான் ஸகல ஏற்பாடும் தயாராய்ச் செய்து வைத்திருக்கிறேன். நீ ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதான் தடை, என் ஜன்மம் ஸாபல்யமடைந்துவிடும்; என் கண்ணே!"

"இளவரசே, நீர் கூடார்த்தமாய்ப் பேசுவது எனக்குப் புரியவில்லை. சொல்லவேண்டியதை நன்றாய் வெளிப்படையாய்ச் சொல்லும்."

"நீ இவ்விடம் விட்டகன்றுச் சிறிது காலம் அஞ்ஞாதவாஸம் செய்யவேண்டும். இரண்டொரு மாஸத்தில் எல்லாம் ஸரியாய்விடும். என் தகப்பனார் கொடுத்ததைவிட எம்மட்டுக்கு அதிகமான செல்வமும், ஏராளமான ராஜ்யமும் கொடுக்கிறேன் என்றால் ஷேர் ஆப்கன் உன்னை எனக்குக் கொடுத்துவிடுவான். அதற்கு ஸந்தேஹமில்லை. முல்லாக்கள் தான் என்ன, நான் சொன்னால் தடை சொல்லப் போகிறார்களா? ஏற்கெனவே மதவிஷயமாய் அவர்களுக்கும் எனது தகப்பனாருக்கும் சிறிது போதாது. என் தகப்பனார் காலத்துக்குள்ளேயே நாம் சதிபதிகளாய் ஸுகமாக வாழத் தொடங்கலாம்."

மிஹ்ருந்நிஸா பரிஹாஸ நகைசெய்து, "உமது ஏற்பாடு நிரம்பவும் ஸாமர்த்யமாய்த்தானிருக்கிறது. ஆனால் இரண்டொரு முக்யமான விஷயங்களைப்பற்றி மாத்ரம் நீர் யோசனை செய்யவில்லை. ஷேர் ஆப்கன் ரணசூரர்: அதி தைர்யசாலி. உமது ராஜபம் மாத்ரமன்று? உமது ராஜ்யத்தைப்போல் பத்து ராஜ்யங்களை ஒருங்கே கொடுத்தாலும் ஸரி, அவர் தம் ஆசை மனையாளை இன்னொருவர் கையாள ஸம்மதிக்கமாட்டார். ப்ராணன் உள்ளமட்டும் ஒரு கை பார்த்துத்தான் விடுவார். உங்களுடைய பணத்துக்கும் மிரட்டிற்கும் அவர் கீழ்ப்படியமாட்டார். இன்னும் இரண்டொரு மாதத்துக்குள் நான் உமது தகப்பனார் ஏற்பாட்டின்படிக்கு வங்காளம் சென்று அவ்விடத்தில் என் தலைவருடன் வஸித்துக்கொண்டிருப்பேன்."

"எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்யாமல் நான் இங்கு வந்திருப்பேன். மிஹ்ருந்நிஸா, நான் என்ன ரணயுத்தங்கள் புரியும் கைதேர்ந்த போர்வீரனல்லவா? அறையின் வெளிப்புறத்தில் கட்டாரி பிடித்திருக்கும் இரண்டு தார்தாரிப் பெண்கள் காத்திருக்கிறார்கள். உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆயுததாரிகளான பேடிகள் இருபது பேர் அந்தண்டைக் கூடத்தில் ஒளிந்திருக்கிறார்கள்."

"இந்தக் கோட்டையின் மதில்கள் ஸாமாந்யமானவையல்ல. மேலும் எண்ணிறந்த போர்வீரர்கள் காவல் புரிந்து கொண்டிருக்கின்றனரே இவ்விடம்?"

'நதிமுக வாயில் என் கைக்கீழ் இருக்கிறது. வேண்டும்போது அதைத் திறந்து கொள்ள எனக்கு ஸ்வாதீனமுண்டு. ஆற்றில் ஒரு படகு தயாராய் நின்றிருக்கிறது. ஆற்றங்கரையில் வாயுவேஹமுடைய ஐந்நூறு குதிரையாட்கள் மறைந்திருக்கின்றனர்.'

"சக்ரவர்த்தியவர்கள் அவ்வளவு ஏமாந்தவரல்லர். நீர் இவ்வுலகில் எங்கு எவ்வளவு தூரம் சென்றாலும் ஸரி, உம்மைப் பிடித்துவர அவருக்கு ஸாமர்த்யமுண்டு."

"இரண்டொரு தினங்களுக்குள் நான் என் ராணுவஸ்தலம் சென்றுவிடுவேன். அவ்விடம் என் கீழ் இருபதினாயிரம் வீரர்கள் யுத்த ஸந்நத்தராய் இருக்கின்றனர். என் ஸைந்யமென்றால் சக்ரவர்த்தியவர்களுக்குச் சிறிது யோசனைதான்."

"இளவரசே, உமது தந்தையாருடைய ஸேனை உமது ஸேனையைவிடச் சிறந்த ஸேனைகளுடனெல்லாம் ஜயம் செய்திருக்கிறது. உமது வீரர்களைத் தோற்கடித்து உம்மைச் சிறைகொள்வது அவருக்கு ஒரு ச்ரமமா? மான்ஸிங் இருக்குமட்டும் அவருக்கு என்ன குறை. புறங்காட்டி யோடுதலை இன்னதென்று அறியாத வீரஸிம்ஹம் அவர். அவர் முன் நீர் எம்மாத்ரம்?"

"நிஜந்தான். மான்ஸிங் இணையற்ற படைத்தலைவர்தான். ஹால்திகடம் என்னும் கணவாயில் நானும் அவருந்தான் மீவார் ராணாவைத் தோற்கடித்து அவருடைய ஸேனையைத் துரத்தியடித்தோம். ஆதலால் மான்ஸிங்கருடைய வீர சௌர்யத்தை நான் நன்கு அறிவேன்; ஆனால் மான்ஸிங்குக்கு இப்போது வங்காளத்தில் முதுகுநிமிர வேலையிருக்கிறது. திரும்பவும் கலஹம்விளைத்த ஆப்கானியர்களை யடக்குவது ஸுலபமான கார்யமல்ல. மேலும் அவருடைய ஸஹோதரியை எனக்குக் கொடுத்திருக்கிறார். ஆகலினால் அவர் விஷயமாய் நான் யோசிக்கவேண்டிய செலவில்லை."

"ராஜகுமாரரே, நீர் செய்துள்ள ஏற்பாடுகள் யாவும் அத்புதமாயிருக்கின்றன. அவற்றில் குற்றங்குறை யொன்றுமில்லை. நீரோ ஆண்மகன்; நானோ பேதமை மிகுந்த ஒரு பெண்பிள்ளை. உமக்குத் தெரியாததும் தெரியக்கூடாததும் ஒன்றுமில்லை. ஆயினும் நான் ஒன்று சொல்லுகிறேன் அதை என்றைக்கும் கவனத்தில்வைத்துக்கொள்ளும். உமது தந்தையாரின் கண்களும் காதுகளும் அறுபது நாழிகையும் திறந்தவண்ணமாயிருக்கின்றன. அவருடைய காவல்வீரர்கள் எப்பொழுதும் உறங்குவதில்லை. நீர் இன்றைக்கு ஜனானா வந்தது அவருக்குத் தெரியும். நான் ராக்யா பீகத்தைப் பார்க்க வந்ததையும் அவருடைய ஒற்றர்கள் அறிவார்கள். யமுனா நதியினின்று நான் கோட்டைக்குள் நுழைந்தபோது வழியில் ஆற்றுக்கு அக்கரையில் ராஜவீரர்களுடைய ஆயுதங்களினொலி ஸ்பஷ்டமாய் எனக்குக் கேட்டது. இளவரசே, அடியேன்மீது இவ்வளவு தயைவைத்து வந்த தங்களிடம் என் மனதிலுள்ளதை ஒளிக்காமல் சொல்லிவிடுகிறேன். மிஹ்ருந்நிஸா பதிவ்ரதா தர்மத்தைப் பூர்ணமாய்க் கொண்டவள்; தனக்கு மாலையிட்ட புருஷருக்கு அவள் ஒருக்ஷணமும் த்ரோஹம் செய்யக்கருதமாட்டாள். இது திண்ணம் அரசே. நாம் இப்போது மித்ரராகப் பிரிந்து செல்கிறோம். இனி ஸந்திக்கப்போவதில்லை. இதுதான் நான் தங்களிடம் கடைசிமுறையாய் விடைபெற்றுக் கொள்வது."

"இப்போது விடைபெற்றுக்கொள்வதுவாஸ்தவந்தான். ஆனால் இது கடைசிமுறையன்று."

அந்தப்புரத்தினின்று ஓர் ஊதல் சப்தித்தது; ஸலீம், மிஹ்ருந்நிஸா இருவரும் திடுக்கிட்டனர். அந்தச் சப்தத்தின் பொருள் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்; அதனால் உண்டாகக்கூடிய கஷ்டங்களையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அறைக்கு வெளிப்புறமுள்ள ஸலவைக்கல் தரையில் காலடியோசை கேட்டது. நக்ஷத்ர ஒளியில் கத்திகளும் கட்டாரிகளும் ப்ரகாசித்தன. தூரத்தில் ஏதோ ஒரு பெரிய சந்தடி கேட்டது. மறுபடியும் எல்லாம் நிச்சப்தம். பழையப்ராகாரம் அரண்மனை மண்டபங்களின்மீதும் நந்தவனங்களின்மீதும் காற்றடித்துக் கொண்டிருந்தது. முன்போலவே யமுனா நதியின் அலைகளும் மதில்களின்மீது சாந்தமாய் அடித்துக்கொண்டிருந்தன. ஸலீமைச் சேர்ந்த பேடிகள் நிராயுதபாணிகளாயினர். அவர்களுள் பலர் மாண்டனர்; சிலர் கைது செய்யப்பட்டனர்.

மறுபடியும் ஒரு சந்தடி கிளம்பிற்று. ஆற்றுக்கு அக்கரையிலிருந்து துப்பாக்கிவெடி கேட்டது. ஸலீமுடைய குதிரையாட்கள் ராஜஸைந்யத்தால் சூழப்பட்டனர். சப்தத்தைக்கேட்டு ஸலீம் உடல் நடுங்கினான். குடிவெறியன்; சிற்றின்பப்ரியன்; ஸ்த்ரீலோலன். அக்பருக்கிருந்த சாந்தமும், பொறுமையும், நீதான புத்தியும் அவனிடம் மருந்துக்குக்கூடக் கிடையாது. அவருடைய முன் யோசனையும், தயாள

குணமும் அவருடனே போய்விட்டது. தகப்பனாது நல்ல குணங்கள் ஒன்றும் ஸாலிமுக்கு வாவில்லை. ஜயமடைந்தபோது அவன் சத்ருக்களிடம் நிர்தாக்ஷண்ய முடையவன்; பழிக்குப் பழி வாங்கும் துர்க்குண ஸம்பன்னனாகிய ஸாலிம் தோல்வியடைந்த சத்ருக்களை அடியோடு ஹதம் செய்யும் இயல்புடையவன் இப்பேர்ப்பட்ட சூரன் அபாயம் நேருமென்று முற்குறி யுண்டாகும்போதே கைகால் வெலவெலத்துப் போய்விட்டான். தொலைவில் துப்பாக்கி வெடிகள் பலமாய்க் கேட்கவே அவன், கல் ஸ்தம்பத்தின்மீது சாய்ந்தான். சாய்ந்துகொண்ட கம்பத்தைப்போலவே அவனுடைய முகமும் வெள்ளைவெளேலென்று ஆய்விட்டது. கைகால்கள் உதறிய வண்ணமாகவே யிருந்தன.

அக்பாது மாணகாலம் முதல்கொண்டு தினே தினே க்ஷீண தசையடைந்து தத்தளித்துக் கொண்டிருந்த மொகலாய் ராஜ்யத்தை நிலை நிறுத்திப் பூர்வ ஸ்திதிக்குக் கொண்டுவருவதற்கு அவருக்குப் பெரிதும் உபயோஹமாயிருந்த அந்த மனோதைர்யத்தின் சிறிது அம்சத்தை மிஹ்ருந்நிஸா இப்போது இந்த அபாய காலத்தில் வெளிப்படுத்தினாள்.

அளவிடக் கூடாத மனோதைர்யமும், வீராவேசமுமுடையவளாகிய மிஹ்ருந்நிஸா அவ்விளங் குமரனைப் பார்த்து, "இளவரசே, உங்களுடைய ஆண்மை என்ன ஆண்மை? நீங்களா புருஷர்? மான்ஸிங்குடன் கூடி, மீவார் ராணாவை விரட்டியதாக ஜம்பமடித்த சூரரா நீர்? நீரா அக்பாது ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கப் போகிறவர்? அக்பாது புதல்வர் நாம் என்ற ஞாபகம் இருந்தாலும் போதுமே, உமக்குப் போதுமான ஆண்மை உண்டாகுமே! இவ்வளவு பௌர்ஷமுடைய இளவரசரா இவ்விராஜ்யத்துக்குச் சக்ரவர்த்தியாகப் போகிறார்! ஸாலிம், இது ஜனானா; ஸ்த்ரீகள் இருப்பிடம் இது. கத்தி கைப்பிடித்த சூரர்களுடைய புகலிடம் அன்று இவ்வறை. வந்த விதமாகவே தைர்யமாக வெளிச்சென்று தங்களுடைய தந்தையை நேரில் பார்த்து, "நான் ஒரு காலத்தில் காதல்கொண்டிருந்த ஸ்த்ரீயை அவள் இவ்வூரைவிட்டுப் போவதற்கு முன்னர் கடைசி முறையாகப் பார்த்துவிட்டு வரலாமென்று சென்றிருந்தேன்" என்று உள்ளதைச் சொல்வீரானால், அதி தயாளுவாகிய உமது தகப்பனார் உமது குற்றத்தை மன்னித்து விடுவார். வேறு ஒன்றும் உம்மைக் கோபிக்கமாட்டார். இன்னும் தாமஸமேன்? புறப்படும். சற்றுமுன் உமது வீரதீரத்தைப்பற்றி மஹா ப்ரமாதமாய் வெண்கலக் கடையானையைப்போல் பேசினீரே! உமக்குத் தைர்யமில்லையா; சொல்லும். நான் பெண்தானே. நான் போய் அவரைப் பார்த்து, இனி வாழ்வில் நான் காணக்கூடாத எனது நண்பரை மன்னிக்கும்படிக்கு சொல்கிறேன்! என்ன சொல்லும், புறப்படட்டுமா?"

பயம், என்ன விலையெனக் கேட்கும் இந்த வீரதீரப் பெண்மணிமுன், தனது ஸமாசாரத்தை வெளியிட்டுக்கொண்டதைப்பற்றி மஹா அவமானமடைந்தான் ஸாலிம். அவளுடைய வார்த்தையைக் கேட்டு ரோஷங் கொண்டவனாய் இளவரசன் தன் வழக்கப்படி ஜம்பமாய்ப் பேசலானான்:

"ஸேனாதிபதியாயிற்று நான், இவற்றையெல்லாம் கண்டு நான் பயப்பட்டுவிடுவேனா? நமது அந்தரங்கங்கள் வெளியாய்விட்ட பின்னர் உன்னை இவ்வரண்மனையில் தனியாய்விட்டுப்போவது யுக்தமா அல்லவா என்று நான் சிறிதுநேரம் யோசித்துக்கொண்டிருந்ததைக்கண்டு, நீ என்னைப் பயங்கொள்ளி என்று தூஷிப்பது சிறிதும் பொருந்தாது. எனது படகுக்காரர்கள் ஸித்தமாயிருக்கிறார்கள். நொடி நேரத்துக்குள் நான் என் குதிரையாட்களைச் சேர்ந்துவிடுவேன். ஹிந்துஸ்தானமுழுவதும் ஜயபேரிகைகொட்டிய தளகர்த்தர்முன் ராஜஸைந்யம் நிர்த்தூளியாய்விடும். ஆனால் உன்னைத் தனியாய் இவ்விடம் விட்டுப்போவது ந்யாயமா?"

"நிரம்பப் பதைபதைத்து விடுவதனால் காரியம் ஸித்தியாய்விடாது. ஆத்ரப்பட்டு ஏதாவது மூடத்தனமாய்ச் செய்தால், நீர் இன்னும் அதிகமான கஷ்டத்துக்குள் அகப்பட்டுக்கொள்வீர். உமது பேடிகளெல்லாம் கைதிகளாய்விட்டனர்; நதித்வாரம் சாத்திபாய்விட்டது; இந்நேரத்துக்குள் உமது வாயுவேக மனோவேகக் குதிரையாட்களும் நிராயுததாரிகளாய் விட்டிருப்பார்கள். நான் பெண்ணாயிருப்பினும் இவ்விஷயத்தில் நான் சொல்வதைக் கேளும். நாளைய தினம் சக்ரவர்த்தியவர்களிடம் சென்று ஸமாசாரங்களையெல்லாம் உள்ளபடி விவரமாய் அவரி

டம் சொல்லும். அவர் உம்மை மன்னித்துவிடுவார்; அதற்கு நான் உத்தரவாதம். என்னைப் பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். எனக்குத் தெரியும் தப்பித்துக்கொள்ளவழி. நான் ராணியார் ராக்பா பீகம் அவர்களுடைய விருந்தாளி';ஷெர் ஆப்கன் மனைவி. என்னை ஒருவரும் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். எனக்குப் பயமில்லை. நீர்மாத்ரம் நான் சொன்னபடி செய்யுங்கள்" என்று பேசிமுடித்தாள் மிஹ்ருந்நிஸா.

ஒரு ஸாமாந்ய சிற்றரசனின் மனைவி இவ்வாறு கம்பீரமாய்ப் பேசினாள். தனது அபூர்வ வல்லமையும் தைர்யமும், வருங்கால உயர்பதவியும் யாவும் அறிந்தவள்போலக் காணப்பட்டன அவளுடைய வார்த்தைகள். பிறரைத் தன் கீழ் அடக்கியாளுவதற்கென்றே அவதரித்த பெரியோர்களுடைய வதனத்தைக் கண்ணுறும் பேதைகளின் மனதில் உண்டாகும் ஆச்சர்யத்துடன் ஸாலிம், இவ்வளவு அபாயங்களுக்குமிடையில் சிறிதும் களங்கமடையாமல் ஸாவதானமாயிருந்த அவளுடைய முகத்தை உற்றுநோக்கினான். அவளிடம் இப்போது அவனுக்கு ஒரு புதிய பக்தி உண்டாயிற்று. இவ்வாறு காதலும் பக்தியும் கலந்துள்ள ஸாலிம், மறுபடியும் கூறிய மொழிகள் அவ்வளவும் உண்மையேயெனத் தோற்றியது. "மிஹ்ருந்நிஸா, நீ கட்டளையிடவும் நான் அதற்கு வணங்கிக் கீழ்ப்படியவும் பிறந்திருக்கிறோம். ஓர் அகண்ட ராஜ்யமெல்லாம் உனது கட்டளைகளை எதிர்பார்த்து நிற்குங்காலம் ஒன்றுவரும். உன்னிஷ்டப்படியே நான் உன்னைவிட்டுச் செல்கிறேன்; நீ சொல்லியபடியே செய்கிறேன். ஆனால். நாம் பிரிவதற்குமுன் நான் உன்னைக் கேட்டுக்கொள்ளும் ஒரு வேண்டுகோள் உண்டு. அதாவது, ஹே நாரீமணி, ஸ்த்ரீகள் நடுநாயகமே, நான் இந்த ஸ்வர்க்கலோகத்தைவிட்டுச் செல்லுமுன் உனது திவ்யமுகத்தை யொருதரம் எனக்குக் காண்பிக்கவேண்டும். அதுதான் நான் உன்னை வேண்டிக் கேட்டுக்கொள்வது. உன் கடைக்கண் பார்வையொன்றே எனக்கு அம்ருதத்துக்கு ஸமானமாயிருக்கும். நெடுநாள் மட்டும் மனவமைதியற்று இடமிடமாய்த் திரியப்போகும் ஓர் இளவாசன், உன்னையே த்யானித்துக்கொண்டிருப்பான். உன்னுடைய முகத்தை அவன் என்றைக்கும் மறவான்."

எத்தனையிருந்தாலும் கடைசியில் மிஹ்ருந்நிஸாவும் ஒரு பெண்தானே. ஸாலிம் உருக்கமாய்ப் பேசியதைக் கேட்டு, அவள் அவன்மீது சிறிது இரக்கங்கொண்டாள். இப்போதுதான் முதல் முறையாய்ச் சிறிது நடுக்கமுற்ற த்வனியாய் அவள், "நான் செய்வது தப்பான கார்யமாயிருக்கலாம். அல்லா என்னை மன்னிப்பாராக. நீர் கடைசியாய்க் கேட்ட வேண்டுகோளுக்கு நான் இணங்காதிருப்பது ஸரியன்று" எனக் கூறிக்கொண்டே அவள் தன் முகமறைவைத் திறந்தாள்.

லஜ்ஜையால் சிறிதுமாறிய புன்னகை தவழும் ஜோதிமயமான ஒரு ரமணீய வதனம் அங்கு ப்ரகாசித்தது. பாரஸீஹ முழுவதும் தேடித் தேடிப் பார்த்தாலும் அவ்வளவு வசீகரமான வதனம் காண்பதரிது; இந்தியா முழுவதும் அலைந்து திரிந்தாலும் காண்போர் மனதை அவ்வளவு கவரக்கூடிய கருவிழிகளும் கிடையா.

வீணே டில்லி நகரத்துச் சிற்பிகளும், மேல் நாட்டு கவீச்வரர்களும் அந்த ஜகஜ்ஜோதியைப் படங்களிலும் பதங்களிலும் சித்ரிக்க முயன்றனர். இன்னும் சிலர் வ்ருதாவாய் முயல்கின்றனர். அந்நாரீமணியின் லாவண்யம் எவராலும் வர்ணித்து வரையமுடியாது. மிஹ்ருந்நிஸாவின் அழகு அவளுடனே பிறந்து அவளுடனே நசித்துவிட்ட ஒரு வரப்ரஸாதம்.

அவளுடைய முகமண்டலத்தின் சோபையைப் பார்த்து ஸாலிம் பெருமூச்சுவிட்டான்; அவனுடைய மனது துடித்தது. மறையாடை திரும்பியும் மூடிக்கொண்டது. சற்று முன் மாயாஸ்வரூபமாய் விளங்கிய சந்த்ரபிம்பம் மறைபட்டது.

## அத்யாயம் 5

### ஸௌந்தர்யவதியுடன் ஸம்பாஷணை

நரேந்த்ரன் எத்தனையோ கதைகள் படித்திருக்கிறான்; எத்தனையோ கதைகள் கேட்டுமிருக்கிறான். ஆனால் ஒரு கதையிலாவது அன்றிரவு நடந்த விஷயங்களைப் போன்ற அதிசயமான விஷயங்களை அவன் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, ஸாயந்த்ரந்தான் தன்னைச் சூழ்ந்திருக்கும் அந்தரங்களைக் கண்டறிய அதிக ஆவலுடனிருந்தான். இப்பொழுதோ

எல்லாம் வெட்ட வெளிச்சமாய்விட்டது. அக்பாது அரிய ஸாமர்த்யத்தால் யமுனா நதிதீரத்தில் காண்போர் அதிசயிக்கத்தக்க வண்ணமாய் எழுப்பப்பட்டிருந்த ஆக்ரா கோட்டைக்குள் நரேந்த்ரன் கொண்டுவரப்பட்டான். சக்ரவர்த்திபவர்கள் ப்ரதிதினமும் தன் குடிகளுக்குப் பேட்டியளிக்கும் ஸபாமண்டபம் கோட்டையின் வெளிப்ராகாரத்தில் அமைந்திருந்தது. அவ்விடம் தானிருந்தது ஆம்பர் விருந்தாளிகள் க்ருஹம். அந்த க்ருஹத்தில்தான் நரேந்த்ரன் சில மாஸங்களாகத் தங்கியிருந்தான். அவ்விடத்தினின்று அவனுக்கு அந்தப்புரத்திலுள்ள ராணிமார்களையும் பீகங்களையும் பார்ப்பதற்கு ஸந்தர்ப்பம் உண்டாயிற்று. அக்பாது ப்ரதம ராணியும், இளவாசரது தாயாருமாகிய ஜோத்பாய் சீமாட்டியைக் காணும் பாக்யம் அவனுக்குக் கிடைத்தது. அதன் பின்னர் இளவாசருடன் சென்று ஸாலிம் போற்றும் பாரஸீஹக் கட்டழகியைக் கண்டான். இதுவரைக்கும், அவனுக்கு ஒருவித கஷ்டமும் ஏற்படவில்லை. ஆனல் இப்பொழுதோ எதிர்ப்பாராத ஸங்கடங்கள் உண்டாகும் போலத் தோற்றியது. இளவாசருடைய த்ரோஹ சிந்தை, அவர் செய்திருந்த அந்தரங்க ஏற்பாடுகள், மிஹ்ருந்நிஸாவிடம் அவர் ஜபம் பலிக்காமற் போனது, கடைசியாக அப்பெண்மணி அவரை ஏளனஞ்செய்து அவருக்குப் புத்திமதி கூறியது எல்லாம் இப்போது நரேந்த்ரனுக்கு வெளிப்படையாய்த் தெரிந்துவிட்டன. இனி என்ன நடக்கப்போகிறதோ, எந்தெந்தக் கஷ்டங்களுக்கும் அபாயங்களுக்கும் தான் உட்படவேண்டுமோ, கடைசியில் தன்விதி எவ்வாறு முடியுமோ எனப் பலவிதமாய்ச் சிந்திக்கலானன் நரேந்த்ரன்.

இளவாசர் போய்விட்டார். ஜெலிகாவையும் அவளுடைய தோழியையும் உள்ளே வரும்படி பாரஸீஹப் பெண் கட்டளையிட்டாள். பெண்ணுடை தரித்து உடல்நடுங்கிக் கொண்டிருக்கும் நரேந்த்ரனை ஒருமுறை கவனமாய்ப் பார்த்தாள் மிஹ்ருந்நிஸா. நரேந்த்ரனுக்குத் தன் நடுக்கத்தை யடக்கிக்கொண்டு ஸரியாய் நிற்பது கஷ்டஸாத்யமாயிற்று; இதற்குள் அவனுக்கு ப்ராணன்போய் ப்ராணன் வந்தது. ஆனல் அவன் சற்றுக் கெல்லாம் கைகூப்பித் தலை குனிந்து, வணக்கமாய் நின்றுவிட்டான்.

வீர தீரம் படைத்த அம்மாது சிரோமணி நரேந்த்ரனைப் பார்த்து,

"ரண வீரரே, நீர் தரித்திருக்கும் ஸ்த்ரீயாடையைக் கழற்றிவிடும்; போர்வீரருக்கு ஏற்றவையல்ல இவ்வுடைகள். மேலும் இவ்வுடைகளைத் தரித்துக்கொள்வதனலேயே உமது முகத்தில் தோன்றும் ஆண்மகனுக்குரிய அடையாளங்கள் மறைந்துவிடுமா?"

நரேந்த்ரன் வெளியேபோய்த் தன் பூர்வாச்ரமத்துடன் திரும்பி வந்தான். மிஹ்ருந்நிஸா அவனைப் பார்த்து, "சக்ரவர்த்திபவர்களுடைய யுத்தத்தில் பலமாய்க் காயப்பட்டு ஸ்மரணையற்றிருக்கும் ஸ்திதியில், ஆக்ரா கொண்டு வரப்பட்ட வங்கதேசத்துச் சிற்றாசர் வம்சஸ்தர் அல்லவா இந்த யௌவன வீரர்?"

"ஆம், வங்க நாட்டைச் சேர்ந்தவர்தான் இவர்" எனப் பதில் சொன்னுள் ஜெலிகா.

"ராஜா தோடர்மாலை ஆப்கானியர்கள் பலமாய்த் தாக்கியபோது வங்கதேசாதிபதிகளுள் சக்ரவர்த்தி பக்கம் தனித்து நின்ற வீரசிகாமணியல்லவா இவருடைய பாட்டனர்?"

ஜெலிகா பதில் சொல்லவில்லை, அதைக் கண்டு நரேந்த்ரன், "ஹே, சீமாட்டி, ராஜஸைந்யத்துக்கு எங்களுடைய வம்சத்தார் என்ன ப்ரமாதமான உதவி செய்பக்கூடும்? ஏதோ தம்மாலானதைத் த்ரோஹமின்றி எனது பாட்டனர் சக்ரவர்த்திபவர்களுக்கு ஸமர்ப்பித்தார். அக்பர் அவர்களுக்குத் தம் ப்ராணனை அவர் அர்ப்பணம் செய்தார். அவ்வாறே ஏதோ என்னலாகக்கூடிய கிஞ்சித் ஸேவகம் அவருக்குச் செய்ய நானும் ஸித்தமாயிருக்கிறேன்."

"ஆக்ரா பாஷை இவருக்கு ஸரியாய்த் தெரியவில்லை யாயினும், நமது கேள்விகளுக்கு த்ருப்திகரமான பதில் அளிக்கிறார். ஜெலிகா இவர் முதன் முதல் இக்கோட்டைக்குள் எவ்வாறு ப்ரவேசித்தார், அந்த விவாத்தைச் சொல்."

"இவர் துப்பாக்கிக் காயத்தால் மாணவஸ்தையிலிருந்தார் ராஜா மான்ஸிங் அவர்கள் சக்ரவர்த்தியாரைப் பார்த்து இவரை ஆம்பர் அரண்மனைக்குள் விடும்படி உத்தரவு வாங்கிவந்தார். ராஜா அவர்களுடைய ஸஹோதரி, அதாவது, நமது திவ்ய சக்ரவர்த்தியாரின் ப்ரதம ராணியார் தமது அரண்மனை வைத்யர்களை

அனுப்பி நாதனற்ற இந்த வங்க தேசாதிபதியை ஜாக்ரதையாய்க் காப்பாற்றும்படி ஏற்பாடுசெய்தார்கள். எனது எஜமானியார் ஜோத்பாய்ச் சீமாட்டியாரும் அடிக்கடி இவருடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்" என்றாள் ஜெலிகா.

"இந்த யௌவன வீரர் நல்ல அதிர்ஷ்டசாலி. இல்லாவிட்டால் ஒப்புயர்வற்ற இவ்வரண்மனை ராணிமார்களுடைய தயையை எவர் ஸம்பாதிக்கக்கூடும்? சக்ரவர்த்தியவர்களுக்காகப் போர்புரிந்து தமது ப்ராணனை அபாயத்துக்குள்ளாக்கிய வீரர்களுக்கு ஸன்மானம் செய்வதில் ராஜபுத்ர ஸ்த்ரீகள் பின் வாங்குவதில்லை."

நரேந்த்ரன் தலைகுனிந்து ஸலாம் செய்தான்.

"ராணிமார்களுடைய தயை மாத்ரமேயன்றி இவருக்கு நல்ல சிச்ருஷையும் இருந்ததாமே? ஜோத்பாய் அவர்களுடைய தார்தாரி அடிமைப்பெண் ஒருத்தி வைத்யர்களைவிடப் பதின்மடங்கு அதிக கவலையும் அக்கறையும் எடுத்துக்கொண்டு இவருக்குப் பல விதத்திலும் சிச்ருஷை செய்துவந்தனளென நான் கேள்விப்பட்டேன் அது உண்மை தானா, ஜெலிகா?

ஜெலிகாவின் முகம் சிறிது சிவந்தது: ஆனால் அவள் முன்போலவே மர்யாதையாய்ப் பதில் மொழி கூறினாள்.

"தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. என்னுடைய எஜமானியவர்கள் கட்டளையின்படி நான் ப்ரதிஇரவும் அவரிருந்த அறைக்குச் சென்று அவருடைய தேஹஸ்திதியையறிந்துவந்து எனது எஜமானிக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தேன்."

"ஜெலிகா, சில தினங்கள் அரண்மனைக்குத் திரும்பிவா நேரமாயிருக்கலாம். அந்த யௌவன வீரபுருஷருக்கும் சில வேளைகளில் உன் சிச்ருஷை மிகவும் மனோஹரமாயிருந்திருக்கலாம். அதைப்பற்றியெல்லாம் பிறர் பன்னிப் பன்னிக் கேட்பது ந்யாயமாகாது."

மறுபடியும் ஜெலிகா முகம் சிவந்தது. ஆயினும் அவள் தன் நிலையையறிந்து மௌனமாயிருந்தாள். "பால்ய வீரரே, என் கணவனார் உம்மைப்பற்றி என்னிடம் பலமுறை கூறியிருக்கிறார். நீர் இக்கோட்டைக்குள் இருப்பதாகக் கேள்விப்பட்டு உம்மை ஸ்த்ரீயாடைதரித்து இவ்விடம், அதாவது ராணிமார்களின் பவனத்துக்கு அழைத்துவரும்படிச் சொன்னேன். ஜெலிகா ரொம்ப கெட்டிக்காரி; அதி ஸாஹஸமுடையவள். இக்கோட்டையிலுள்ளவர்கள் எவருக்கும், அவளுடைய சொந்த எஜமானிக்குக்கூடத், தெரியாமல் அவள் எவ்வளவோ பக்வமாய் உம்மை இங்கு அழைத்துவந்தாள். மஹா வீரசூரர்களும் நடுங்கும்படியான இத்தொழிலில் நீரும் எவ்வளவோ மனோதைர்யத்துடன் தலையிட்டுக்கொண்டீர். இவ்வாறு எத்தனையோ ஆபத்துகளையெல்லாம் லக்ஷ்யம் செய்யாமல் எனது வேண்டுகோளுக்கு நீர் இணங்கியதற்கு நான் வந்தனம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் வங்காளம் செல்லுகிறோம். அவ்விடம் முன் பின் அறியோம். அங்கே எங்களுக்கு ஒரு நண்பர்கூடக் கிடையாது. என் புருஷர் உமது ஸ்நேஹத்தை நம்பியிருக்கிறார். நானும் காலாகாலத்தில் உமது சௌர்யத்தை நம்பியிருக்கலாமோ?"

மிஹ்ருந்நிஸா மஹா தந்த்ரக்காரி; மிகுந்த வாசாலகமுடையவள். வார்த்தை ஸாமர்த்யத்தால் ஜன்ம விரோதியையும் வழிக்குக் கொண்டுவரும் சக்தியுடையவள்; அவளுடைய வாக்சாதுர்யத்தைக் கண்டு மயங்காதவர் வெகு சிலரே. நரேந்த்ரன் தலைவணங்கித் தன் கத்திப் பிடியை அவளிடம் கொடுத்தான். அவள் அக்கத்திப்பிடியைப் பிடிக்கும்போது, அவளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ,-அநேகமாய்த் தெரிந்தே என்று வைத்துக்கொள்ளலாம்,— அவளுடைய கை அவனுடைய கையை ஸ்பர்சித்தது. அந்த ஸ்பர்சமாத்ரத்தால் நரேந்த்ரனுடைய உடல் புளகாங்கித மெய்தியது; நரேந்த்ரனும் அந்தப் பெண்மணிக்குக் கீழ்ப்படிந்துவிட்டான்.

"என் புருஷர் பர்ட்வான் ப்ராந்த்யத்துக்கு ஜாகிர்தாராகச் செல்கின்றார். நண்பரே உமது ஊருக்கும் அதற்கும் எவ்வளவு தூரம்?"

"நான் என் துரிதமான படகில் ஆற்றுமார்க்கமாய் ஒரு தினத்துக்குள் சென்றிருக்கிறேன். நிலமார்க்கமாயும் பர்ட்வான் நகருக்கு ஒரு நாள் ப்ரயாணம்."

"உம்மைப்போன்ற யௌவன புருஷர்களுக்கு அது ஒரு தூரமில்லை. நீர் எப்போது வேண்டுமானாலும் எமது பர்ட்வான் அரண்மனைக்கு வந்து போய்க்கொண்டிருக்கலாம்."

"இந்த அநுமதியைவிடச் சிறந்த அநுமதி

வேறென்ன எனக்குக் கிடைக்கப்போகிறது? தாங்கள் கூறியபடியே நான் அடிக்கடி தங்களுடைய புருஷரைக் கண்டு செல்கிறேன்."

"கண்டு செல்வானேன்? நீரும் ஒரு சிற்றாசராயிற்று. என் புருஷரும் ஒரு சிற்றாசராயிற்று. இருவரும் ஸமான அந்தஸ்துடையவர்கள். உங்கள் தேசாசாரம் எப்படியோ எனக்குத் தெரியாது. உமது மனைவியும் உம்முடன் வந்தால் எனக்குப் பரம ஸந்தோஷம். நான் அவளை என் உடன்பிறந்தாளாகப் பாவிப்பேன்."

நரேந்த்ரனுடைய முகம் சிறிது விகாரமடைந்தது. அவனுக்குக் குரலெடுத்துப் பேச முடியவில்லை. ஹீனத்வனியில் "எனக்கு மனைவியொருத்தியுமில்லை. நான் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை" என்று விசாரத்துடன் சொன்னான்.

நரேந்த்ரனுடைய முகம் வெளுத்து விகாரமடைந்ததை மிஹ்ருந்நிஸா அறிந்துகொண்டாள். அவ்வாறு முகத்தோற்றம் மாறியதின் காரணம் அவளுக்குப் புலப்படவில்லை.

"வீரபுருஷரே, நான் அறியாமல் சொல்லிவிட்டேன். உமது வயதில் இந்நாட்டு புருஷர்களுக்கு விவாஹமாய் விடுகின்றதே. அதுவும் உமது மதத்தைச் சேர்ந்த அரசர்கள் தமது ராஜ்யத்தின் க்ஷேமத்துக்காகத் தமக்குப் புத்ர ஸந்தானம் உண்டாவதைப்பற்றி அதிக ஆவலுடையவர்களாயிற்றே. உமது விஷயத்தில் காலவித்யாஸத்தால் ஏதோ தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன போலும். இம்மொழிகளால் உமக்கு ஏதோ துக்கமான பூர்வஞாபகங்களெல்லாம் மனதுக்கு வருகின்றனவெனத் தோற்றுகிறது. இனி இவ்விஷயத்தைப்பற்றி நான் ப்ரஸ்தாபிப்பதில்லை."

நரேந்த்ரன் துக்காக்ராந்தனாய் "நான் சிறுவயதிலேயே போர்க்கோலம் பூண்டு வந்துவிட்டேன். அதுமுதல் நான் ஊருக்குப் போனதில்லை" என்றான்.

மிஹ்ருந்நிஸா நரேந்த்ரனுடைய மனோவேதனையை உணர்ந்தாள். இனி நாம் அவர் மனதைப் புண்படுத்தக்கூடாதென்று அவள் வார்த்தையை மாற்றினாள்.

---

# விசேஷக் குறிப்புகள்

## NEWS & NOTES

**நூதன இருப்புப்பாதைவண்டிகள்.**—கிழக்குவங்காள ஸ்டேட் இருப்புப்பாதையில் கொஞ்சகாலமாக நூதன வண்டித்தொடர் செல்லுகின்றது. அத்தொடரின் நீளம் 650 அடி, கனம் 361 டன்; அதை நிர்மாணிக்க ரூ. 2,45,000 பிடித்தது. மணிக்கு சராசரி 50 மைல் வேகம் ஒடும். முதல் வகுப்பில் 50-பெயர்களும், இரண்டாவதில் 63-பெயர்களும், இண்டர்மிடியட்டில் 104-பெயர்களும், மூன்றாவது வகுப்பில் 158-பெயர்களும் எறலாம். பலஹீனர்களுக்காக தகுந்த எற்பாடும், ஸ்நாநஞ்செய்வதற்குத் தனி அறைகளும், மற்றும் பல சௌகர்யங்களும் செய்யப்பட்டுள்ளனவாம்.

***

**புராதன ஜயின விக்ரஹங்கள்:**—ரீவா நாட்டிலுள்ள ரிங்கோட் ப்ரக்காஸ் என்னுமிடத்தில் ஒன்றின்மீதொன்றாய் அடுக்கப்பட்ட பல ஜயின விக்ரஹங்கள் அகப்பட்டன. பூஜைக்குரிய பாத்திரங்களும் அருகிலேயே யிருந்தனவாம். அந்தக் கிராமத்திலிருந்து கொண்டு கோயிற்பூஜைசெய்பவர்களுக்கு பலவித சாதனங்கள் கொடுப்பதாக துரைத்தனத்தார் கூறியிருக்கிறார்கள். அப்படிக் குடியிருப்பவர்களின் நிலங்களுக்குத் தீர்வையில்லை; அவ்விடத்திற்கு, இன்னம் கொஞ்சகாலத்தில் இருப்புப்பாதையும் போடப்படும். விக்ரஹங்கள் 600, 700 வருஷங்களாக அங்கிருந்திருக்க வேண்டுமென்று யூகிக்கப்படுகிறது.

***

**தொல்காப்பியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு:**—செந்தமிழ் நூல்களில் மிகப் பழமையான தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படி, தமிழபிமானியாகிய ம-ா-ா-ஸ்ரீ. பொன்னம்பலம் பிள்ளையவர்களை பரோடா அரசரான கைக்வார் அவர்கள் கேட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியுண்டாக்கும். நம் இராஜதானியிலும் லங்கைத்தீவிலுமுள்ள தமிழ்ப்பண்டிதர்கள் பலர் ம-ா-ா-ஸ்ரீ. பொன்னம்பலம் பிள்ளையவர்களுக்கு உதவிபுரிவதாக வாக்களித்தார்களாம். பரோடா அரசர், தமிழின்மீது அபிமானங்கொண்டிருப்பது, தமிழராகப் பிறந்து அதை வெறுக்கின்ற சிலருக்குப் புத்தி புகட்டுமென்பதற் கையமில்லை.

***

**பரோடா மஹாராஜா அவர்களின் நன்கொடை.**—போர்முனையிலே பிரிட்டிஷாரின் உபயோகத்திற்காக விமானங்கள்வாங்குவதற்கு பரோடாசமஸ்தான கெயிக்வார் 5 லக்ஷம் ரூபாய் நன்கொடை செய்ய, அக்கொடையை ராஜப்பிரதிநிதி அன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

122






காலஞ்சென்ற ஸர் ஹென்ரி காட்டன் கே. ஸி. எஸ். ஐ.